KALKI 30.1.2005 ரூ.6.00

கல்கி

கவிதை ஸ்பெஷல்!



ஒரு ஹைக்கூ சந்திப்பு!



'சந்திரமுகி'யில் எழுதாதது ஏன்?

–மனம் திறக்கிறார் வைரமுத்து


அசல் பட்டு, ஜரிகை சேலைகள் வாங்க!!
தமிழகத்தின் தலைசிறந்த பட்டு கூட்டுறவு சங்கம்..
ARIGNAR ANNA
CO-OP SILKS
KANCHEEPURAM PURE SILK SAREES
KANCHEEPURAM
அறிஞர் அண்ணா பட்டு கூட்டுறவு சங்கம்
498-499, காந்தி ரோடு, காஞ்சிபுரம்-1. Ph: 04112-229019, 222148.
கிளைகள்- சென்னை, மதுரை, திருச்சி, ஈரோடு, கோவை, சேலம் மற்றும் திருநெல்வேலி.

ஆசிரியர் பக்கம்

முன்பே எடுத்த முடிவு...

அன்புள்ள ஆசிரியருக்கு,

நான் கடந்த 40 வருடங்களாகத் தொடர்ந்து 'கல்கி' இதழைப் படித்து வருகிறவன். தில்லி, கல்கத்தா போன்ற ஊர்களில் இருந்தபோதுகூட, பல மைல்கள் சென்று உங்கள் பத்திரிகையை வாங்கிப் படித்தவன்...

- இப்படி ஆரம்பித்து கடிதம் எழுதியுள்ள ஆர்.சஞ்சீவி (சென்னை - 4), 'இந்த வாரம் முதல் கல்கி வாங்கப் போவதில்லை' என்று அக்கடிதத்தை 'ஆழ்ந்த வருத்தத்துடன்' முடித்திருக்கிறார்.

புழுதிவாக்கம் சுரேஷ், இன்னும் தொலைபேசியில் தொடர்பு கொண்ட வாசகர்கள் பலர்... யாவருக்கும் இதே வருத்தம். அவர்களுள் பலருக்கு இதே பிரதிக்ஞை (கல்கி வாங்கப்போவதில்லை என்று!)...

வருத்தத்துக்குக் காரணம்...?

'அனுராதா ரமணன் எழுதும் தொடர்கதையை கல்கி வெளியிடுகிறது' என்பதுதான்.

ஜயேந்திரர் கைது குறித்தும் அதைத் தொடர்ந்து நிகழ்ந்து வருபவை குறித்தும் கல்கி மிகுந்த பொறுப்புடனும் நடுநிலையுடனும் எழுதி வந்திருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், இந்த நிகழ்வுகளை வியாபார ரீதியான பரபரப்புக்கு உட்படுத்தாத ஒன்றிரண்டு பத்திரிகைகளுள் கல்கியும் ஒன்று.



அதே நடுநிலையுடன்தான அனுராதா ரமணனின் 'மாம் ஃப்ரம் இண்டியா' தொடரையும் இப்போது வெளியிட்டு வருகிறது கல்கி.

இந்தத் தொடரும் அதன் கருவும் கதாசிரியரால் பல மாதங்களுக்கு முன்னரே நம்மிடம் தெரிவிக்கப்பட்டன. அதனை வெளியிடுவது என்ற முடிவும், பல மாதங்களுக்கு முன்பே எடுக்கப்பட்டுவிட்டது. கதையின் தரமும் எழுத்தின் குதூகல அணுகுமுறையும், கல்கி வாசகர்கள் விரும்பக்கூடியவை என்ற அடிப்படையில் அமைந்த முடிவு அது.

ஜயேந்திரர் வழக்கு குறித்து நடுநிலையான கருத்துகளையும், விமர்சனங்களையும் வெளியிட்டு வருவதுபோல், அனுராதா ரமணன் இது விஷயமாக வெளியிட்ட குற்றச்சாட்டு குறித்தும், கல்கி நடுநிலை காத்தே விமர்சனம் செய்திருக்கிறது.

எதுவும் நிரூபணமாகாத நிலையில், ஜயேந்திரர் சங்கர மடத்தின் பீடாதிபதியாகத் தமது பணிகளைத் தொடர்கிறார். அதை அவரது அன்பர்களும், சங்கரமட பக்தர்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

அனுராதா ரமணனும் ஓர் எழுத்தாளர் என்கிற முறையில், தமது பணியை ஆற்றிக் கொண்டிருக்கிறார். அந்தப் பணியையும் ஏற்று, அங்கீகரித்து, அவருடைய எழுத்தை விமர்சனத்துக்கு உட்படுத்துவதுதான் நியாயம். கல்கி வாசகர்கள், இவ்வாறு அறிவுசார்ந்து சிந்திக்க வல்லவர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது.

வாழ்க்கையில் சுனாமியும் உண்டு. கடற்காற்றும் உண்டு. சுனாமியையே நினைத்துக் கொண்டிருந்தால் கடலலைகளின் அழகையும் கடற்காற்றின் தன்மையையும் அனுபவிக்கத் தவறிவிடுவோம்.

ஜெயலலிதா ஆட்சியில் ஐந்தாவது தடவையாக டி.ஜி.பி. மாற்றம் நடந்துள்ளது. புதிய டி.ஜி.பியாக பதவி ஏற்றிருக்கும் ஏ.எக்ஸ். அலெக்ஸாண்டர், ஐ.பி.எஸ். ஆனதன் பின்னணி சுவாரஸ்யம் மிகுந்தது.

திருச்சி செயின்ட் ஜோஸஃப் கல்லூரியில் படிப்பை முடித்த கையோடு, கல்லூரியின் முதல்வர் லாரன்ஸ் சுந்தரம் அலெக்சாண்டரைக் கூப்பிட்டு, ஆசிரியர் வேலை கொடுத்து விட்டார். அடுத்த சில தினங்களில், கல்லூரியின் லைப்ரரியில், அலெக்சாண்டரைப் பார்த்த லாரன்ஸ் சுந்தரம், "என்ன பண்ணிக் கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டபோது, "ஐ.ஏ.எஸ். பரீட்சைக்குப் படிக்க, புத்தகம் தேடிக் கொண்டிருக்கிறேன்" என்று சொன்னதும், "இரட்டைக் குதிரை சவாரி வேணாம். ஆசிரியர் வேலையை விட்டு விட்டு, முழுமையாய் ஐ.ஏ.எஸ். பரீட்சைக்குப் படி" என்று வாழ்த்தி அனுப்பி விட்டார். சென்னைக்கு வந்து, ஐ.ஏ.எஸ். பரீட்சைக்குப் பயிற்சி பெற்றார். பரீட்சை எழுதியவுடன், "ரிசல்ட் வருகிறவரை சும்மா இருக்க வேண்டாம்" என்று சொல்லி, லயோலா கல்லூரியில் ஆசிரியர் ஆக்கினார் அந்தப் பாதிரியார். ரிசல்ட் வந்தது. அகில இந்திய காவல் பணிக்குத் தேர்வு செய்யப்பட்டார் இந்த ராமநாதபுரத்துக்காரர்.

"நான் மூன்று நாள் குழந்தை!"



"மறைந்த டி.ஜி.பி. மோகன்தாஸ் தான் என் குரு. நான் இன்று இந்த நிலைமையில் இருக்கிறேன் என்றால், அதற்கு மோகன்தாஸ் அளித்த பயிற்சியும், வழிகாட்டுதலும் முக்கியக் காரணம்" என்று கூறும் அலெக்சாண்டரிடம், 'காவல் துறையின் இன்டலிஜென்ஸ் பிரிவு என்பது, ஆளும் அரசியல்வாதிகளுக்கு வேவு பார்த்துச் சொல்லும் பிரிவு ஆகிவிட்டது போல் தோன்றுகிறதே...?' என்றால், "அது முற்றிலும் தவறு. ஒற்று ஆய்வுப் பிரிவு மிகவும் ரகசியமாகச் செயல்பட வேண்டிய ஒன்று. அது தனது பணியை மிகச்சிறப்பாகவே செய்து வருகிறது. அது எப்படி எல்லாம் செயல்பட்டு வருகிறது, என்னவெல்லாம் செய்திருக்கிறது என்று விளக்கிச் சொல்வது, நிஜமான ஒற்று ஆய்வு பிரிவுக்காரருக்கு அழகில்லை" என்று பதில் வருகிறது.

அதிகம் பேசாத சுபாவம். ஆனால் விஷயத்தில் கெட்டி. எந்த விஷயம் என்றாலும், ஒற்றுப் பிரிவிலிருந்து

–புது டி.ஜி.பி.அலெக்ஸாண்டர்

கிடைக்கும் தகவல்களை, அலுவலகக் குறிப்பாக எழுதி, மேலிடத்துக்கு அனுப்பி வைத்து விடுவார். அதன் பிறகு அது குறித்து விவாதித்துக் கொண்டிருக்க மாட்டார். காக்கிச் சட்டை வட்டாரத்தில் விசாரித்தபோது, பல சுவாரஸ்யமான தகவல்கள் தெரியவந்தன.

எம்.ஜி.ஆர். ஆட்சியில், சட்டசபைத் தொடர் ஆரம்பிக்கும் முன்பு, எதிர்க்கட்சி எம்.எல்.ஏக்கள் யார் யார், எதைப் பற்றியெல்லாம் பிரச்னை கிளப்பப் போகிறார்கள் என்று ஒற்று ஆய்வுசெய்து, எம்.ஜி.ஆருக்கு முன் கூட்டியே தகவல் போய்விடும். அதற்கேற்ப எம்.ஜி.ஆர். தமது சமாளிப்பு வியூகத்தை அமைத்துக் கொள்வாராம்.

கலைஞர் கருணாநிதியின் வீட்டில் ஒருவரை வேலைக்குச் சேர்த்து, அவர் மூலம் கருணாநிதியின் நடவடிக்கைகளைத் தெரிந்து கொண்டு, எம்.ஜி.ஆருக்குச் சொன்னதாகக் கூட தகவலைச் சொல்கிறார்கள். தி.மு.கவிலிருந்து வைகோவைப் பிரித்ததில், அலெக்ஸாண்டருக்கு முக்கியப் பங்கு உண்டு என்றும், அ.தி.மு.க. தேர்தலில் படுதோல்வி கண்டு, மீண்டும் தி.மு.க. ஆட்சிக்கு வந்தபோது, முதல் தடவை அலெக்ஸாண்டரைச் சந்திக்கையில், கலைஞர் கேட்டது, வைகோ விவகாரம் பற்றித்தான் என்றும் கூட தகவல்கள் உண்டு.

புத்தகங்கள் படிப்பது என்பது சிறுவயதிலேயே அவருக்குள் ஊறிவிட்ட ஒரு பழக்கம். "சிறுவனாக இருந்தப்போ, குழந்தைகளுக்கான புத்தகங்கள் நிறைய வாங்கிக் கொடுப்பார் என் அப்பா. அப்போது ஆரம்பித்தது, இன்றும் தொடர்கிறது" என்கிறார். பெரிய புத்தகக் கடைகளிலிருந்து மட்டுமில்லாமல், மைலாப்பூரில் ஆழ்வாரின் பிளாட்பார புத்தகக் கடையிலும் இவர் நிறையப் புத்தகங்கள் வாங்குவதுண்டு.

சங்கரராமன் கொலை வழக்கு சம்பந்தமாக போலீஸ் நடந்துகொள்ளும் விதம், ரகசியமான தகவல்களின் கசிவு, வி.சி.டி. விநியோகம் போன்ற விஷயங்கள் குறித்து நாம் ஆரம்பிக்க, புது டி.ஜி.பி. சீரியஸ் ஆகிறார். "நான் எந்த விதமான சென்சேஷனிலும் சிக்கிக் கொள்ள விரும்பவில்லை" என்றவர், "நான் பொறுப்பேற்றுக் கொண்டு மூன்று நாட்களே ஆகின்றன நான் மூன்று நாள் குழந்தை. என்னை எழுந்து ஓடு என்று சொன்னால், என்ன செய்வது?" என்று சிரிக்கிறார்.

- எஸ். சந்திரமௌலி

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் :
கி. ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி

ஆசிரியர் குழு :
அனுராதா சேகர்
ஆர்.சி. ஜெயந்தன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22345622, 23, 24
தொலைநகல் :
044 - 22345621

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.330/-
ஆறு மாதம் : ரூ.165/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 62 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.2000/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு

கவிதைக்கு உலகளாவிய பல்கலைக்கழகம் அமைக்கப்பட வேண்டும் என்ற கருத்தை முதன்முதலாக முன்மொழிந்தவர் கவிப்பேரரசு வைரமுத்து. புலம்பெயர்ந்த தமிழர்களோடு பொங்கல் கொண்டாடித் திரும்பியிருந்தவரை கவிதைச் சிறப்பிதழுக்காகச் சந்தித்தோம்.

எது கவிதை?

"எது கவிதை இல்லை? பேனாவைக் கொண்டு மொழியில் பிடித்து வைக்கப்படுவது மட்டுமா கவிதை?

இந்த மண்ணில், மலைகளில், நதிகளில், வெளிகளில், மரஞ்செடி கொடிகளில், மனிதர்களில், பறவைகளில் விலங்குகளில், வாழ்வின் புன்னகையில், கண்ணீரில், ரத்தத்தில், கண்படு பொருள்களில், கண்காணா உறவுகளில், ஒவ்வொரு மைக்ரோ வினாடியின் அதிர்விலும் கவிதை உட்கிடையாகவோ, வெளிப்படையாகவோ படிந்தே கிடக்கிறது. கண்ணுள்ளவன் காணக்கடவன், செவி உள்ளவன் கேட்கக்கடவன்.

மேற்சொன்னவற்றின் நகல்களை அல்லது நிழல்களை, மொழி என்ற கூட்டுக்குள் அடைத்து வைக்கும் முயற்சியை மட்டும்தான் நீங்களும் நானும் கவிதை என்று கருதிக் கொண்டிருக்கிறோம். உலகக் கவிதைகள் என்று சொல்லப்படுவனவெல்லாம், இந்தப் பிரபஞ்சத்தின் முதல் எழுத்தை உச்சரிக்க உதடு கூட்டிய முயற்சி மட்டும்தான். கவிதை அல்லாததெல்லாம் கவிதை என்று நினைத்துக் கொண்டிருந்தேன். உணர்ச்சி மட்டுப்பட்டு, அறிவின் சமவெளியை அடைந்

இளையராஜாவுடன் இணைவதா?



இருக்கும் இந்த நடுத்தர வயதில், கவிதை அல்லாதது என்று எதுவும் இல்லை என்ற முடிவுக்கு வரவேண்டியவனாய் இருக்கிறேன்."

தமிழ்க் கவிதை எந்தக் கட்டத்தை எட்டியிருக்கிறது?

"சங்க இலக்கியத்திற்குப் பிறகு தமிழ்க் கவிதை தனித்து இயங்கவில்லை.

தமிழர்கள் மதமாற்றம் காணுமுன்பே தமிழ் மதமாற்றம் கண்டுவிட்டது.

மதங்களின் தாக்குதல், அந்நியர் படையெடுப்பு, வணிகத்தால் நேர்ந்த நிர்ப்பந்தப் பண்பாடு, அயலவர் ஆட்சி, அயல் மொழிகளின் தாக்கம் ஆகியவற்றால் அந்தந்தக் காலத்துக்கேற்ப தமிழ் வளைந்தும் நிமிர்ந்தும் வாழ்ந்து வருகிறது.

தமிழ்க் கவிதையின் ஒவ்வொரு காலகட்டத்துக்கும் ஒரு கருத்தியல் தலைமை தாங்கி வந்திருக்கிறது. இன்றைய சூழல் வெறுமையானது; உள்ளீடற்றது.

தலைமை தாங்கும் தத்துவங்கள் இல்லாததால், படைப்பாளிகள் குறைந்திருக்கிறார்கள்; கலைக் கல்வி மதிப்பிழந்து தொழில்நுட்பக் கல்வி ஓங்கியிருப்பதால், வாசகர்கள் குறைந்திருக்கிறார்கள்.



"உலகக் கவிதைகள் என்று சொல்லப்படுவனவெல்லாம், இந்தப் பிரபஞ்சத்தின் முதல் எழுத்தை உச்சரிக்க உதடு கூட்டிய முயற்சி மட்டும்தான்"

நுகர்வுக் கலாசாரத்தின் நுண்ணிய சிக்கல்களால் தரைக்குப் போக முடியாமலும், தண்ணீருக்கு மேலே வரமுடியாமலும் ஊடாடிக் கொண்டிருக்கும் பாசியைப் போல இருக்கிறது வாழ்க்கை.

வாழ்வு பற்றிய பார்வை ஒன்றாக இல்லாமல், ஐந்தாறு தளங்களில் இயங்குகின்றது. எனவே வாழ்வின் குழந்தையான கவிதையும், ஐந்தாறு தளங்களில் தவழ வேண்டியிருக்கிறது. எனவே குழுக்களும், குழு மனப்பான்மையும் தவிர்க்க இயலாதவையாகிவிட்டன."

கவிதை மொழிபெயர்க்கக் கூடியதா?

"மூலக்கவிதையே ஒரு மொழிபெயர்ப்புதான். வாழ்வின் மொழிபெயர்ப்பு அல்லது இயற்கையின் மொழிபெயர்ப்பு. ஆனால் ஒரு மொழியிலிருந்து இன்னொரு மொழிக்கு இடம் மாறுகிறபோது, கவிதை சில சிராய்ப்புகளைச் சந்திக்கவே செய்யும்; பல நேரங்களில் உறுப்பிழக்கவும், சில நேரங்களில் உயிரிழக்கவும் கூடும்.

– மனம் திறக்கிறார் வைரமுத்து

இருதய மாற்று சிகிச்சை அபாயகரமானது என்பதனால், இருதய மாற்று சிகிச்சையே கூடாது என்று கூறிவிட முடியுமா?

மொழிபெயர்ப்பு ஒன்றுதான் உலக இலக்கிய உறவுக்கு உன்னதமான ஒரே பாலம்.

என் படைப்புலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது. அதை எல்லோராலும் ஒப்புக்கொள்ள முடியாது.

உலகின் தலைசிறந்த இலக்கியங்களையெல்லாம் நான் மொழிபெயர்ப்பில்தான் வாசித்திருக்கிறேன்.

வலிக்க வலிக்க மொழிபெயர்த்த அந்தக் கரங்களையெல்லாம் வணங்குகிறேன்.

கவிதையை மொழிபெயர்ப்பதென்பது 'வானத்தின் நீலத்தைப் பிழிந்து வட்டிலில் இறக்குகிற கதை' என்பார் பேராசிரியர் சீனிவாச ராகவன்.

ஆனால், ஒரு மொழிபெயர்ப்பாளனின் பேனாவிலிருந்து இறங்குகிற ஒவ்வொரு மைச்சொட்டும், வானத்தின் நீலம் பிழிந்த துளிதான் என்று கருதிக் கொள்கிறேன்.

'பிந்து சிந்து கி ஓர்' என்ற தலைப்பில் என் கவிதைகளை இந்தியில் மொழிபெயர்த்திருக்கிறார்கள். அதன் வெளியீட்டு விழா டெல்லியில் நடந்தது. கவிஞர் குல்சார் என் கவிதைகளை மேடையில் வாசித்து, அவர் மயங்கி, சபையையும் மயங்க வைத்தபோது 'அம் மொழிபெயர்ப்பிலும் மூலம் பெரும்பாலும் வந்துவிட்டது போலும்' என்று மகிழ்ந்து போனேன்."

• வெள்ளை உள்ளம்



• அன்பு பாராட்ட...



தமிழ்க் கவிதைக்கும் சினிமாப் பாடலுக்குமான இடைவெளியைக் குறைக்க முடியுமா?

''குறைக்கவே முடியாது என்பது அவநம்பிக்கை; முற்றிலும் குறைக்க முடியும் என்பது மூடநம்பிக்கை. கதைச்சத்தும் கலைத்தன்மையும் மிகுந்திருக்கும் சூழல் இருந்தால், பாடலாசிரியன் கவிஞன் ஆவான்; ஜனரஞ்சகம் கால்பிடித்திழுக்கும்போது, கவிஞன் பாடலாசிரியன் ஆகிறான்.


தமிழ்த் திரைப்படங்களில் நூற்றுக்கணக்கான கவிதைகள் பட்டொளி வீசிப் பறந்திருக்கின்றன.

பாபநாசம் சிவன், பாவேந்தர் பாரதிதாசன், முத்தமிழறிஞர் கலைஞர், உடுமலை நாராயணகவி, சுரதா, மருதகாசி, பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், கவியரசு கண்ணதாசன், வாலி, மாயவநாதன், ஆலங்குடி சோமு, புலமைப்பித்தன், முத்துலிங்கம் முதலிய முத்திரைக் கவிஞர்கள் அத்தனை பேரும், பாடல்களுக்கு மத்தியில் கவிதைகளையும் உயர்த்திப் பிடித்திருக்கிறார்கள்.

பல காலகட்டங்களில் சினிமா வணிகப் பள்ளங்களில் விழுந்துவிடும்போது, கவிதை, மேட்டில் நின்று கதற மட்டுமே செய்கிறது.

ஆனால் சினிமாவை விட்டுத் துரத்தப்பட்டாலும், கவிதை சினிமாவை விடுவதாக இல்லை. மரம் அழிந்த வனத்தில்கூட, பட்ட கிளையில் அமர்ந்து பாட்டுப் பாடும் குயில் மாதிரி, சந்து கிடைக்கிற இடத்திலெல்லாம் கவிதை சிந்துபாடி நுழைந்து விடுகிறது.

அண்மையில் 'கனாக் கண்டேன்' படத்துக்கு ஒரு ஜனரஞ்சகமான பாட்டு வேண்டும்; இரவு விடுதியில் நடனக்காரி



என் உழைப்பில் பூத்த
அந்த மலரின்
வெண் சிரிப்பு
அந்தகாரத்தில் என்னை
மிதக்க வைக்கிறது

இதழொன்றாய்ப் பற்றி
முத்தமிடும் வேட்கையை
சிரமப்பட்டு
மூடி வைக்கிறேன்

பிரியத்துடன் உனக்கு
மலர் அளித்ததாய்
ஞாபகமில்லை
நீயும் என்னை அணுகியதுமில்லை

இப்போது தோன்றுகிறது
இந்தப் பூவை
உன் கூந்தலேற்ற

என் முன்பிருக்கும்
இந்தக் கம்பிகள்
அந்த சுதந்திரத்தை
எனக்குத் தருவதாயில்லை.

மு.மாறன்

பாடும் பாட்டு என்றார் ஒளிப்பதிவாளரும் இயக்குநருமான கே.வி. ஆனந்த்.

'சின்னப் பொண்ணு
சொன்னாக் கேளு
சிகரெட் எல்லாம்
தூக்கிப் போடு
என்ன வந்து பத்தவை
வா!'

என்று எழுதிக் கொடுத்தேன்.

கே.வி.ஆனந்த், வித்யாசாகர் அனைவருக்கும் ஆனந்தம். அந்தச் சூழலுக்கு இதுதான் பொருத்தம். ஆனால் கவிதைத் தேனெடுக்கத் துடிக்கும் இந்தப் பட்டாம்பூச்சி மனசு, பூக்களில் தேனெடுக்கவே துடிக்கிறது.

'மழை' என்றொரு படம். மழையில் சந்தித்துக் கொள்கிறார்கள் காதலர்கள். இருவரின் இறுக்கத்தைக் குறைத்து நெருக்கத்தை ஏற்படுத்துகிறது மழை. அங்கே எழுதினேன் இப்படி!

'மண்ணிலே மண்ணிலே
வந்து உடையுது வானம்
மழையிலே கரையுதே
ரெண்டு மனங்களின் தூரம்'

இப்படிக் கவிதையைத் தொட்டுக் கொள்ள அங்கங்கே வாய்ப்புக் கிடைக்கும் கவிஞனுக்கு. காத்திருந்து கவிதை செய்ய வேண்டும்."

உங்கள் படைப்புலகங்கள் பற்றிய பெரிய அங்கீகாரமாக, அறிவுலகத்தின் ஆய்வுக் கட்டுரைகள் அடங்கிய 'இலக்கியத்தடம்' வெளிவந்துவிட்டது. ஆனாலும் சில குழுக்கள் உங்களை ஒப்புக் கொள்ள மறுக்கிறார்களே...?

"அதுதான் சரி. எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்பட்டால் ஒன்று முடிந்துவிட்டது என்று பொருள். என் படைப்புலகம் இயங்கிக் கொண்டேயிருக்கிறது. அதை எல்லோராலும் ஒப்புக்கொள்ள முடியாது. என் விருப்பம் என்னவென்றால், எல்லோரும் ஒப்புக்கொள்ளக் கூடாது. எதிர்வினைகள் இருந்துகொண்டேயிருக்க வேண்டும்.

உங்கள் வினாவுக்கு ஓர் எதிர்வினாத் தொடுக்கிறேன். எல்லோரும் ஒப்புக் கொள்வதற்கு செய்யப்படுவதா இலக்கியம்? அல்லது என்னை ஒப்புக்கொள் என்று கெஞ்சுவதா இலக்கியம்?

என்னால் பார்க்கப்பட்ட உலகத்தை நான் பதிவு செய்கிறேன். இந்த உலகத்தை எல்லோரும் என் கண்களால் பார்க்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. என்னைப் பொறுத்தவரையில், ஒப்புக் கொள்வது அல்லது நிராகரிப்பது என்ற எந்த முன் முடிவோடும் ஒரு படைப்புக்குள் நுழைவது இல்லை. படைப்பாளியின் மனநிலை என்ன என்று புரிதல் மட்டுமே என் வேலை.

இன்னொன்று; சில நிரந்தர உண்மைகளைத் தவிர இந்த உலகத்தில் எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட தத்துவம் என்று எதுவும் இல்லை.

இந்த பூமி உருண்டை என்கிறோம்; அது தன்னைத்தானே சுற்றிக்கொண்டு சூரியனைச் சுற்றி வருகிறது என்றும் நம்புகிறோம். இன்னும் பல ஆதிவாசிகள் இதை ஒப்புக்கொள்ளவில்லை. அதனால் ஆதிவாசிகள் வெறுப்புக்குரியவர்கள் அல்லர்; நம் இரக்கத்திற்குரியவர்கள்."

இன்றைய இளம் பாடலாசிரியர்களில் யாருடைய பாடலை ரசித்திருக்கிறீர்கள்?

"எல்லோருக்குமே நல்ல வரிகள் என்று சில வரிகளைச் சொல்லலாம். ஓரிருவர் பெயர் சொன்னால் மற்றவர் முகம் வாடிவிடும். அங்கங்கே பல மின்னல்கள் கண் வெட்டுகின்றன. குறுக்கீடுகள் அதிகம் இல்லாமலிருந்தால் அவர்களின் முழு முகம் வெளிப்பட வாய்ப்பிருக்கிறது. விமர்சிக்கவோ, பாராட்டவோ இன்னும் சில ஆண்டுகள் தேவைப்படுகின்றன.


டயானா மாண்டவுடன் அவருக்கு நினைவுச் சின்னம் எழுப்ப வேண்டும் என்ற கோரிக்கை எழுந்த போது, அமெரிக்காவிலிருந்து கிஸ்ஸிங்கர் சொன்னார்... "யாராயிருந்தாலும் நினைவுச் சின்னம் எழுப்ப பத்தாண்டுகள் போகட்டும்". இறந்து போனவர்கள் மீண்டும் தேவைப்படுகிறார்களா என்று கண்டறிவதற்குப் பத்தாண்டுகள் தேவைப்படுகின்றன. இருக்கும் படைப்பாளிகளை மதிப்பிடுவதற்கும் கால அவகாசம் தேவைப்படுகிறது."

'சந்திரமுகி'யில் ஏன் நீங்கள் பாடல் எழுதவில்லை?

"'சந்திரமுகி'யின் தேவை வேறாக இருக்கலாம். ஆனால் ரஜினிக்கும் எனக்குமுள்ள நட்பு, பட உறவுகளையும் தாண்டிப் புனிதமானது."

மீண்டும் இளையராஜா - வைரமுத்து கூட்டணி அல்லது அவர் தம் புதல்வர்களுடன் பணிபுரிய வாய்ப்பிருக்கிறதா?

"இளையராஜாவோடு நான் பணியாற்றியது ஐந்து ஆண்டுகள்தான். அதன் பிறகு இருபது ஆண்டுகள் கரைந்தோடி விட்டன. இன்னும் இந்தக் கேள்வியை ஊடகங்கள் கேட்டுக் கொண்டேயிருப்பது இருவரும் உயிர்ப்போடு இருப்பதையே காட்டுகிறது. எங்களுக்குள் ஒரு பிரச்னையும் இல்லை. என் மீதான மதிப்பு அங்கே குன்றிமணி அளவு குறைகிறது என்று கருதியபோது நான் வெளியே வந்துவிட்டேன். ஆனால் செய்வது இன்னதென்றறியாமல் நானும் அவரைக் காயப்படுத்தியிருப்பேனோ என்று இப்போது கருதிப் பார்க்கிறேன். வருத்தத்துக்குப் பக்கத்தில், அவர் மீதான அன்பும் அக்கறையும் ஒருபோதும் குறைந்ததில்லை எனக்கு.



இடைக்காலத்தில் அவருக்கொரு பெருஞ் சிக்கல் நேர்ந்தபோது, அதற்கான தீர்வை ரஜினிகாந்த் அவர்கள் மூலமாகச் சொல்லியனுப்பினேன். அவர் மைந்தனின் திருமணத்துக்கும் சென்று வந்தேன். எல்லாம் அவர் மீது நான் கொண்ட நன்றியின் அடை

யாளம். இப்போது மனசு கனிந்திருக்கிறது; வாழ்வு நிறைந்திருக்கிறது. கோபம் குறைந்திருக்கிறது. இனிமேல் தொழில் ரீதியாக என்பதிருக்கட்டும் (இளையராஜாவோடு) நட்புரீதியாக அன்பு பாராட்ட வேண்டும் என்றே ஆசைப்படுகிறேன்."

ஏ.ஆர். ரஹ்மானோடு உங்கள் உறவு புதுப்பிக்கப்பட்டுவிட்டதா?

"அது பழையதாகவே இல்லையே! எனவே புதுப்பிக்கப்பட்டது என்ற பேச்சுக்கே இடமில்லை. கள்ளம் கபடமில்லாத வெள்ளை உள்ளப் பிள்ளை அவர். அவரோடு பணியாற்றுவதும் உரையாடுவதும் சுகம். எங்கள் கூட்டணியில் அடுத்து 'காட் ஃபாதர்' வரப் போகிறது; கலக்கும்."

'உலகக் கவிதைப் பல்கலைக்கழகம்' என்ற கருத்தை முன் வைத்தீர்கள்... ஏன் அந்தச் சிந்தனை வந்தது?

"கொஞ்சம் தேநீர் நிறைய வானம் கவிதைத் தொகுப்பின் முன்னுரையில் அது பற்றி விரிவாகப் பேசியிருக்கிறேன். 'தொழில்நுட்ப யுகத்தில் கவிதையின் இருப்பு' குறித்து என் கவலையைத் தெரிவித்திருக்கிறேன்.

பெருகிவரும் தொழில் நுட்பத்தாலும், அருகிவரும் மொழி உணர்வாலும் உலகம் முழுவதும் தானிருந்த பீடத்தைக் கவிதை இழந்து வருகிறது. உலகெங்குமுள்ள கவிஞர்களையும், கவிதைக் காதலர்களையும் இது கவலைப்பட வைத்திருக்கிறது.

வேளாண்மைக்கும், கால்நடைக்கும், தொழில்நுட்பத்திற்கும் பல்கலைக்கழகங்கள் கண்டது போல, கவிதைக்கென்று ஒரு தனிப் பல்கலைக்கழகம் காண வேண்டும். அது உலகக் கவிதைப் பல்கலைக்கழகம் என்று அழைக்கப்பட வேண்டும். உலகக் கவிதைகளின் தலைநகரமாக அது திகழ வேண்டும். உலகத்தின் அனைத்து மொழிக் கவிதைகளையும், மொழிபெயர்ப்புகளையும் ஒரு கூரையின் கீழ் ஒன்று சேர்க்க வேண்டும்; ஒரு மலைப் பிரதேசத்தில் பறவைகள் தாலாட்டும் பள்ளத்தாக்கில், இயற்கையின் மடியில் அந்தப் பல்கலைக்கழகம் அமைய வேண்டும்.

கவிதைகளுக்கும் மனித விழுமியங்களுக்குமிடையேயான மரபுத் தொடர்ச்சி அறுந்துவிடாமல் அது காப்பாற்ற வேண்டும். உலகக் கவிஞர்கள் ஒன்றுகூடி,



• புனிதமான நட்பு...

வாழ்வின் திசைகளைத் தீர்மானித்துக் கொடுக்க வேண்டும். நம் காலத்திலேயே இது நிறைவேறும் என்று கனவு காண்கிறேன். கனவு மெய்ப்பட வேண்டும்; படும்."

கள்ளிக்காட்டு இதிகாசவாசியா... திரைப்பாடல் ஆசிரியரா... கவிஞரா... எது நிஜமான வைரமுத்து?

"இந்த மூன்றிலுமே நானில்லை. படைப்பு என்று வருகிறபோது, அதில் கலையூட்டுவதற்கான செயற்கைத்தனம் வந்துவிடுகிறது. இயல்பாக இருக்கும்போது நான் நானாக இருக்கிறேன். அவசரங்களற்ற - ஒப்பனைகளற்ற - கடிகாரங்களின் கட்டுப்பாடற்ற சூழலில் என்னை நானாக உணர்கிறேன்.

கொடைக்கானல் அடிவாரத்தில், என் சின்னத் தோட்டத்தில், குழந்தையின் உள்ளங்கை போன்ற புல்வெளியில் விரிப்புகளேதுமற்ற தரையில், தென்னை மரத்தின் அடித்தண்டில் முதுகு சாய்த்துக் குயில் சத்தம் கேட்டு வானமளக்கும் நிமிடங்களில்தான், நானாக இருக்கிறேன்.

எனக்கு நானே நிறையப் பேசிக் கொள்வதாக தூரத்திலிருந்து பார்க்கும் தோட்டக்காரர் சொல்கிறார்.

அது ஒரு வகையான பைத்திய நிலையோ அல்லது அதுதான் நானோ?"

சந்திப்பு : **ஆர்.சி.ஜெயந்தன்**
அட்டை, பிரத்யேக படங்கள் : **ஸ்ரீஹரி**



உறவு சாய்ந்த நிலம்

– பிறைப்ரியன்

விடிந்ததும் திரும்புவேன்
எனது சிறைச் சாலைக்கு!
வன்மம் மனதில் கொண்டு
நள்ளிரவில்,
கரைந்து பறக்கும்
சில காகங்களின்
எதிர்பாராத விழிகள் மட்டும்
அகல மறுக்கின்றன
மீளா உலகில்
அமைதி காண!

பாதங்களின் உராய்வுகளில்
வலசை போகும் பறவைகள்போல்
வெறிச்சோடிக் கிடக்கும்
காற்றின் முகவரி!

இறப்புக்குத்தப்பி .
மலைமுகட்டில்
காத்திருக்கிறேன்
மழை இரவுகளுக்கென!

கவிதை ஒரு பத்தினி!

மேலே இருக்கும் அருமையான கவிதைக்கு 'மரபுக் கவிதை' பிரியரான கிரேஸி மோகனின் விமர்சனம் இதோ!

"என்னைப் பொறுத்த வரை, கவிதை ஒரு பத்தினி, இலக்கணம் என்பது கற்பு, எதுகை, மோனையெல்லாம் அணிகலன்கள், சந்தம் என்பது ஆடை. கம்பன், வள்ளுவன், பாரதி போன்ற 'மரபு' வழி வந்தது கவிதை! ஹைக்கூன்னா அது 'மாற்றான் தோட்டத்து மல்லிகை!' ஆனா கவிஞர் பிறைப்ரியனோட இந்தக் கவிதை, பொம்பளை வேஷம் போட்ட ஆம்பளை மாதிரி தெரியுது! 'சிறை, காக்கா, வலசை'ன்னு, சம்பந்தமேயில்லாத இம்சையா இருக்குது. 'கவிதைக்கு பொய் அழகு'ன்னாரு வைரமுத்து. இந்தக் கவிதை ஒரு அழகான பொய் மாதிரி இருக்கு!



(இக்கவிதையைப் பற்றிய ஒரு இரகசியத்தைத் தெரிந்துகொள்ள 95ம் பக்கம் வாங்க.)



உ

குருநாதர் சரணம்

'சில்க்காட்டன் என்றாலே ப்ரசாந்தி'

இப்பொழுது பெங்களூரில்!!

ப்ரசாந்தியின் கோலாகலமான திறப்பு விழா!



பெங்களூர்
வாடிக்கையாளர்களின்
விருப்பத்திற்கு இணங்க
எங்களது
'PRASHANTI'S PARIPURNA'
பெங்களூர் மல்லேஸ்வரத்தில்
30ந் தேதி, ஜனவரி 2005
அன்று துவங்க உள்ளது
என்பதை மகிழ்ச்சியுடன்
தெரிவித்துக் கொள்கிறோம்.



பட்டுடன் போட்டியிடும் சில்க் காட்டன் இப்போது அனைத்து தலைமுறையினரையும் கவரத் தொடங்கியுள்ளது. எந்தக் கல்யாணங்களிலும் விசேஷங்களிலும் இப்போது ப்ரசாந்தியின் சில்க் காட்டன் புடவைகளே!!

'தரம், நியாயமான விலை, புதுப்புது வண்ணங்கள், கண்கவர் டிசைன்கள்'- ப்ரசாந்தியின் தனிச் சிறப்பு!!!

சொந்தத் தறியில் நெய்வதால் கல்யாணம் மற்றும் விசேஷங்களுக்கும் **Bulk orders** செய்து கொடுப்பது ப்ரசாந்திக்கு எளிதாகிறது.

உங்களுக்காக ப்ரசாந்தியின் ப்ரத்யேக படைப்புகள் இதோ:-

விவாஹம் Collections

கண்ணைக் கவரும் வகையில் கல்யாணங்களில் உடுத்துவதற்கு ஏற்ற பாரம்பரிய டிசைன்களான வைர ஊசி, டிஷ்யூ, ஜரிகைக் கட்டம், கோர்வை, **Rich pallu** மற்றும் பல. இது தவிர 10 கஜங்களும் உண்டு.

வைபோகம் Collections

வளைகாப்பு, சீமந்தம், **Valentinesday** போன்ற எல்லா வைபவங்களுக்கும் **Simple zari, Thread work** என பல ரகங்களிலும், **office wear**-கு ஏற்ப **embroidery, Block Printed - "Sarees and Salwars"**ம் உண்டு. இளைய தலைமுறையினருக்காக **Pallu rich Sarees...** என பலப் பல ரகங்களில் அறிமுகம்...

நித்யம் Collections

தினமும் உடுத்துவதற்கு உகந்த மிக மெல்லிய **Light weight** பாலி காட்டன் புடைவைகள், **mercirised cotton,** ஆரணி, மங்களகிரி மற்றும் **fancy sarees and salwars** உங்களுக்காக...

PRASHANTI


No.16, 6th Cross St, C.I.T. Colony,
Mylapore, (Near Chettiar Hall, T.T.K. Road)
Chennai - 4.
PH: 2499 1850, 2499 7636
Timing:10 am to 7 pm. Sunday Holiday.

PRASHANTI'S PARIPURNA

No.52, 4th Main Road, 17th Cross,
Malleswaram, Bangalore - 560 055.
Cell: 98861 - 85951
Timing:10 am to 7 pm. Tuesday Holiday.

Email: prashanti_sarees@yahoo.co.in

Master & Visa cards Accepted.



அரசியல் விபத்து!


பீஹார் தேர்தல் பிரசாரத்தில் நீதிபதி பானர்ஜியின் அறிக்கையைப் பயன்படுத்த ஆரம்பித்து விட்டார் லல்லு பிரசாத் யாதவ். 'கோத்ரா ரயில் எரிப்புச் சம்பவம் ஒரு விபத்துதான்; சதி அல்ல' என்று அதிரடியாகக் கூறும் அந்த அறிக்கையை, முஸ்லிம் வோட்டுகளைப் பெறுவதற்காகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்!

நீதிபதி பானர்ஜியின் இடைக்கால அறிக்கை, பீஹார், ஜார்கண்ட் மாநிலத் தேர்தல்களையொட்டி வெளியிடப்பட்டிருப்பதை எதிர்க்கட்சிகள் விமர்சிக்கின்றன. 'இது வேண்டுமென்றே செய்யப்பட்டிருக்கிறது. தேர்தல் பிரசாரத்தில் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதற்காக, அறிக்கையின் முடிவும், அது வெளியிடப்படும் நேரமும் முன்கூட்டியே திட்டமிடப்பட்டுள்ளன' என்கின்றனர் எதிர்க்கட்சியினர். இந்தக் குற்றச்சாட்டு நம்பும்படியாக இல்லை. ஏனெனில், பானர்ஜி விசாரணை கமிஷன் அமைத்தபோது, அதன் முடிவுகளைக் கூற ஓராண்டு அவகாசம் அளிக்கப்பட்டது. ஓராண்டு காலம் போதாது என்று விசாரணையினூடே உணர்ந்த நீதிபதி பானர்ஜி, கமிஷனுக்குக் கால நீட்டிப்புக் கோரினார். அந்த நீட்டிப்பு வழங்கப்பட்டபோதே, ஜனவரி 15, 2005க்கு முன் ஓர் இடைக்கால அறிக்கை வழங்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையும் விதிக்கப்பட்டது. தேர்தல் தேதி முடிவாகும் முன்னரே இந்த நிபந்தனை விதிக்கப்பட்டதால், தேர்தலையொட்டி வேண்டுமென்றே இவ்வறிக்கை வெளியிடப்பட்டிருப்பதாகக் கூறப்படுவது சரியில்லை.

நீதிபதி பானர்ஜியின் இடைக்கால அறிக்கை, ஆச்சர்யம்




கல்கி



2005 ஜனவரி 30
தாரண தை 17
மலர் : 63
இதழ் : 27

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



அளிப்பதாக உள்ளது. இந்தச் சம்பவம், நாம் இத்தனை நாட்களாக நம்பியதுபோல் சதியே அல்ல; விபத்துதான் என்று சொல்வதுடன், 'விபத்தாக இருக்கக்கூடும் என்ற கோணத்தில் கோத்ரா நிகழ்வை அணுகி, ரயில்வே துறை புலனாய்வு நடத்தவே இல்லை. இந்த முக்கியப் பொறுப்பில் ரயில்வே துறை தவறிவிட்டது' என்கிறார் நீதிபதி. அதற்கான சான்றுகளையும் வெளிப்படுத்துகிறார்!

இதற்கு முன், இச் சம்பவம் சதிச் செயல் என்று தீர்மானித்துக் கூறிய குஜராத் (பா.ஜ.க) அரசும், தனது தரப்புக்கான சான்றுகளை வழங்கத் தவறவில்லை!


உண்மையில் நடந்தது என்ன என்பது, பிப்ரவரி 27, 2002 அன்று சபர்மதி எக்ஸ்பிரஸின் எஸ் - 6 பெட்டியில் சிக்கித் தீக்கிரையான 59 பயணிகளுக்காவது உறுதியாகத் தெரிந்திருக்குமா என்பதுகூட சந்தேகம்தான்.

ஆனால், கோத்ரா கோர சம்பவத்தைத் தொடர்ந்து, குஜராத்தில் ஹிந்து மத அடிப்படைவாதிகள் வெறியாட்டம் போட்டதும், முஸ்லிம் மக்கள் இந்த கோர கிருத்யத்தில் திட்டமிட்டு பலியிடப்பட்டதும், நரேந்திரமோடி தலைமையிலான அரசும், அதன் கட்டுப்பாட்டிலிருந்த காவல் துறையும் இதை வேடிக்கை பார்த்ததும், இதற்குத் துணை நின்றதும் நிரூபிக்கப்பட்ட நிகழ்வுகள்.

இன்னமும்கூட, குஜராத் கலவரத்தையொட்டி எழுந்த பெஸ்ட் பேக்கரி வழக்கில், சாட்சிகள் மிரட்டப்படுவதும், பல்டி அடிப்பதும், பின்வாங்குவதற்காகத் தங்களுக்குப் பணம் தரப்பட்டதாக சாட்சிகள் கூறுவதும் நடந்து வருகின்றன.

கோத்ரா சம்பவம் திட்டமிட்ட சதி என்றே ஒரு வாதத்துக்காக வைத்துக் கொண்டாலும், அதன் பிறகு நடந்த சம்பவங்களை நியாயப்படுத்த முடியாது. ஆனால், முன்னாள் பிரதமர் வாஜ்பாய் உட்பட, அத்தனை பா.ஜ.க தலைவர்களும் அதை நியாயப்படுத்தினார்கள்; இப்போதும் நியாயப்படுத்தி வருகிறார்கள்! இந்த நிகழ்வையே வோட்டுப் பெறும் ஆயுதமாகப் பயன்படுத்திப் பெரும்பாலான இடங்களில் தோற்றுப் போனார்கள்.

இப்போது பா.ஜ.க அல்லாத கட்சிகள், பானர்ஜி அறிக்கையைப் பயன்படுத்தி, அதே



தவறை இழைக்கின்றன. மத அடிப்படைவாதத்தைத் தூண்டும் அபாயகரமான அரசியல் விளையாட்டில் ஈடுபட்டுள்ளன.

அரசியல் கட்சிகளின் இந்த பொறுப்பற்ற பிரசார விளையாட்டினாலும், அரசியல்வாதிகளின் வடிகட்டிய சுயநலத்தினாலும் இந்தியாவில் இயல்பாகவும் இடரின்றியும் வளர வேண்டிய ஹிந்து - முஸ்லிம் ஒருமைப்பாடு, தினம் தினம் புதிய சவால்களைச் சந்திக்கிறது.

பரஸ்பர மதிப்புடன் வளர்ந்து வந்த இருவித நம்பிக்கைகளை, பிரிட்டிஷாரின் பிரித்தாளும் சூழ்ச்சி கெடுத்தது. அடிமை இந்தியாவில் நடந்த அதே பிரித்தாளும் சூழ்ச்சியை, இன்று சுதந்திர இந்தியாவில், மக்களின் ஆதரவு பெற்ற அரசியல்வாதிகள் நிகழ்த்தி வருகிறார்கள்.

கோத்ரா சம்பவம் சதி அல்ல என்று நீதிபதி பானர்ஜியின் இடைக்கால அறிக்கை சொல்வதை ஏற்பது ஆறுதல் தரலாம். ஆனால், பா.ஜ.க ஆட்சிக் காலத்தில் இப்படியொரு கமிஷன் அமைக்கப்பட்டிருந்தால், அதன் அறிக்கை முற்றிலும் மாறாக இருந்திருக்கக் கூடும் என்பதையும் நாம் ஏற்கத்தான் வேண்டியிருக்கிறது.

இந்தச் சூழ்நிலையில் முன்னாள் ரயில்வே அமைச்சர் நிதீஷ்குமார் விடுத்துள்ள வேண்டுகோள் சற்று ஆறுதல் தருகிறது. "நீதிபதி பானர்ஜியின் இறுதி அறிக்கை அல்ல இது; இடைக்கால அறிக்கைதான். தேர்தல் பிரசாரத்துக்கான ஆயுதமாக இதனைப் பயன்படுத்துவதற்குத் தடை விதிக்கப்பட வேண்டும்" என்கிறார் நிதீஷ்குமார்.

தேர்தல் கமிஷனோ, நீதிமன்றமோ இத்தகைய தடையை விதிப்பதில் சட்டச் சிக்கல்கள் இருக்கலாம். ஆனால், அரசியல் கட்சிகள் ஒரு மனதாகச் சுயக்கட்டுப்பாட்டுடன் இந்த அறிக்கையைக் குறித்தும், கோத்ரா நிகழ்வு குறித்தும், அதன் பிறகு நடந்த வெறியாட்டங்கள் பற்றியும் தேர்தல் பிரசாரத்தில் பேசாமல் இருப்பது என்று முடிவெடுத்து, நடைமுறைப்படுத்தலாம்.

மனம் இருந்தால் மார்க்கம் உண்டு. இங்கே மார்க்கம் 'மதநல்லிணக்கம்' என்ற பெயர் தாங்கிய ராஜபாட்டையாக விரிந்து கிடக்கிறது. அந்த வழியில் செல்ல அரசியல்வாதிகளுக்குத்தான் மனமில்லை!



• Double Filtration Plasma pheresis முறையில் சிகிச்சை தருகிறார் ரவிச்சந்திரன்...

தானம் பெறும் முன்...

நெருங்கிய உறவினருக்கு சிறுநீரகங்களில் ஒன்றை தானமாகத் தர முன் வருபவர், அதைப் பெறுபவர் உட்பட பலரும் தெரிந்துகொள்ள வேண்டிய புதிய சிகிச்சை 'இம்யூன் ரீகண்டிஷனிங்' . "நிலத்தைப் பதப் படுத்திய பின்னரே நடவு செய்கிறோம். அப்போதுதான் பயிர் செழித்து வளரும். அதைப் போலவே சிறுநீரக டிரான்ஸ்பிளாண்ட் செய்யும் முன்னர், உடலின் எதிர்ப்புச் சக்தியைக் கட்டுப்படுத்தி, உடலைத் தயார் செய்வதுதான் இம்யூன் ரீகண்டிஷனிங். இந்த முன் தயாரிப்பு சிகிச்சையால், புதிதாகப் பொருத்திக் கொண்ட சிறுநீரகத்தின் தோல்வியை தொண்ணூறு சதவிகிதம் தவிர்த்து விடலாம்" என்கிறார் சிறுநீரகவியல் சிறப்பு மருத்துவர் டாக்டர் பி. ரவிச்சந்திரன்.


இந்தியாவில் ஆண்டுதோறும் ஆறாயிரம் சிறுநீரக டிரான்ஸ்பிளாண்ட் அறுவை சிகிச்சைகள் செய்யப்படுகின்றன. இவற்றில் பத்து முதல் இருபது சதவிகித சிறுநீரகங்கள், ஓராண்டுக்குள் செயலிழந்து விடுகின்றன. அறுபது சதவிகித சிறுநீரகங்கள் ஐந்தாண்டுகள் வரை மட்டும் செயலாற்றுகின்றன. இந்த வகையில் தானமாகப் பெறும் சிறுநீரகங்களில், சுமார் ஆயிரத்து எண்ணூறு சிறுநீரகங்களை ஆண்டுதோறும் வீணாக்கி வருகிறோம். ஏன் இந்த நிலை?

"உறுப்புதானம் என்பது இரத்த தானத்திலிருந்து முற்றிலும் வேறுபட்ட ஒன்று. ஓர் இரத்த வகை மூப்பதில் ஒருவருக்குப் பொருந்திவிடும். ஆனால் தசையால் ஆன உறுப்பின் திசு வகையோ ஐயாயிரத்தில் ஒருவருக்குத்தான் பொருந்தும். காரணம், ஏ,பி,சி,டி மற்றும் டிஆர் ஆகிய ஐந்து பிரதான திசு வகைக்கு, ஆயிரக்கணக்கில் துணைத் திசு வகைகள் உள்ளன. இவற்றில் ஒரு 'எண்' மாறினாலும், தானமாகப் பெற்ற உறுப்பை, உடலின் எதிர்ப்பு சக்தி நிராகரித்து விடும். இதனால்தான் டிரான்ஸ்பிளாண்ட் செய்யப்பட்ட சிறுநீரகங்கள் அதிக அளவில் செயலிழந்து விடுகின்றன" என்று கூறும் டாக்டர் ரவிச்சந்திரன், இம்யூன் ரீகண்டிஷனிங் சிகிச்சை மேற்கொள்ளப்படும் விதம் குறித்தும் நம்மிடம் விவரித்தார்.

"இம்யூன் ரீகண்டிஷனிங் சிகிச்சையில் இரத்தத்தில் எதிர்ப்பு சக்தியை உற்பத்தி செய்யும் 'பி' லிம்போசைட்ஸ் அணுக்களை அதிநுண்ணிய மெமரன்ஸ் இரட்டை வடிகட்டிகள் மூலம் டயாலிசிஸ் முறையில் முற்றிலுமாகப் பிரித்து எடுத்த (Double Filtration Plasma pheresis) பின்னர், சிறுநீரக உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையை வெற்றிகரமாகச் செய்து முடிக்கிறோம்.

பொருந்தாத திசு வகை கொண்ட சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைக்கு மட்டும் ஜப்பானியர்கள் கையாண்டு வந்த இச்சிகிச்சையை, உள்நாட்டு தொழில்நுட்பத்துடன், நாங்களே வடிவமைத்த மெமரன்ஸ் மூலம், பொருந்தும் திசு வகை கொண்டவர்களுக்கும் கடந்த பத்தாண்டுகளாக சிகிச்சை அளித்ததில், சிறுநீரகங்கள் பத்தாண்டுகளைத் தாண்டி சிறப்பாகச் செயலாற்றி வருவதைக் கண்டறிந்தோம். எங்களது கண்டுபிடிப்பை 'வேல்டு இம்யூனோ சப்ரஷன் காங்கிரஸ் 2004 கலிஃபோர்னியா' வரவேற்றுள்ளது" என்கிறார் ரவிச்சந்திரன்

- ஸ்ரீசக்கரம்



விடையாற்றி

மாதுரி

விடை கொடுப்பது
துன்பமில்லை -

செல்வது மீள்வதற்கென்று
சத்தியமாய்த் தெரியும்போது
வலசை போகும் பறவைகள்போல்
உலகின் மறுபுறம் மற்றொரு
வாழ்வைத் துய்க்க
சிறகு விரிக்கும்போது
உதிப்பதற்கென்றே சூரியன்
மலைமுகட்டில் நழுவும்போது

விடை கொடுப்பது துன்பமில்லை
மீள வாய்ப்பில்லையென
நிச்சயமாய் நம்பும்போதும்
பள்ளி செல்லும் மகிழ்வோடு
பிள்ளைகள் திரவியம் தேடப்
பிற தேசம் நோக்கிப் பறக்கும்போது
தோழனை
திருமண பந்தத்துக்குத்
தாரை வார்த்து
தனித்து நிற்கும்போது

விடை கொடுப்பது சாத்தியமே
மீளா உலகில் அமைதி காண
அன்பானவர் இறுதிப் பயணம்
செல்லும்போது
இளமை
காதோர நரைகளால் களவாடப்படும்போது

விடை கொடுப்பது எப்படி?
எனக்குள் நானே கலைந்துபோய்
இல்லை என்றாகும்போது...?

விடையாற்றிச் சப்பரம் விரைந்த பின்
மிதிபட்டுக் கிடக்கும்
சாலையோர ஒற்றை மலரென தேகம் சிதற
மணம் மட்டும் வீசுகிறது
அகத்தின் ஏளனப் புன்னகையாய்.

பிடரி

கவிஞர் எழுதும் கதை – 1

யூகலிப்டஸ் மரத்தின் இலைகள் தலையைத் தொங்க விட்டபடியே அசைந்து கொண்டிருந்தன. நீரே இல்லாமல் கிடந்த வட்ட வடிவ நீர் நிலை, சமீபத்திய மழையில் செழிப்புற்று குளம் போலக் காட்சியளித்தது. அந்த மாலை வெயில் நேரத்திலும் கூச்சலிட்டபடி சிறுவர்கள் ஓடி விளையாடிக் கொண்டிருந்தனர்.

தன்னைத் தவிர எல்லோருமே இயல்பாக இருப்பது போல் தோன்றியது சிதம்பரத்துக்கு.

சிவசுப்பிரமணியன் இப்போது என்ன செய்து கொண்டிருப்பான்? தன்னைத் தேடிக் கொண்டிருப்பானா? அறையை விட்டு வந்து ஆறு மணி நேரம் ஆயிற்று. தேட வாய்ப்பில்லை. அப்படியே இருந்தாலும், இந்தப் பூங்காதான் தங்களது சரணாலயம் என்று சிவசுவுக்குத் தெரியாதா? நேற்றுவரை அவனும் இங்கே அடைக்கலமாயிருந்தவன் தானே...?

சிவசு உற்சாகத்தில் கொப்பளித்துக் கொண்டிருக்க வேண்டும். வெளிக்காட்டாவிட்டாலும் உள்ளூர அதுதான் நடந்து கொண்டிருக்க வேண்டும். காலை முதல் அஞ்சலில் வந்த கடிதத்தை அவன்தான் முதலில் பிரித்தான். இவனுக்கும் அதேமாதிரி ஒரு கடிதம் வந்திருந்தது.

"டேய் சிதம்பரம்... கையைக் கொடுடா... நம்ம கஷ்டமெல்லாம் தீர்ந்தது" என்று இவனை அப்படியே அள்ளி வாரிக்கொண்டு சுற்றினான். கொஞ்ச நேரத்துக்குப் பிறகுதான் சிவசுவுக்கு உறைத்தது, சிதம்பரத்துக்கும் அஞ்சல் வந்திருக்கிறதென்பது. செய்தியைப் படித்துவிட்டு சிதம்பரத்துக்கு உண்மையிலேயே அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை.

"மானேஜர் வேலை, ஏழாயிரம் ப்ளஸ் படி எல்லாம் சேர்ந்து தூக்கிரும். உடனே சேரச் சொல்றாங்க, ஒரிஜினலையெல்லாம் கொண்டு வரச் சொல்லியிருக்காங்க..." என்று அவன் கூறிய செய்தி அனைத்தும் சிதம்பரத்தின் காதுகளுக்குள் இறங்கி முடிந்திருந்தது. அதற்கு ஊடாகவே மௌனமாகத் தன் கடிதத்தைப் படித்து முடித்திருந்தான். அதே நிறுவனம், ஆனால் அட்டெண்டர் வேலை...!

ஒரே அறையில் தங்கி, அரைச் சாப்பாடும், கால் சாப்பாடுமாக மூன்று வருடங்கள் துன்பப்பட்டுவிட்டு, இப்போது ஒரே நிறுவனத்தில் ஒருவன் மேனேஜர், இன்னொருவன் எடுபிடி....!

"என்னது... இருந்திருந்து இப்படி வந்திருக்கு... நீ எப்ப அந்த கம்பெனிக்கு இன்டர்வியூவுக்குப் போன?" என்றான் சிவசு.

தாமரை

இரண்டு பேருமே எம்.ஏ. (பொருளாதாரம்). கிட்டத்தட்ட எல்லா வேலைக்கும் ஒன்றாகவே விண்ணப்பித்துக் கொண்டிருந்தார்கள். இந்த வேலை எப்படியோ விட்டுப் போயிற்று. அந்தச் சமயம் சிதம்பரம், அம்மா உடல்நிலைக்காக ஊருக்குப் போக வேண்டியிருந்தது. திரும்ப வந்தபோது இந்த மேலாளர் வேலைக்கான காலக்கெடு முடிந்திருந்தது. கெடு முடிந்து போன ஒரு நிறுவனத்தின் வேலைக்கு, வேறு எந்த வேலை காலியாக



இருந்தாலும் வரட்டும் என்று 'இதர வேலைகள்' என்ற இடத்தில் 'டிக்' அடித்து ஒரு விண்ணப்பத்தைப் போட்டு வைத்தான். அதுதான் இப்படி விடிந்திருக்கிறது...

இனி சிவசு மணியடித்தால் கோப்பைத் தூக்கிக் கொண்டு அவன் அறைக்குள் ஓட வேண்டும் என்ற நினைப்பே நரகமாயிருந்தது...

'இந்த வேலை எனக்கு வேணாம். உன்னை அட்டெண்டர் ஆக்கி அப்புறமென்ன எனக்கு மானேஜர் உத்தியோகம்?' என்று சொல்லிவிட மாட்டானா என்ற நப்பாசை தோன்றிக் கொண்டிருந்தது.

சிவசுவிடம் எதுவும் சொல்லாமல் வெளியேறி வந்து விட்டான். மதியச் சாப்பாடு கடந்து போய்விட்டது.

என்ன வேண்டுமானாலும் நடக்கட்டும், இந்த வேலை வேண்டாம் என்று காலையில் முடிவு செய்தபோது, சிறிய கூண்டுக்குள் ஒரு சிங்கம் உலவும் காட்சி வந்து போனது மனதுக்குள். வறுமை என்றால் தன்மானத்தை இழக்க வேண்டுமா? அதற்கு செத்துவிடலாம்.

நேரம் ஆக ஆக, சுரத்துக் குறைந்து சொந்த ஊர், இருமிச்சாகும் அம்மா, கல்யாணமாகாத அக்காக்கள் இருவர், படிக்கும் தம்பி எல்லாம் கண்முன்னே விரிந்து, சிங்கத்தின் பிடரி மயிரை ஒவ்வொன்றாகப் பிடுங்கிப் போட்டுக் கொண்டிருந்தனர்.

பசி வயிற்றைக் கிள்ளியது. இருட்ட ஆரம்பித்தது. பிறகு விளக்குகள் போடப்பட்டு, காவலாளி வந்து இரண்டு முறை தடியால் தட்டிவிட்டுப் போயாயிற்று. சத்தம் குறைந்து கொண்டிருந்தது.

சிவசுவை எப்படி எதிர்கொள்வது என்று பலமுறை ஒத்திகை பார்த்து வந்தது, அறைக்குள் நுழையும்பொழுது மறந்து போயிற்று.

"என்ன சிதம்பரம், இத்தனை நேரம் பண்ணிட்டே? பாரு உனக்காக செஞ்சு வச்ச சாப்பாடு ஆறி அவலாப் போயிடுச்சு" என்றபடி எழுந்து வந்தான் சிவசு.

"மனசு சரியில்லை" என்று முனகியபடியே போய் கைகால் முகம் கழுவி சாப்பிட அமர்ந்தான்.

"எல்லாம் நாம எடுத்துக்கிற விதத்திலதான் இருக்கு..." என்று ஏதோ ஆரம்பித்த சிவசுவை, இடது கையால் அமர்த்தினான்.

சிங்கம் பிடறி மயிர் அத்தனையும் உதிர்த்து வயிறு, கால், முகம் சிறுத்துப் போய் ஒடுங்கிக் கிடந்தது கூண்டுக்குள். உற்றுப் பார்த்தபோதுதான் அது பெருச்சாளி என்று தெரிந்தது.

சிவசு தூங்கிய பிறகு, தனது பெட்டியையும் முடிந்த அளவு தன் சாமான்களையும் எடுத்துக் கொண்டான் சிதம்பரம். இந்த அறையை விட்டு, இந்த இரவே வெறியேறிவிட வேண்டும். நடைபாதையில் தங்க நேர்ந்தாலும் சரி...

இருளில் படியிறங்கி நாய் குரைப்புக்கிடையே நடக்க ஆரம்பித்தான். பெருச்சாளி பிடரி மயிரைச் சிலிர்த்துக்கொண்டது...

கிழிகிழின்னு கிழிக்கப் போறேன் நான் அவனை. ஆமா! பின்னே!

என்னை எழுதுறதா நினைச்சுக்கிட்டு, அவன் மட்டும் கிறுக், கிறுக்குன்னு கிறுக்கி பொஸ்தகம் வேற போடலாமா?

விவரஸ்தர்கள் யாரும் அந்த நூலைக் கிழிச்சி நூல் நூலாத் தொங்கவிட்டுடக் கூடாதுன்னு 'கிரிமினல் புத்தி'ரன் - இல்லாடியவன் 'கிறுக்கல்கள்'னு வெச்சான் பாரு டைட்டிலு; அதுக்கே குடுக்கணும் அவனுக்கு பட்டம் 'டாக்டரு'!

சுத்தமா படிப்பு வாசனையே இல்லாத அந்தக் கழுதைக்கு இலக்கணமெல்லாம் கற்பூர வாசனை!

ப்-பக்கூட (தூ... எனக்கும் அவன் ஸ்டைலு ஒட்டிக்குது) இப்பக்கூட அவன் கிட்டே 'ப், க், ச்' எங்க போடணும்னு கேட்டுப் பாருங்க. 'முதல் ரெண்டு தெரியாதுங்க. ஆனா, 'ச்' மட்டும் உதட்டுலதான் போடணும்'னு நக்கல் நாதஸ்வரம் வாசிப்பான், அந்த 'சிக்கல்' சண்முகசுந்தரம்.

இந்த மாதிரி உதிரி 'உதார்'களை உதாரணமாப் பேசறதுல, அவதார புருஷன் அவன். ஒரு கல்லூரி விழாவுல தரையெல்லாம் பெண்கள். மேடையில இவன் மைக்கப் புடிச்சி "பொதுவா பூ, மரங்களுக்கு கீழதான் உதிரி உதிரியா சிதறிக் கிடக்கும். ஆனா, மரங்களே இல்லாத இந்த ஹாலுக்குள்ள எப்படி இவ்வளவு அழகான பருவப் பூக்கள் தரையெல்லாம் இறைஞ்சி கிடக்கு?" அவ்வளவுதான்... புஸ்வாணம் தீப்புடிச்ச மாதிரி கலர் கலரா சிரிப்பூக்கள். அந்த டீனேஜ் பொண்ணுங்க மனசை டேமேஜ் பண்ணதால அதுங்களும் 'எவ்வளவு கவிதையா பேசறாண்டி!'

அவன் பேசுனது கவிதையா?

கவிதைதானோன்னு எனக்கே டவுட்டு வர்ற மாதிரி பேசுறதுதான் அவனோட ஸ்பெஷாலிட்டி!

கவிஞர் ரா. பார்த்திபன்
கவிஞரா? பார்த்திபன்!

அந்த 'பார்'கவியிடம் போய் இன்ன பொருளில் ஒரு கவிதை எழுதித் தாரு மய்யான்னு கேட்டுப் பாருங்க.

உள்ளுக்குள்ள புளி கரைக்கிறதை வெளிக்காட்டாம 'I think என் 'பச்சக்குதிர' shooting இந்த மாசம் 34ஆம் தேதி வரைக்கும் போவுதுன்னு நினைக்கிறேன். எதுக்கும் Feb. 30th என் P.A. (Parthepan's Assistant) கிட்ட பேசுங்க'ன்னு சொல்லி Great escape!

"வேணாம்யா ஒரு ஹைக்கூவாவது..."

"ஓ... அதானே... ஒரு டீ சொல்லுங்க!"ன்னு சொல்லிட்டு ஸ்டைலா NIB உயரமுள்ள ஒரு பேனாவை எடுத்து எழுதத் தொடங்கிருவான்.

IQ
இன்னும் 24...
அதே க்யூவில்!

'எப்டி?' என சில்லறையாய்ச் சிரிப்பான்.

ஒரு ஓட்டை மோட்டார் திடீர்னு ஸ்டார்ட் ஆன மாதிரி பேப்பர்ல பேனாவைக் கீறுவான்.

ஒரிஜினலாய் அழுகிறாள்
அந்த நடிகை
கிளிசரின் குப்பியைக் காணாமல்...!

'அட'ன்னு அடுத்தவங்க சொல்றதுக்கு முன்னாடி 'அடடடடா'ன்னு அவனே அதை எடுத்து அடுத்த புக்குக்குன்னு இப்பவே 'புக்' பண்ணி வெச்சிருவான்.

ஒரே ஒரு விஷயத்துக்காக மட்டும் நானே அவனை மனசாரப் பாராட்டுவேன். அது...

ஒரு கட்டுரை - ஒரு வாக்கியம் - ஒரு வார்த்தை மட்டுமில்ல, ஒரு ஒத்தையெழுத்து, அது ஒற்றெழுத்தா இருந்தாக் கூட அதை எழுத ராத்திரியும் பகலுமா, தூங்காம கொள்ளாம முட்டி மோதி போராடி, ஓ.கே.ன்னு சொல்ற அளவுக்கு ஒப்பேத்திடுவான்.

என்னோட உருவை வேணும்னா உருப்படாம செஞ்சுடுவானே தவிர, கருவை மட்டும் கரெக்டா வெச்சிருவான்.

கருவுற்றதால் தாயாகாமல்
கருணையுற்றதால்
அகில உலகத்துக்கே
'அன்னை' ஆனவளே!

அன்னை தெரசாவோட அருளாசி அவனுக்கு உண்டு போலயிருக்கு!

டிசம்பர் 26ஆம் தேதியில பாதிக்கப்பட்டவங்களுக்காக உதவி செய்ய பகலெல்லாம் போராடிட்டு, அர்த்த

ஒரு கவிதை பார்த்திபனைக் கிழிக்கிறது!

ராத்திரியில உக்கார்ந்து எல்லாக் கவிஞர்களையும் மாதிரி, அவனும் ஒரு கவிதை யாவது எழுதணும்னு கனாமி - பினாமி - கனாமின்னு கடாயில கடுகு, மிளகு, போட்டுத் தாளிக்கிற மாதிரி செஞ்சு பார்த்தான். குப்பைக் கூடை கர்ப்பமானது தான் மிச்சம்.

வைரமுத்துவோட கவிதையைப் படிச்சதும் அவன் முகம் சுமத்ரா தீவு மாதிரி ஆயிடுச்சு.

'அதைவிட எழுத நம்மால முடியாது சாமி'ன்னு கற்பனையெல்லாம் கடாசிட்டு கரிசனத்தோட ஒரு உண்டியலை எடுத்து, அதில

'கடல் நீரை மிஞ்சிய
கண்ணீரை
இதயம் நனைந்த
மனிதம் கொண்டு
துடைப்போம்'னு

எழுதி, தான் மட்டும் போகாம, இல்லாதவங்களுக்கு உதவுற எண்ணத்தை இளம் வயசுலயே விதைக்கணும்னு, தன்னோட குழந்தைகளை கூட்டிக்கிட்டு தெருத் தெருவாப் போய், சமூகத்தையும் அதில ஒரு பங்கா சேர்த்துக்கிட்டு, கரையில உயிருள்ள சடலங்களா ஒதுங்கியிருக்கிறவங்களுக்கு நேரடியா உதவுன அந்த மனிதநேயம் தான் நான் அவன்கிட்ட மதிக்கிற நல்ல கவிதை மட்டுமில்ல, காவியம்கூட!

அப்படிப் பாராட்டுற அதே நேரத்தில என் பேரைச் சொல்லி ஒரு திருட்டுத் தனத்தையும் பண்ணியிருக்கான் பாருங்க..!

'கல்கியில 'கவிதைச் சிறப்பிதழ்' போடறோம். கவிதை எழுதிக் குடுங்க!'ன்னு கேட்ட பாவத்துக்கு, தலைப்புல மட்டும் என் பேரைப் போட்டுட்டு, முழுக்க முழுக்க உரைநடையாவே எழுதியிருக்கிற இந்த 'ஃப்ராடு தியரி'யை எங்க போயி complaint பண்றது?

கேட்டா,

'கவிதை எழுதத்தானே எதுகை மோனையெல்லாம்; கவிதை தானே எழுத எதுக்கந்த மொகரையெல்லாம்?'னு கவிதை மாதிரியே ஒரு finishing touch கொடுத்து, படிக்கிறவங்களுக்கும் தப்பான கற்பிதம் பண்ற அவனை எப்படி நான் சீர் செய்ய?

இப்படிக்கு...
கவிதை

(இல்லீங்க! கவிதை பெயரில் ஒளிந்து கொண்டு இதை ஒரே மூச்சில் எழுதிக் கொடுத்தவர் சாட்சாத் பார்த்திபன்தான் - ஆர்)



வத்சலா... மிகத் தாமதமாக தமது நாற்பத்தெட்டாவது வயதில் எழுத ஆரம்பித்து, இன்று தமிழின் முக்கியக் கவிஞர்களுள் ஒருவராகத் திகழ்பவர். கவிதைச் சிறப்பிதழுக்காக அவரை நாம் சந்தித்தபோது, தமது சோகம், ஆனந்தம், குமுறல் என்று பலதையும் பேட்டியில் வெளிப்படுத்தினார். அவருடன் பேசியதிலிருந்து...

"பெண் விடுதலை தனித்துத் தேவையில்லை!"

தங்களின் எழுத்துலகப் பிரவேசம் மிகவும் காலம் கடந்து நிகழ்ந்ததற்கு என்ன காரணம்?

"சின்ன வயசுல நான் படிச்சதெல்லாம் குஜராத்தி மொழியில்தான். கல்லூரிக் காலம் ஆங்கிலத்தில். இரண்டாவது மொழி இந்தி. தமிழ்ங்கறது வெறும் பத்திரிகைப் பரிச்சயம்தான். இதுதான் தமிழுடனான ஒரே சம்பந்தம். அதுவும் பதினாறு வயசுல இருந்து ஆரம்பிச்சு, பத்தொன்பது வயசு வரைக்கும் படிச்சதுதான். பிறகு எனக்குத் திருமணம் ஆச்சு. மூணு வருஷத்துல விவாகரத்து ஆகி, ஒன்றரை வயசுக் குழந்தையோட நான் அம்மா வீட்டுக்குத் திரும்பி வந்துட்டேன். குழந்தையைக் காப்பாத்தணும், படிக்க வைக்கணும்ங்கற பொறுப்புகள் இருந்துச்சு. மனத்திருப்தியோட உத்தியோகம் பார்க்கணும்ங்கற எண்ணத்தாலேயே நாற்பத்தாறு வயசு வரைக்கும் அப்படியே போயிடுச்சு. என்னோட நாற்பத்தேழாவது வயசுல நல்ல ஒரு பெண்ணியக் குழுவோட எனக்குப் பரிச்சயம் ஏற்பட்டது. சிறந்த தோழிகள் எனக்குக் கிடைத்தார்கள். 1991ம் வருஷ ஆரம்பத்துல காலிகட்ல அகில இந்திய பெண்கள் மாநாடு ஒண்ணு நடந்தது. அந்த மாநாட்டுக்கு என் சிநேகிதிகளோடு நான் போனேன். அது எனக்குள்ளே மிகப்பெரிய ஒரு மாற்றத்தை ஏற்படுத்துச்சு. பண வசதியினாலயோ, படிப்பறிவினாலயோ மட்டுமே பெண்களோட பிரச்னைகள் தீர்ந்து போயிடறதில்லை. மனதளவுல பெண்களுக்கான பல பிரச்னைகள் பொதுவாத்தான் இருக்குங்கற புரிதல் எனக்கேற்பட்டது, எழுத ஆரம்பித்தேன்."

ஏன், நன்றாகத் தெரிந்த குஜராத்தி, ஆங்கில மொழிகளில் கவிதை எழுதாமல், தமிழில் எழுதினீர்கள்?

"குஜராத்தியைவிட எனக்கு ஆங்கிலத்தில் நல்ல பரிச்சயம். ஆனால் என்னமோ தெரியலை, எனக்குத் தமிழ்லதான் கவிதை எழுத வந்தது. இந்த சாய்ஸ் என் கைல இல்லை. மகாராஷ்டிராவில் வசிக்கிற சசி தேஷ் பாண்டே ஆங்கிலத்தில்தான் எழுதுவாங்க. அவங்ககிட்ட ஒருமுறை 'ஏன் மராட்டில எழுதாம, ஆங்கிலத்தில் எழுதறீங்க?'ன்னு கேட்டப்போ, 'The language chooses the writer. The writer does not choose the language'னு சொன்னாங்க. என்னோட விஷயத்திலயும் அப்படித்தான் ஆச்சு. நான் முதல் கவிதை எழுதறதுக்கு ஒரு மாதத்துக்கு முன்னாடி 'நீ தமிழ்ல எழுதப் போற'ன்னு யாராவது என்கிட்ட சொல்லியிருந்தா, நான் விழுந்து விழுந்து சிரிச்சிருப்பேன்."

பெண் என்பதால், அதுவும் விவாகரத்தான பெண் என்பதால் நீங்கள் ஏதேனும் பிரச்னைகளை எதிர்கொண்டீர்களா?

"வீட்டிலேர்ந்து பிரச்னைகள் ஆரம்பிக்குது. பெரும்பாலான குடும்பத்துல பாசம், அன்பு இதெல்லாம் இருக்கு. ஆனா ஆண்கள்கிட்டயும், பெண்கள்கிட்டயும் இருக்கிற எதிர்பார்ப்புகள் ரொம்ப வித்தியாசமா இருக்கு. ஆண் படிக்கறதுக்கோ, உத்தியோகம் பார்க்கறதுக்கோ எல்லா உறுப்பினர்களும் வீட்ல ஒத்துழைப்புக் கொடுப்பாங்க. அந்த ஒத்

துழைப்பு பெண்ணுக்கு இல்ல. ஒரு ஆணால் தன்னோட உத்தியோகத்தைப் பத்தி மட்டுமே நாள் முழுக்க சிந்திக்க முடியும். ஆனா வேலைக்குப் போற ஒரு பெண்ணால அது முடியறதில்ல. அவ ஆறு மணிக்குள்ள வீடு திரும்பணும். வந்து விளக்கு ஏத்தணும். இதுதான் பண்பாடு. ஏன் அதை பெண்தான் காப்பாத்தணுமா? ஆணுக்கு இல்லையா பண்பாடு? அந்த மாதிரி பண்பாடே எனக்குத் தேவையில்லை. நம்ம கவர்ன்மெண்ட் ஒரு ஆர்டர் போட்டாங்க... பெண்கள் வெள்ளிக்கிழமை அரைமணி நேரம் தாமதமா பணிக்கு வரலாம்னு. உலகத்திலேயே எந்த நாட்டுலயும் இந்த மாதிரி நடக்காது. பெண்கள் எண்ணெய் தேய்ச்சுக் குளிக்காமப் போனா நாடே கெட்டுப்போயிடப் போகுதா? ஆண் குழந்தைகளை இன்ஜினியரிங் படிக்க வைக்க, பெண் குழந்தைகளுக்குக் கல்யாணம் செய்ய, வீடு கட்ட நீ சம்பாதிக்கணும். ஆனா எண்ணெய் தேய்ச்சுக் குளிக்கறதையோ, செவ்வாய், வெள்ளிக்கிழமைகளையோ நீ மறக்கக் கூடாதுன்னு கம்பல்ஷன். அதுமட்டுமா! விளக்கு வைக்கிறதுக்குள்ள வீடு வந்து சேரணும்! நம்மளக் காத்துக்க முடியும்ங்கற ஒரு எண்ணத்தை குடும்பங்கள் பெண்களுக்குக் கொடுக்கறது இல்ல. அதையும் மிஞ்சி நாம தைரியமா இருந்தாலும் நம்மை பலவீனப்படுத்திடுறாங்க. அதை விட்டு வெளில வர்றதுக்கு ஒரு லைஃப்பே போதமாட்டேங்குது."



—கவிஞர் வத்சலா

பெண்ணியம் என்பது என்ன... ஆண் விரோதமா?

"இல்லவே இல்லை. பெண்ணியம் பத்தி பேசற யாருமே அதை ஒப்புக்க மாட்டாங்க. ஆண்கள் இல்லாத உலகத்துல நாம வாழணும்னு யாரும் எதிர்பார்க்கறது கிடையாது. பெண் என்கிற ஒரே காரணத்தால பெண்ணுக்குச் சில பிரச்னைகள் வருது. அதை எப்படி சால்வ் பண்றது, அதை விட்டு எப்படி வெளில வர்றதுன்னு நாமளும் யோசிக்கணும், பங்கேற்கணும்னு நினைக்கறதுதான் பெண்ணியம். ஆண், பெண் இரண்டு பேருமே பெண்ணியவாதிகளா இருக்கலாம். எனக்குத் தெரிஞ்சு நிறைய ஆண்கள் பெண்ணியவாதிகளா இருக்காங்க."

பெண் விடுதலை தேவையா?

"பெண் விடுதலைன்னு ஏன் சொல்றாங்கன்னு எனக்குப் புரியல. பெண்ணுக்குத் தனியா விடுதலை கொடுக்க வேண்டிய அவசியம் என்ன இருக்குன்னு எனக்குத் தெரியல. ஆணாதிக்க எண்ணங்களை விட்டு வெளில வர நினைக்கறது சமுதாய விடுதலை. பெண் விடுதலைன்னு தனித்துச் சொல்ல வேண்டியதில்லை."

உடல் மொழி சார்ந்த கவிதைகள் எழுதப்படுவது விளம்பர பரபரப்புக்கா?

"இதுதான் எழுதணும், இது எழுதக் கூடாதுன்னு சொல்றது அர்த்தமில்லாததுன்னு நான் நினைக்கறேன். அவங்கவங்களுக்கு எது இயற்கையா வருதோ, அதை அதை அவங்க எழுதறாங்க. உண்மையா எழுதறவங்க எல்லாருமே அப்படித்தான் எழுதறாங்க. ஆக, இந்தக் குற்



ஓர் ஆசிரியையின் அழைப்பு

ஜெயபாஸ்கரன்

செல்லக் குட்டிகளே...!
உங்களது பள்ளிக்கூடம்
சீரமைக்கப்பட்டுவிட்டது.

தூரத்தித் தூரத்தி
நீங்கள் விளையாடிய
வண்ணத்துப்பூச்சிகள்
மீண்டும் வந்திருக்கின்றன.

சேகரிப்பாரின்றிச்
சிதறிக் கிடக்கின்றன
உங்கள் கைக்கு அடக்கமான
சங்குகளும் கிளிஞ்சல்களும்.

பாடப் புத்தகப் பையைத்
தூக்கி எறிந்துவிட்டு
எவ்வளவு நேரம் வேண்டுமானாலும்
விளையாடுங்கள்.

இனி
எதன் பொருட்டும் உங்களை
கண்டிக்கவோ
தண்டிக்கவோ
மாட்டோம் நாங்கள்...

எங்கிருந்தேனும் ஓடி வந்து
முன்னைப் போல
நெருக்கியடித்து அமருவீர்களா?
வெறிச்சோடிக் கிடக்கும்
உங்களது வகுப்பறை பலகைகளில்...!

நச்சாட்டை என்னால ஏத்துக்க முடியல. விளம்பரம் தேடுறதுக்காக சிலர் (ஆணா கட்டும், பெண்ணாகட்டும்) சில விஷயங்களைச் செய்யலாம். ஆனா விளம்பரம் தேடுறதுக்காகத்தான் செய்றாங்கன்னு நாம எப்படிச் சொல்ல முடியும்? உடல் மொழி சார்ந்த கவிதைகளை ரொம்ப வருஷமாவே ஆண்கள் எழுதிட்டு வர்றாங்க. இப்ப பெண்கள் எழுதினா மட்டும் ஏன் கூச்சல் போடணும்? இதுலருந்து ஒண்ணு புரியுது... நம்ம சமுதாயத்துல பத்தாம் பசலித்தனம் இன்னும் குறையலன்னு தெரியுது. இதுவரைக்கும் நான் அப்படி எழுதல. எனக்கு இயற்கையா எந்தக் கவிதை எழுதத் தோணுதோ, அதை நான் எழுதுவேன். இப்படித்தான் எழுதுவேன் என்றோ, இப்படி எழுத மாட்டேன் என்றோ நான் முன் தீர்மானம் செய்து கொள்வதில்லை."

உங்கள் இலக்கு எதுவாக இருக்கிறது?

"ஒரு இலக்கிய கர்த்தா எனக்குக் கொடுக்கற அங்கீகாரத்தைவிட, ஒரு சாதாரணப் பெண் வந்து என்கிட்ட புரிதல் ஏற்பட்டதா சொல்லும்போது எனக்கு முழுத் திருப்தி ஏற்படுது. என்கூட வேலை பார்த்த ஒரு பெண் பியூனுக்கு ஆறு பெண் குழந்தைகள். கணவர் இறந்துட்டதால அவருக்கு அந்த வேலையைக் கொடுத்திருந்தாங்க. அவங்களுக்குப் படிக்கற பழக்கம் இருக்கு. ஒருமுறை என் 'சுயம்'ங்கற கவிதையைப் படிச்சுட்டு "எனக்கு இதோட ஒரு காப்பி கொடுக்க முடியுமா? மனசுக்குக் கஷ்டமா இருக்கும் போது அதைப் படிச்சா எனக்கு தைரியம் வருது'ன்னு சொன்னாங்க. இதுதான் என்னோட வெற்றியா நான் கருதறேன். மிகச் சிறந்த இலக்கியம் படைக்கணும்ங்கறது என் இலக்கில்ல. நான் சொல்ல விரும்புற விஷயங்கள் என்னால புரியும்படியா சொல்லப்பட்டா அது போதும்."

எப்படிப்பட்ட கவிஞராக உங்களை அடையாளப்படுத்திக் கொள்ள விரும்புகிறீர்கள்?

"பெண்களோட பிரச்னைகளை ஓரளவுக்காவது புரிய வைக்கறதுக்காக முயற்சிக்கற கவிஞரா என்னை அடையாளப் படுத்திக்க விரும்பறேன்."

- மு.மாறன்



ஐயா

வீச்சரிவாள் பிடித்து வெட்டுவதோ, மெஷின் கன் பிடித்துச் சுடுவதோ ஹீரோயிசம் அல்ல. அன்பு, அர்ப்பணிப்பு, தொண்டு மனம் ஆகியவற்றின் உதாரண புருஷனாக இருப்பவன்தான் உண்மையான ஹீரோ என நெத்தியடியாக வாழ்ந்து காட்டுகிறது ஐயா பாத்திரம். சாமி போன்ற பக்கா மசாலா படம் கொடுத்த ஹரிதான் இத்தனைக் கண்ணியமான பாத்திரத்தை சிருஷ்டித்தாரா எனக் கிள்ளிப் பார்த்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

உடை, ஒப்பனையில் பெருந்தலைவர் காமராஜரைக் கொஞ்சம் இமிடேட் செய்தது போன்று தெரிந்தாலும், படம் பார்க்கும் ரசிகரை பாதித்த நல்ல தலைவர் யாரோ, அவரோடு பொருத்திப் பார்த்துக் கொள்ளும் பொதுத் தொனியுடன் தெரிவதுதான் ஐயா பாத்திரப் படைப்பின் வெற்றி.

ஐயாவை வெற்றிகரமாக முன்னிருத்த, இயக்குனர் தேர்ந்து கொண்டிருக்கும் ஊர், உறவுகள், குடும்பம் எனும் உணர்ச்சிகரமான கதைக்களப் பின்னணி, தடுமாறாத திரைக் கதைக்குத் தடம் அமைத்துத் தந்திருக்கிறது.

சரத்துக்கு இரட்டைப் பொறுப்பு. இரண்டிலுமே நிறைவு. ஒருவர் முப்பத்தைந்து ஆண்டுகளாகத் தொடர்ந்து சுயேச்சை எம்.எல்.ஏ.வாக மக்கள் பணி செய்யும் அப்பா. மற்றவர் நயன்தாராவுடன் டூயட் பாடும் மகன். அப்பாவின் பெயரைக் கெடுக்கிற மாதிரி எங்கே அடிதடி ரகளையில் மண்டையைக் காய வைத்துவிடுவாரோ என்று அச்சமுறும் போது, வில்லனோடு மோதாமல் அவரை அன்பால் ஜெயிக்கிறார்.

ஐயாவைக் கொன்றால்தான் போச்சு என தமது பத்துப் பன்னிரண்டு வயது மகன்களின் மனதில் பகைமையை வளர்க்கும் பிரகாஷ்ராஜ், திடீரெனத் திருந்துவது திகைப்பைத் தந்தாலும், விட்டுக்கொடுத்தலும், தியாகமும் எந்த ஒரு தீய மனிதனையும் திருத்திவிடும் என்ற மாண்புறு வாஜிக்குடன் காட்சியமைத்திருப்பதை கண்ணை மூடிக்கொண்டு பாராட்டலாம்.

பள்ளிச் சீருடை என்ற போர்வையில் உயரம் குறைந்த உடையை நயன்தாராவுக்கு அணிவித்து அறிமுக நாயகி அவரை ஆட வைத்திருப்பது சந்தேகமில்லாமல் ஆபாசம்.

'ஐயாதுரை' பாடலில் பரத்வாஜ் உருகி, நம்மையும் உருக வைக்கிறார்.

கமர்ஷியல் ஃபார்முலாவுக்குள் இருந்தாலும் உயர்ந்த லட்சியத்தோடு மனதை கனக்க வைத்து விடுகிறார் ஐயா.

- விஷுவல்தாசன்

● அபல் ஆவரெஜ்

ராமபிரானின் ஜட்ஜ்!



• கம்பர்

'கம்பன் வீட்டுக் கட்டுத்தறி இஸ்மாயில் என்றே பாடும்' என்று பழமொழியை தாராளமாக மாற்றிக் கொள்ளலாம். அந்தளவுக்கு கம்பனின் வரிகளை என்றென்றும் வாழ்விக்க, கம்பன் கழகத்தை உருவாக்கினார் சென்னை ஐகோர்ட் முன்னாள் தலைமை நீதிபதி எம்.எம். இஸ்மாயில். கம்ப ராமாயணத்தின் புகழ் பரப்ப, இவர் எடுத்துக் கொண்ட முயற்சிகள், காலத்தின் கல்வெட்டுக்களில் என்றும் மறையாது. சமீபத்தில் காலமான இந்த இலக்கிய அறிஞர் பற்றிய நினைவுகளை கம்பன் கழகத்தினர் நம்மிடம் பகிர்ந்து கொண்டனர்.

இராமலிங்கம்
(செயலாளர்) :

இளைஞர்களிடையே இலக்கிய ஆர்வத்தைத் தூண்டுவதில் இஸ்மாயில் ஐயா, நிறைவான வெற்றி பெற்றுள்ளார். ஏன்னா, அடுத்த தலைமுறை இளைஞர்களிடம் கம்பன் கழகத்தை ஒப்படைச்சிட்டுப் போயிருக்காரு. ரொம்பப் பணிவானவர். நான் சட்டக் கல்லூரியில படிக்கறப்போ, முதன் முறையாக கம்பன் விழாவில பேசினேன். சூடாமணிப் படலத்திலிருந்து ஒரு பாடலை மனப்பாடம் பண்ணி சொன்னேன். அதுவரை அந்தப் பாடலை அவர் கேள்விப்படாததால, என்னை வீட்டுக்கு வரச் சொல்லி ரொம்பப் பாராட்டினாரு. ரொம்ப அன்பானவர். மறைந்த அ.ச. ஞானசம்பந்தம் அவரோட நண்பர். அவர் ஐயாவை பலர் முன்னால 'டேய் சாய்பு'ன்னு தான் கூப்பிடுவாரு. இருந்தாலும் எந்த வித முகச்சுளிப்புமின்றி அவரோட நட்பு பாராட்டினார் ஐயா.

• இஸ்மாயில்



டி.கே.நீலகண்டன்
(பொருளாளர்) :


பட்டிமன்றங்களில் நடுவரா இருக்கறப்போ, ஒதுக்கப்பட்ட நேரத்தில் பேச்சாளர்கள் சரியாகப் பேசணும்ங்கறதுல ரொம்பக் கண்டிப்பா இருப்பார் இஸ்மாயில் ஐயா. தன்னுடைய பண்பட்ட பேச்சு மூலம் இளைய தலைமுறை மத்தியிலும் கம்பரை போய்ச் சேர்த்திருக்கிறார். 'வாலி ராமனால் கொல்லப்பட வேண்டியவன்தானா?', 'கொன்ற முறை சரிதானா?', 'அதனால் ராமனின் புகழுக்குப் பங்கம் ஏற்பட்டதா?' - இந்தக் கேள்விகளை வைத்து 'மூன்று கேள்விகள்'னு ஒரு புத்தகம் வெளியிட்டார். அதைப் பார்த்துட்டு காஞ்சி மகா பெரியவர் சொன்ன வார்த்தை என்ன தெரியுமா? You are a chief justice! (இராமனுக்கே தீர்ப்பு சொன்ன மகாநீதிபதி!)

- ஷிவ்

இப்போது விறுவிறுப்பான விற்பனையில்!!!

புகழ்பெற்ற ஆன்மீக ஆசான்
பரமஹம்ச யோகானந்தரின்

ஒரு யோகியின் சுயசரிதம்



20ஆம் நூற்றாண்டில் வெளியான சிறந்த 100 ஆன்மீக நூல்களில் ஒன்றானதும் 22 மொழிகளில் மொழிபெயர்க்கப் பட்டதுமான உள்ளங்கவர் மகாகாவியம். கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் பாடப் புத்தகமாகவும் கலந்தாராய்வு செய்வதற்காகவும் பரவலாகப் பயன்படுத்தப்படுகிற அரிய நூல்.


788 பக்கங்கள் ரூ. 100



வெற்றியின் விதிமுறை


உங்கள் வாழ்க்கையில் ஏற்படும் தடைகளைக் கடந்து வெற்றியை முழுமையாக அடைய உறுதுணையாக இருப்பது. உங்களுடைய திறமை மட்டுமின்றி இறைவன் உங்களுக்கு அளித்திருக்கும் உட்சக்திகளின் ஆற்றல்களே என்பதை யோகானந்தர் இப்புத்தகத்தின் மூலம் அறிவுறுத்துகிறார். பாக்கெட் சைஸ். **40 பக்கங்கள். ரூ. 5**

இறைவனுடன் நீங்கள் பேசுவது எப்படி



இறைவனுடன் பேசவும், நமது பிரார்த்தனைகளுக்குத் திட்டவட்டமான பதில்களைப் பெறவும் உண்மையிலேயே முடியுமா? ஆன்மீக ஆசான் யோகானந்தர் இப்புத்தகத்தில் பதில் அளிக்கிறார். பாக்கெட் சைஸ்.

51 பக்கங்கள். ரூ. 5



ஆன்மீக நாட்குறிப்பு

ஒவ்வொரு நாளையும் தொடங்கவும் முடிக்கவும் மிகச் சிறந்த வழி - ஒருவரின் ஆன்மீக வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் தீட்டப்பட்டுள்ள, பரமஹம்ச யோகாநந்தரின் எழுத்தோவியங்களிலிருந்து உங்கள் மனதில் தோன்றும் ஓர் எழுச்சிமிகு சிந்தனையேயாகும். பாக்கெட் சைஸ்.

386 பக்கங்கள். ரூ. 40

கிடைக்குமிடங்கள் : யோகதா சத்சங்க தியான கேந்திரம்/ மண்டலி

சென்னை : ✆ 044-26481232, 26411564 **மதுரை** : ✆ : 0452-2384805

கோயம்புத்தூர் : ✆ : 0422-2210391, **சேலம்** : ✆ : 0427-2444304

ஜெய்கோ : 044-28222653, 28262874 **மணிவாசகர்** : 044-25380396

website : www.yssofindia.org

RAE-3770

பக்கத்து சீட்

கவிஞர் எழுதும் கதை - 2

இலேசான இரைச்சலோடு பேருந்து கிளம்பியது. கையை அசைத்தபடியே ஓடி வந்தாள் சரோ. ஜன்னலோர இருக்கையில் இருந்த ஒருவர் குரல் கொடுக்க, பத்தடி தள்ளிப் போய் நின்றது பேருந்து.

'உட்கார ஏதாவது இடம் கிடைக்குமா...?' பார்வையால் துழாவினாள். மூன்று பேர் உட்காருகிற இருக்கையில் நடுத்தர வயதுடைய இருவர் தாராளமாய் உடலைப் பரப்பிக் கொண்டு உட்கார்ந்திருந்தார்கள்.

ஜன்னலோர இருக்கை ஆசாமி இவளை கவனியாததுபோல் வெளியே வெறித்தபடி இருந்தான். பக்கத்து இருக்கை ஆசாமியோ நல்ல தூக்கத்தில் இருந்தான். ஜன்னலோர இருக்கைக்காரரைப் பார்த்து...

"ஏங்க இவரை கொஞ்சம் தள்ளி உட்காரச் சொல்லுங்க..." என்றாள் சரோ.

"யோவ்... தள்ளி உக்காரு!" கண்டக்டர் போட்ட பெரிய கூச்சலில் திடுக்கிட்டு விழித்த அந்த மனிதர், இவளைப் பார்த்து அசடு வழிய இலேசாய்ச் சிரித்தபடி, சற்றுத் தள்ளி உட்கார்ந்தான். தள்ளி மட்டும் உட்கார்ந்தானே ஒழிய ஒருவர் உட்காருவதற்குப் போதிய இடமாய் அது இல்லை. ஓரமாய் ஒண்டியபடி உட்கார்ந்து கொண்டாள் சரோ.

நகரத்தைத் தாண்டி சரியாய் இருபத்தெட்டாவது கிலோமீட்டரில் உள்ளது அவள் வேலை பார்க்கும் தனியார் கம்பெனி. ஞாயிறு தவிர்த்த வாரத்தின் ஆறு நாட்களும், இவளது பயணம் ஒவ்வொரு நாளும் அவஸ்தையாய்த்தான் கழிகிறது.

தினமும் போக வர... சரியாய் ஒன்றரை மணி நேரம் பயணம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம். சரோவுக்கு ஓரளவுக்குப் பழகிப் போனாலும், இன்னமும் அவளால் சகித்துக்கொள்ள முடியாததாகவும், சற்றும் புரிந்துகொள்ள முடியாததாகவும் இருப்பது, பக்கத்து இருக்கை ஆசாமிகளின் செய்கைகள் மட்டும்தான்.

பேருந்து ஏதேனும் பள்ளத்தில் விழும்போதெல்லாம் சீட்டு நுனிக்கு வழுக்கிக் கொண்டு வந்தாள் சரோ. உள் நகர்ந்து உட்கார்ந்தாள்.

பக்கத்து இருக்கை ஆசாமி தூக்கத்திலிருந்து முற்றிலுமாக விடுபட்டு, இவளையே பார்த்தபடி இருந்தான். முப்பது வயதிருக்கலாம். கோடு போட்ட சட்டையும் லூசான பேண்ட்டும் அணிந்திருந்தான். இவள் திரும்பும்போது பார்வையை வேறு பக்கம் திருப்பிக் கொள்வதும், இவள் வேறு பக்கம் பார்க்கும் போது இவளையே பார்ப்பதுமாய் இருந்தான். கால் மணி நேரம் கடந்திருக்கும்... தனது இடுப்போரம் ஏதோ ஊறுவதுபோல் இருக்க, சரோ சட்டென குனிந்து பார்த்தாள். பக்கத்து சீட்காரன்தான்... இவள் கவனிப்பது தெரிந்ததும் இயல்பாய் எடுப்பதுபோல் கையைப் பின் வாங்கினான். சரோவுக்கு ஆத்திரம் பொங்கியது.

காலியாயிருந்த ஒரே இடம் என வந்து உட்கார்ந்தது சங்கடமாய்ப் போய் விட்டதே!

அ.வெண்ணிலா

அவனருகே உட்காராமல் சீட்டு நுனிக்கே வந்துவிட்டாள் சரோ. இது பற்றியெல்லாம் கவலை இல்லாதவனாய் இவளருகே நெருங்கி உட்காருவதிலேயே குறியாய் இருந்தான் அவன். பேருந்து குலுங்க, குலுங்க இவள் பக்கமாய்ச் சாய்ந்தான்.

பேருந்து குலுங்கலுக்கு எல்லோரும் வலப்பக்கமாய் சாய, இவன் மட்டுந்தான் இடப்பக்கமாய் இவள் மீது சாய்கின்றான். எதிர்விதி மனிதர்கள் என்பார்களே... இவர்களைப் போன்றோர்களைத் தானோ...! பற்களைக் கடித்தாள்.

தோள் பட்டையால் அழுத்தமாய் உரசினான்.

"ஏங்க... தள்ளி உட்காருங்க!" என்றாள் அதட்டலான குரலில். அவன் சடாரெனத்



தள்ளி உட்கார்ந்தான்.

இவ்வளவு நேரமும் அவன் மேல் சாய்ந்தது, இடித்தது, உரசியது எல்லாமே தற்செயலானது போல் அவளைப் பார்த்து வெற்றுப் புன்னகை ஒன்றை உதிர்த்தான்.

ச்சே... என்ன மனுஷன் இவன்? ஒரு பெண் பக்கத்தில் உட்கார்ந்ததும் ஏதோவொரு இனம்புரியா கிளுகிளுப்பும், தவிப்பும், செய்கைகளும் தொற்றிக் கொள்கிறதே! 'பெண்'ணென்ற உடம்பு எப்பொழுதும் பற்ற வைக்கிற வெறும் தீக்குச்சி மட்டுந்தானா?

பெண்ணின் உடல்மீது வெறும் ஆடை மட்டுமா உள்ளது? அவள் உடல் மீது வேறெந்த மதிப்பீடுகளும், உணர்வுகளும், மரியாதையும் போர்த்தப்படவேயில்லையா? ஆடையைத் துளைக்கும் அருவருப்பான பார்வை. சதையைத் துளைத்தால் வெறும் இரத்தமும், எலும்பும்தானே!

இப்படியான பார்வைகளின் வக்கிரம் தொலைந்து, பெண்ணையும் சக மனுஷியாய்ப் பார்க்கிற காலம் எப்போது கைகூடும்?

'டக்'கென கவனம் கலைய வைத்தது அவனது அடுத்த செய்கை.

காலுக்கு மேலே ஏதோ ஊர்வது போலிருந்தது. ஒற்றை விரலொன்று மெதுவாக ஏறி இறங்கிற்று. தீக்கங்குகள் பற்றியது போல் இருந்தது.

மெல்ல நிமிர்ந்து பார்த்தாள். கழுகின் தீவிரம் அவன் முகத்திலிருந்தது.

'என்னடா வேணும் உனக்கு?' கோபமாய்க் கேட்டுவிடலாமா? யோசித்தாள்.

"ஒழுங்கா இருக்க முடியலே!" என்றாள் ஒற்றை வார்த்தையில்.

அவன் இது பற்றியெல்லாம் வெட்

கமோ, அச்சமோ கொள்பவனாய்த் தெரியவில்லை.

பயணம் தொடரத் தொடர... இன்னும் நெருங்கி வந்து உட்கார்ந்து கொண்டான்.

சரோவின் கோபம் எல்லை மீறியது. இனியும் பொறுத்துக் கொண்டால், இவனது செய்கை எதில் போய் முடியுமோ என்கிற பயமும் கூடவே தொற்றிக் கொண்டது.

இவ்வளவு நேரமும் பொறுமையாயிருந்தது தவறு என்று உணர்ந்தாள்.

'ச்சீ... நீயெல்லாம் ஒரு மனுஷனா? உனக்கு அக்கா, தங்கச்சி கிடையாது' என்று ஆக்ரோஷமாய் கர்ஜித்தபடி அவனது கன்னத்தில் அறைய வேண்டும். வேகமாய் எழ எத்தனித்தாள்.

இவளது செய்கைக்குப் பின் பேருந்துக்குள் எழப்போகும் ஆதரவு, எதிர்ப்புக் குரல்களை மனசுக்குள் ஓடவிட்டாள்.

"பொம்பளப் புள்ளகிட்ட நாகரிகமா நடக்கத் தெரியாதவனெல்லாம் மனுஷனா?"

"பஸ்ஸில வந்தா யாரும் இடிக்காம, உரசாம வர முடியுமா? வசதியா வரணும்னா சொந்த கார்ல வர வேண்டியதுதானே...!"

ஆதரவும், எதிர்ப்பும் கலந்த குரல்கள் மாறிமாறி எதிரொலித்தன.

பேருந்துக்குள் இருக்கிற இவ்வளவு ஆண்களில் ஒருவருக்கும் தன்னுடைய அவஸ்தை தெரியவில்லையா? இல்லை... தெரிந்தும் 'நமக்கேன் வம்பு' என்று ஒதுங்கிக் கொள்கிறார்களா?

மனசுக்குள் மின்னலாய்ப் படரும் சங்கடங்கள் இருக்கையை விட்டு 'பட்'டென எழ வைத்தது.

இவளது எழுதலுக்காகவே காத்திருந்தவர் போல், எதிர் இருக்கை ஆசாமி ஒருவர்...

"ஏம்மா... இங்க வந்து உக்காரும்மா...!" என்று தான் உட்கார்ந்திருந்த இருக்கையை விட்டு எழுந்து, இவளுக்கு இடம் தந்துவிட்டு ஒதுங்கி நின்றார்.

அவளின் எல்லாச் சங்கடங்களும் ஒரே கணத்தில் ஓடி ஒளிந்து கொண்டன.

அந்த பக்கத்து இருக்கை ஆசாமி அவளின் பக்கமாய் கடைசிவரை பார்வையைத் திருப்பவேயில்லை. ●



உண்மைகளில் எனக்கு
உடன்பாடில்லை
பொய்களைப் போல்
புன்னகைப்பதில்லை அவை!

எந்த வனாந்திரத்திலும்
காற்றின் முகவரியை
உச்சரிக்காத மூங்கில் மாதிரி
பொய்களின் உச்சரிப்பில்
வந்துபோய் விடுகிறது
உண்மையின் நிழல்!

பாதங்களின்
உராய்வுகளில்
நிலத்தின் பெருமூச்சு
யாருமேயில்லாத ஒன்றின்
அடையாளத்துக்காக
எப்போதாவது அழுகின்றன பொய்கள்!

சுய விமர்சனத்திற்குட்பட்ட
தேடுதல்
சிக்கிக் கொண்ட பொய்களில்
அதிகமாய் உண்மைகள்!

எப்படியோ
உண்மை குறித்தவைகளில்
பொய்களின் வடிவில்
ஒரு கவிதை இது!

ஆர்.நாகப்பன்

கல்கி நிறுவனம் உங்களை அன்புடன் அழைக்கிறது!

மங்கையர் மலர்

'அன்பு வட்டம்' வாசகர் விழா!

அழைக்கிறோம் அனைவரையும்!

ஜனவரி 29ம் தேதி
மாலை 5.30 மணிக்கு
கலைவாணர்
அரங்கில்
(வாலாஜா சாலை,
சென்னை - 2)



மங்கையர் மலர் வாசகர்களின் **'அன்பு வட்டத்தில்'**

ஆசிரியர் **ரேவதி சங்கரனுடன்**

கைகோத்துக் கலகலப்போம்.

அனைவரும் வருக; அளவளாவி மகிழ்க!

சிறப்பு விருந்தினர்கள் :

திரு **P.C. துரைசாமி,** திருமதி **சாந்தி துரைசாமி,**

இயக்குனர்கள், சக்தி மசாலா பிரைவேட் லிமிடெட், ஈரோடு

நிகழ்ச்சியில் இணைந்து, பரிசுகள் வழங்குவோர்:

SAKTHI® PICKLES

Something Special

சின்னான் செய்திகள்

யப்பா... கேட்டுக்கோங்க, இந்த வாரம் சின்னான் செய்திகள் எல்லாம் 'கவித'யா கலக்கப் போவுது. அனுபவியுங்க!

தாயம் விளையாண்டா, அதுல வெட்டுறதோட விட்டுடணும். அதுல தகராறாகி நேர்லயே வெட்டுற அளவுக்கு விரோதம் வளர்ந்திருக்கு பெரம்பூர்ல. லூஸ் தேவா (சூப்பர் பேரு!), முருகன் சகோதரர்களுக்கு கார்த்திக்கூட 'தாயச் சண்டை' வந்து அப்பால கார்த்திக், சகோதரர்களை ஆள் வைச்சு அடிச்சிருக்காரு.

விளையாண்டாங்க தாயம்!
பிரச்னை ஆச்சு உதயம்!
சண்டை போட்டு காயம்!
அடிச்சவன் ஆயிட்டான் மாயம்!



ஹையய்யோ! ஹையய்யோ! நம்ம சானியா மிர்சா ஆஸ்திரேலியன் ஓப்பன் டென்னிஸ்ல செம கலக்குக் கலக்கிட்டாங்க! என்னா சர்வீஸு, என்னா துள்ளலு! கேம் கண்ணுக்குள்ளே நிக்குது. முழு நேர சானியா மிர்சா 'ரசிகன்' ஆயிடலாமான்னு ஒரு 'சார்ட் - டைம்' யோசனை வைச்சிருக்கேன்.

இந்தியப் பொண்ணு சானியா!
எனக்குப் பிடிச்சிருக்கு அவ 'மேனியா?'
ஹைதராபாத் டென்னிஸ் ராணியா!
ஜெயிக்கப் பொறந்த பெண் நீயா!



• சானியா மிர்சா

குஷ்பு நடத்துற நிகழ்ச்சி ஜாக்பாட்டு, அதுல ஃபேமஸ் அவங்க ஜாக்கெட்டு, அதையும் ஏலம் விட்டு, சுனாமிக்கு நிதி திரட்ட வைச்சாங்க டார்கெட்டு, இதையுமா நியூஸாக் கணும் மெனக்கெட்டு!

ஓ.கே. ஓ.கே... சின்னானோட 'கவித' ஓடையில நீந்துனீங்களா! 'சின்னான் கவிதைகள்'னு ஒரு புக் போட்டேன். அதை சென்னை புக்ஃபேர்ல கூட நீங்க பாத்திருக்க முடியாது. ஏன்னா, எல்லாமே வித்துடுச்சி! என் கவிதைகள் வேணும்னா என்னை 'பர்சனலா' கான்டாக்ட் பண்ணுங்க என் இனிய டமில் மக்களே!



தென்கச்சி சுவாமிநாதன்

அரசியல் நாகரிகம்!

தெம்புக்குப் படிங்க! 13

அண்மையில் என் நண்பரான ஓர் அரசியல்வாதியைச் சந்தித்தேன். மிகவும் கவலையோடு காணப்பட்டார்.

"என்ன காரணம்?" என்று கேட்டேன்.

"என் சொந்தக்காரன் ஒருத்தன் உடம்பு சுகமில்லாம ஆஸ்பத்திரியில இருக்கான்!"

"சரி... போய்ப் பார்த்துட்டு வர வேண்டியதுதானே!"

"முடியாதே... அவன் வேற கட்சியில யில்ல இருக்கான்...!"

"கட்சி எதுவா இருந்தா என்ன... சொந்தம் இல்லன்னு ஆயிடுமா?"

"இது உங்களுக்குத் தெரியுது... எங்க தலைவருக்குத் தெரியலையே! நான் போய் அவனைப் பார்த்தேன்னு தெரிஞ்சா போதும்... எங்கக் கட்சிக்குள்ளே பெரிய விவகாரமாயிடும்!"

அரசியல், நட்பையும் உறவையும்கூட பிரித்து விடுகிற அதிசய உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்!

அந்தக் காலத்தில் புதுக்கோட்டை ராமையா என்றொருவர் பத்தாண்டுகள் பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்தார். ஆனாலும் கடைசி வரையில் அவருக்குச் சொந்தமாக ஒரு வீடு இல்லை. பிற்காலத்தில் அவர் இந்திரா காங்கிரஸில் சேர்ந்தார்.

அப்போது நடந்த ஒரு நிகழ்ச்சி இப்போது நினைவுக்கு வருகிறது...

சென்னை விமான நிலையம்.

எல்லாம் காத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் சற்று நேரத்தில் இந்திரா காந்தி வரப் போகிறார்.

காமராசரும் அவர் பக்கத்தில் க. ராசாராமும் நின்று கொண்டிருக்கின்றனர். இந்தச் சமயத்தில் ஒரு பெரிய மாலையைத் தூக்கிக் கொண்டு ராமையா அங்கே ஓடி வருகிறார். இதைப் பார்த்த ராசாராம், காமராசரிடம், "இவ்வளவு பயபக்தியுடன் இருக்கிறாரே... இவரை ஏன் உங்க கட்சியிலேயே வைத்துக் கொள்ளாமல் இந்திரா காங்கிரஸில் சேர விட்டீர்கள்?" என்று கேட்கிறார்.

அதற்கு காமராசர் "ராமையாகிட்டே காலணாகூட இல்ல... யாருகிட்டேயாவது சொல்லி அவருக்கு மாசம் 500 ரூபாய் கொடுக்க ஏற்பாடு செய்யலாம். தலைவர் பதவியும் கொடுத்து, மாதம் 1500 ரூபாய் செலவுக்கும் கொடுப்பதாக இந்திரா காங்கிரஸ் கட்சி கூறியதாக என்னிடம் சொன்னார்...!"



"சரி... அதுக்காக...?"

"நான்தான் போய்ச் சேருங்கள் என்று சொன்னேன். அந்த அளவுக்குக் காசு இங்கே கொடுக்க முடியாதே! அதனால நான்தான் அவரை அனுப்பி வச்சேன்!"

(பேசலாம்)

அருள்வாக்கு


கவிகள் அழகுபடுத்துவதில் இரண்டு தினுஸு. அபிப்ராயங்களின் உயர்வினால், அவற்றை வெளியிடும் வார்த்தை நயத்தால் நம் நெஞ்சைத் தொடும்படி, உள்ளத்தை உருக்கும்படி கவிதை பண்ணி, அதனால் படிக்கிறவனும் உத்தமமான உணர்ச்சிகளைப் பெறும்படியாகவும், உயர்ந்த கருத்துக்களைச் சிந்திக்கும்படியாகவும் செய்வது ஒன்று. இன்னொன்று வார்த்தைகளை, சப்தங்களை விசித்ரமாகவும், விநோதமாகவும் சொல்லி விளையாட்டுப் பண்ணி நாம் அதில் பிரமித்து, குதூஹலித்து, ஸந்தோஷப்படும்படி செய்வது. இதிலே மனஸை உருக்கும்படியாகவோ, அறிவில் நமக்கு சாச்வதமாக உயர்வு தரும்படியாகவோ எதுவும் இருக்காது. ஆனாலும் ஒரு அபிப்ராயம் நம் மனஸில் நன்றாகப் பதிவதற்கு இது உதவுகிறது. அதோடுகூட, வார்த்தையை வைத்துக்கொண்டு கவிகள் என்ன வித்தை பண்ணியிருக்கிறார்கள் என்று பார்த்து ரஸிக்கிறபோது, அநேக வேடிக்கை வித்தைகளைப் பார்க்கையில் நம்முடைய வாழ்க்கைக் கஷ்டங்களை மறந்து ஆனந்தப்படுவது போல ஒரு இன்பம் ஏற்படுகிறது.



அதனால் மஹாகவிகளும்கூட அபூர்வமாக அங்கங்கே இப்படிப்பட்ட வார்த்தை விளையாட்டுகளை - word - play என்றே இங்கிலீஷிலும் - சொல்வதைச் செய்திருக்கிறார்கள். ஒரு அர்த்தமும் ஸரியாகத் தெரிவிக்கத் தெரியாமல், கன்னா பின்னா என்று நாம் வார்த்தைகளைச் சொல்கிறோமென்றால், அதே வார்த்தைகளை அவர்கள் நூதன நூதனமாக அர்த்தம் கொடுக்கும்படிச் சொல்வதைப் பாராட்டத்தானே வேண்டியிருக்கிறது? அதனால் இவற்றுக்குச் 'சித்ர கவிதை' என்று பேர் கொடுத்து வைத்திருக்கிறது. சித்ர கவிதையில் வார்த்தை விளையாட்டால், அர்த்தத்தில் சாதுர்யம் செய்வதை அர்த்த - சித்ரமென்றும், சப்த ஜாலம் மட்டும் செய்வதை சப்த - சித்ரமென்றும் சொல்வார்கள்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்

மறவேன் மறவேன்



மறவேன் மறவேனென்று வேலின்
மேலாணை யிட்ட
மன்னரும் மறப்பாரோ - நீல மயிலே

உருகி உருகி உள்ளம் அவரை
நினைவதையும்
உயிரும் கரைவதையும் - அறியாரோ
மயிலே?

அன்பர் வரவு நோக்கி இங்கு நான்
காத்திருக்க
அன்ன நடை பயில்வாயோ -
வண்ண மயிலே!

பெம்மான் உன் மேலே வரும்
பெருமிதம் தலைக்கேறி
பாதையை மறந்தாயோ - பேதை
மயிலே!

வன்மம் மனதில் கொண்டு வஞ்சம்
தீர்க்க நினைத்து
வழியில் உறங்கினாயோ - வாழி நீ
மயிலே!



தன்னிகரில்லாதவன் தனயர் பால்
மையல் கொண்ட
மங்கை மீதிரங்காயோ - தங்க
மயிலே!

சொன்னாலும் நீ அறியாய் சொந்த
அறிவுமில்லாய்
உன்னை நொந்தாவதென்ன?
வன்கண் மயிலே!

மன்னும் கரிபரிகள் புவியில் பல இருக்க
உன்னை ஊர்தியாய்க் கொண்டார் -
தன்னையே நோகவேணும்.

'அமரர் கல்கி பாடல்கள்'
வானதி பதிப்பகம்



தவம்

கவிஞர் எழுதும் கதை - 3

ஒரு குழந்தையின் ஓவியம் வரைந்து கொண்டிருந்தான் நீலன்! கைகள் தூரிகையோடு வர்ண மாநாட்டுச் சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்தது. நெற்றி துவங்கி பாதம் வரை வரைந்தாயிற்று. ஒரு தவழும் குழந்தை, கையில் ஒரு ரோஜாப்பூவுடன் சின்னதாய் சிரித்தபடி நம்மை நோக்கி எம்புகிறது. அருகில் ஒரு மெழுகுவர்த்தி ஒளி சிந்துகிறது. பின்னணியில் ஒரு பச்சைப் புல்வெளி!

நீலன், அந்த அற்புதத்தை வரைய ஆரம்பிக்கையில் அதிகாலை மணி நான்கு. இப்போது மணி ஏழு. மூன்று மணி நேரம் அவனே குழந்தையானான். அவன் தூரிகை குழந்தையானது.

இன்னும் ஓவியத்தை முடிக்கவில்லை. ஓவியத்துக்குக் கண்கள் வரையவில்லை. கண்கள் தத்ரூபமாக, இயைபுக்கேற்ற, எதார்த்தமாக, உண்மை ஒளி சிந்தும்படி இருக்க வேண்டும். அப்போதுதான் ஓவியம் முழுமையடையும்.

ஆனால் கிராமத்திலிருந்து வந்து, நகரில் உள்ள தன் அக்கா வீட்டில் தங்கிப் படிக்கும் நீலனால் ஏழு மணி ஆனதிலிருந்தே ஓவியம் வரைய முடியவில்லை. அந்தக் குழந்தைக்கான கருந்திராட்சைக் கண்களைக் கற்பனை செய்து உள்ள மெங்கும் வழிய வழிய நிரப்பிக் கொண்டு, தூரிகையைப் பிடித்து புருவத்தருகே சென்றதும், காது கிழியக் கேட்டது குக்கரின் விசில் சத்தம். பொறுத்துக் கொண்டேயிருந்தான். கடைசியில் அவனே சென்று குக்கர் விசிலை ஒரு குட்டுக் குட்டினான்.

ஓவியத்தருகே வந்தமர்ந்தான். மனசைத் துழாவினான். குழந்தைக்கான கண்கள் மனசுக்குள் எங்கோ நழுவி நழுவித் தொலைந்து போயிருந்தன. திருவிழாவில் காணாமல் போன சில்லறைக் காசு மாதிரி...

“டேங்குல தண்ணி தீர்ந்து போச்சுடி! எல்லாத்தையும் குளிச்சே தீத்துட்டியா?” என்று அக்காவைத் திட்டிக்கொண்டே, மோட்டார் சுவிட்சைப் போட்டார் மாமா.

அந்தப் பழைய மோட்டாரின் சத்தம் இரண்டு ரயில் வண்டிகள் ஒரே சமயத்தில் எதிரும் புதிருமாய் கடந்து போகையில் உண்டாகும் நாராசம் போலிருக்கும்.

சத்தம் முடிந்ததும் அக்காவின் இரண்டாவது பையனை மூத்தவன் எட்டி உதைக்க... அவன் இணைப்பு தவறிய கார் ஹாரனைப் போல் விடாமல் கத்த ஆரம்பித்தான்!


வேலைக்குப் போகும் அவசரத்தில் இட்டுக்கொண்ட மை இலேசாய்ப் பிசகி விட, அக்கா தன்னைத்தானே திட்டிக்கொண்டே மீண்டும் முகம் கழுவி, பவுடர் பூசி மை தீட்டினாள்!

இருந்த ஆத்திரத்தை குழந்தையிடம் காட்டி முதுகில் இரண்டு வைத்தான்! அது இன்னும் பொத்துக் கொண்டு வீறிட்டது! மனசுக்குள் தன் மழலையின் கண்கள் நழுவிப் போவதை உணர முடிந்தது நீலனால்! ஒரு குழந்தையின் ஓவியம் வரைய குழந்தைகளே தடையா?

பா.விஜய்

அக்கா குடும்பத்தில் அனைவரும் போய் விட்டிருக்க... தனிமையில் ஷவர் திறந்து செயற்கை மழையில் ஆனந்தமாய் நனைந்தான். உடல் குளிர்ந்து, மனம் மீண்டும் பூத்தது.

உள்ளுக்குள் ராக்கெட் வேகத்தில் குழந்தைக்காக வரையப் போகும் கண்கள் உதயமானது! சிரித்தபடி வெளியே வந்தான்! சாப்பிட்டான். கல்லூரிக்குப் போய் வந்து மொட்டை மாடியில் அமர்ந்தான். அந்த இடத்தில் காகம் கூடு கட்டியிருந்தது. அது தெரியாமல் அமர்ந்தான். இரண்டு காக்கைகள் நீலனைப் பார்த்து 'இங்கிருந்து போய்விடு, போய்விடு!' என்பது மாதிரி காட்டுக் கத்தல் கத்தின! கவனியாத நீலனோ குழந்தையின் கண்களைத் தேடுவதில் மூழ்கிப் போயிருந்தான். பொறுமையிழந்த



காகமொன்று, விர்ரென்று வந்து அவன் தலையில் ஒரு சொத்துக் கொத்தியது. இரண்டு முடி அறுந்து போனது. உச்சந் தலையைப் பிடித்துக்கொண்டே எழுந்தான். அப்போதுதான் அவன் கண்களுக்குக் காக்கையின் கூடு தென்பட்டது.

மொட்டை மாடியில் இரவு ஒன்பது மணியளவில் யாருமில்லை! டேங்கின் மீது மீண்டும் ஏறி உட்கார்ந்தான் நீலன். இனி இந்த இருட்டில் வரைய முடியாதுதான். என்றாலும் மனத்தின் ஆழத்திலிருந்து குழந்தையின் கண்களைத் துழாவி எடுக்க விரும்பினான்.

தனது கண்களை இறுக மூடினான். மனதின் பிற ஜன்னல்களைச் சாத்தினான்! சிந்தையை ஒரு புள்ளியில் நிறுத்தினான்! அலங்க மலங்க குழந்தையின் கண்கள் மேல் நோக்கி வந்தன! ஆனாலும் அதில் ஒளியில்லை.

சாப்பிட்டு விட்டுப் படுத்தான்! உறக்கம் வரவில்லை! மனதுக்குள் துருப்பிடித்த இரும்பாய் குழந்தையின் கண்கள் தோன்றின!

மோட்டார் ஒலி...
குடும்பத்தின் கதறல்...
காக்காவின் கொத்தல்...
குழந்தையின் கண்கள் அவனைத் தூங்க விடவில்லை. இறக்கை பிய்ந்த பறவையாய் வேதனைப்பட்டது மனம். சட்டென எழுந்து விளக்கைப் போட்டவன், திடீரென்று ஓவியத்தை எடுத்து சுக்கல் சுக்கலாய் கிழித்தான். குழந்தை சுந்தலாய் கலைந்தது.

மனபாரம் குறையாமலேயே படுத்தவனின் கனவில் குழந்தையின் ஓவியம் கண்களில்லாமல் வந்தது. மனதில் பொருத்தமான கண்களும் உதயமாக, கனவிலேயே வரைந்து முடித்தான்! சட்டென்று உயிர் பெற்றுக் கண் திறந்த குழந்தை, அவனைப் பார்த்து 'அம்மா' என்றது. நிஜத்தில் நீலனின் விழியோரம் ஒரு துளி கண்ணீர்! ●

அண்ணன் தங்கை பாசத்தைக் காட்ட அந்த நாட்களில் வெளிவந்த காவியம் 'பாசமலர்'. அதில் கண்ணதாசனின் காவிய வரிகளும், இந்த நாளில் அதே பாசத்துக்காக வெளிவந்திருக்கும் 'திருப்பாச்சி'யில் இயக்குநர் பேரரசு எழுதிய வரிகளும் இதோ...



* அண்ணன்... தங்கை

பாசமலர்

தங்கை:

மலர்ந்தும் மலராத பாதி மலர் போல
வளரும் விழி வண்ணமே
வந்து விடிந்தும் விடியாத காலைப் பொழுதாக
விளைந்த கலை அன்னமே
நதியில் விளையாடி கொடியில் தலைசீவி
நடந்த இளந்தென்றலே
வளர் பொதிகை மலை தோன்றி
மதுரை நகர் கண்டு
பொலிந்த தமிழ் மன்றமே

அண்ணன்:

(மலர்ந்தும் மலராத...)
யானைப்படை கொண்டு சேனை பல வென்று
ஆளப்பிறந்தாயடா - புவி
ஆளப் பிறந்தாயடா
அத்தை மகளை மணம் கொண்டு
இளமை வழி கண்டு
வாழப் பிறந்தாயடா

தங்கை:

தங்கக் கடியாரம் வைர மணியாரம்
தந்து மணம் பேசுவார்...
பொருள் தந்து மணம் பேசுவார்
மாமன் தங்கை மகளான மங்கை உனக்காக
உலகை விலை பேசுவார்

அண்ணன்:

(நதியில் விளையாடி...)

தங்கை:

சிறகில் எனை மூடி
அருமை மகன் போல
வளர்த்த கதை சொல்லவா
கனவில் நினையாத காலம்
இடைவந்து
பிரித்த கதை சொல்லவா

அண்ணன்:

கண்ணின் மணி போல
மணியின் நிழல் போல
கலந்து பிறந்தோமடா - இந்த
மண்ணும் கடல் வானும் மறைந்து
முடிந்தாலும்
மறக்க முடியாதடா - உறவை
பிரிக்க முடியாதடா -
(அன்பே ஆரி ஆராரோ...)

திருப்பாச்சி

சிஸ்டர்:
என்ன தவம் செஞ்சுப்புட்டோம்
அண்ணன் தங்க ஆகிப்புட்டோம்
பாவி நானும் பொண்ணாப் பொறந்த
பாவமா
வாழும் எடம் பொறந்த எடம் ஆகுமா

பிரதர்:
காணும் காட்சி தீப்புடிக்க
கண்ணு ரெண்டும் நீரிறைக்க
மீள நானும் கர சேத்துப் போறேனே
சாமி மேல பாரம் போட்டு வாரேனே

குழு:
ஆராரோ ஆரிராரிரோ...
கண்ணே கற்பகமே கண்ணுக்குள்ள
சொப்பனமே
தூங்காம அண்ணங்கூட எப்போதும்
கூட இரு
எப்போதும் கூட இரு... எப்போதும்
கூட இரு

பிரதர்:
ஆராரோ ஆரிராரிரோ என் தாயி
ஒரு தாய பெத்தெடுத்தாளே
புதுவாழ்வு அவ வாழ தத்துவிட்டேனே
கரு வீட்டில் பூத்துப்புட்டோம்
வீட்டையுந்தான் மாத்திப்புட்டோம்

சிஸ்டர்:
அவதாரம் போல நீயும் அவதரித்தாயே
மருதாணி போல என்னை வளத்து விட்டாயே
செவந்த எடம் பொறந்த எடம்
உதுந்த எடம் புகுந்த எடம்

இருவரும்:
(என்ன தவம்...)

சிஸ்டர் :
(என்ன தவம்...)



• பிரதர்... சிஸ்டர்!

அன்றும்... இன்றும்!

தொகுப்பு:
வளவன்

உள்ளம் துறந்தவன்

"வேண்டாங்க...
திமிங்கிலங்க பாவம்ங்க!"

பளீர் இளமைத் தொடர் – 4

மஞ்சரி பணத்தில் சிக்கனக்காரி. எங்கேயோ சேல் போட்டிருக்கிறார்கள் என்று இரண்டு பஸ் பிடித்து அண்ணா நகர் எக்மோர், வில்லிவாக்கம் என்று அலைச்சலாக அலைவாள். கடையையே வாங்கும் அளவுக்கு செல்வம் இருப்பது அவளுக்குத் தெரியாதா, காட்டிக் கொள்வதில்லையா என்று அறிவது கஷ்டம். இதை சில சமயம் 'ரிவர்ஸ் ஸ்னாபரி' என்பார்கள். ரொம்பப் பணக் காரர்கள் கதர் ஆடையும், ஹவாய் சப்பலும் அணிவது போல. மஞ்சரிக்கு அப்படியொன்றும் பாசாங்கு இருப்ப தாகத் தெரியவில்லை. தன் தந்தைதான் பணக்காரர், தான் பணக்காரி இல்லை என்று அவள் உள்ளுணர்வில் ஓர் எச்சரிக்கைக் குரல் ஒலிக்கும். மேலும் தான் பிறப்பால் மகளல்ல, வளர்ப்பால்தான் என்று உள்ளுக்குள் ஓர் தயக்கம் அல்லது சிலரைப் போல் இயல்பாகவே சிக்கன சுபாவம், அவளது அம்மாவிடமிருந்து வந்திருக்கலாம். தன் பணக்காரத்தனத்தை சிநேகிதிகளிடம் காட்டிக் கொள்ளவே மாட்டாள். அவர்களில் பல பேருக்கு இவள் பெரிய இடத் துப் பெண் என்பதே தெரியாது. மஞ்சரி சில சமயம் "ஏய் நீ எனக்கு ரெண்டு ரூபா தரணும். அவ அஞ்சு ரூபா தரணும்" என்றெல்லாம் சண்டை போடுவாள்.

"அஞ்சு ரூபாயா எப்டி எப்டி?"

"அன்னிக்கு பீச்ல மாங்கா பத்தை வாங்கறப்ப தந்தேனே!"

"அல்பம் அல்பம், பீச் மாங்காய்க்கெல்லாம் காசு வாங்கறியே"



படம் : ஸ்ரீஹரி

அந்த காபி ஷாப் சம்பவம் நிகழ்ந்த அடுத்த வாரம் கல்லூரிகளுக்கு மனுப்போடு வதில் பிசியாக இருந்துவிட்டாள். கண்டிப் பாக இன்ஜினியரிங் மெடிக்கல் என்ட் ரன்ஸ் எக்ஸாம் எழுத மறுத்துவிட்டாள். பாலா "அமெரிக்கா வந்து அண்டர்கிராஜு"

சுஜாதா



வேட் பண்ணு. ஒரு ஸாட் எழுதிடு" என்று வற்புறுத்தியிருந்தார். அதையும் நிராகரித்து கல்லூரிகளில் அப்ளிகேஷன் கொடுத்து, ரசீது வாங்கிக் கொண்டு, எக்மோரில் கோ-ஆப்டெக்ஸ் அருகில் மலிவாக விதம் விதமான சுடிதார்கள் வாங்க அங்கே போயிருந்தார்கள்.

மார்பில் SAVE THE WHALE என்று பச்சையில் எழுதி, இளைஞர்கள் துண்டுப் பிரசுரங்களைத் தந்து, ரூபாய் நோட்டுகள் கண்ணாடி வழியாகத் தெரியும் உண்டியலுடன் போகிற வருகிற பெண்களிடம் அன்பளிப்பு கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

அவர்களில் அழகேசன் மஞ்சரியைப் பார்த்ததும் விலகிச் சென்றான். மஞ்சரி "நில்லு, உன்ன எங்கயோ பாத்திருக்கேன்"

"போன ஜன்மமா இருக்கலாங்க. ஆளை விடுங்க"

"விளையாடாதே, உன் முகம் ரொம்பப் பரிச்சயமா இருக்குது"

"ஆல்ரைட். அரோமா காபி ஷாப்ல உங்களுக்காக சண்டை போட்ட துரதிர்ஷ்ட வெய்ட்டர்ங்க"

"ஹைக்கூ?"


"சாட்சாத்"

"இன்னிக்கு லீவா?"

"என்னிக்குமே லீவு. வேலை போயிடுச்சுங்க. முதலாளி டாட்டர்னு சொல்லக் கூடாதா? அநியாயம்!"

"எனக்கே அந்த எடம் எங்கப்பாவுக்குச் சொந்தம்னு அப்புறம்தான் தெரியும், ஸாரி"

"போய்! பரவாயில்லை. பணக்காரங்க ஸாரி சொல்ல வேண்டியதில்லைங்க" அவன் பனியனைக் காட்டி "இது என்ன?"



"சேவ் தி வேல்னு... தமிழ் வேல் இல்லை, இங்கிலீஷ் வேல். திமிங்கிலம். வேல்னால, ஒரு வாரம் வேலை. பனியன் போட்டுக்கிட்டு துண்டுப் பிரசுரம் கொடுத்தா, ஐந்நூறு ரூபாய். சென்னைல இந்த மாதிரி கிறுக்கு கோஷ்டிங்க நிறை யவே இருக்குதுங்க. உலகத்தில இன்னைய தேதிக்கு எத்தனை திமிங்கிலம் இருக்கு தெரியுங்களா? ஒரு லட்சத்து எண்ப தாயிரம்..."

மஞ்சரி அவன் சொன்னதை கவனிக் காமல், அவனையே... பார்த்துக் கொண் டிருந்தாள்.

"வேலை போய்டுச்சா, நான் எங்கப்பா கிட்ட சொல்லி..."

"வேண்டாங்க, நான் விட்ட வேலையை இதுவரை மறுபடி தொட்ட தில்லை. இந்த சப்பை மூஞ்சிங்ககூட வேல் வாட்சிங்குக்கு ஜப்பான் போற சான்ஸ் இருக்கு. திருச்சி, தஞ்சை, மதுரை, கன்யாகுமாரி வரைக்கும் சுத்திக்காட்ட போகப் போறேன். ஒப்பந்தம் அட்வான்ஸ் வாங்கிருக்கேன். செலவழிச்சாச்சு"

"அதெல்லாம் திருப்பிக் கொடுத்துடச் சொல்றேன்"

"வேண்டாங்க, திமிங்கிலங்க பாவம்ங்க"

"திடீர்னு திமிங்கிலத்து மேல என்ன கவலை?"

"லவ்லி க்ரீச்சர்ங்க. உலகத்திலேயே பெரிய மிருகம் ப்ளூ வேல். 115 அடி நீளம், 150 டன் எடைங்க. உங்களுக்கு ஒண்ணு தெரியுமா? ரொம்ப நாட்களுக்கு முன் னால திமிங்கிலங்கள் தரையில நடந்துக் கிட்டிருந்துச்சாம். மான், ஒட்டகம், திமிங்கிலம் இதெல்லாத்துக்கும் பொது வான முன்னோர்கள் உண்டு! திமிங்கிலத் தினால அதிக நேரம் தண்ணில இருக்க முடியாது, தெரியுமோ?"

"இந்த மாதிரி நிறைய்ய பயனுள்ள தகவல் கைவசம் வெச்சிருக்கீங்களா?"

"அழகேசா, வேன் வந்துருச்சு, அங்க என்ன கிரவுண்ட் நட் போடுற? மேடம், இவன் கேர்ள் ஃப்ரெண்டு பாத்தா களுக்கு!"

அவன் சிரித்து "வரேங்க, இன்னிக்கு ராத்திரி பத்தரைக்கு என்னை டீ.வி.ல பார்க்கலாம். பை பை" என்று சொல்லி விட்டு, க்வாலிஸ் வானில் தொத்திக் கொண்டு சென்றான்.

ஆண்களும் பெண்களும் ஒரே மாதிரி பனியன் அணிந்து, நெருக்கமாக உட்கார்ந் திருந்தார்கள். ஒரு கணம் அவர்களுடன் அந்த வாகனத்தில ஏறிக் கொண்டுவிட லாமா என்று மஞ்சரிக்குத் தோன்றியது.

"யார்டி அது?"

"காபி ஷாப்ல வெய்ட்டரா இருந் தான்"

"அவனா?"

"வேலை போயிடுத்தாம், பாவம்!"


வீட்டுக்குத் திரும்பியபோது ராகவேந் தர் ஏர்போர்ட் போகிற அவசரத்தில் இருந்தார்.

"அப்பா, உங்க காஃபி ஷாப்ல இஷ் டத்துக்கு வேலையை விட்டுத் தள்ளிர் றாங்க!"

"புரியலை"

"அன்னிக்கு அரோமாவில கலாட்டா நடந்துச்சில்ல? அதில ஒரு வெய்ட்டர் எனக்கு உதவி பண்ணினான். அவனைப் போய் மேனேஜர் தூக்கிட்டார்."

"எந்த வெயிட்டர், எந்த காபி ஷாப்?



- கேஜி.எஸ்.கோவிந்தன்

எதுவா இருந்தாலும் பரமேஸ்வரன் ஸார் கிட்ட சொல்லு. இல்லை, இஃப் இட் கேன் வெய்ட், பதினஞ்சு நாள்ல வந்துருவேன்"

"நான் பரமேசு ஸார்கிட்ட பேசிக் கறேன்"

"அந்த வெய்ட்டர் பேர் என்ன?"

அழகேசா என்று அவர்கள் அழைத் தது மனதில் தேங்கியிருந்தது.

"அழகேசன்"

ஒருமுறை அவளை வியப்புடன் பார்த்தார்.

பரமேஸ்வரன், வழியனுப்ப ஏர் டிக்கெட், போர்டிங் கார்டு, ஓட்டல் ரிசர்வேஷன் மீட்டிங் விவரங்களுடன் வந்திருந்தார்.

"நாகரத்தினம் அனுப்பிச்ச ப்ரபோசலைப் பாத்தீங்களா?"

"பாத்தேன் ஸார். உண்மையைச் சொல்லட்டுமா?"

"சொல்லும். அதுக்குத்தானே உமக்கு சம்பளம் கொடுத்து வச்சிருக்கு?"

"நீங்க உங்க மாப்பிளைக்கு ஒரு கோடி அன்பளிப்பா கொடுக்க விரும்பினா, அது வேறு விஷயம். இந்த ப்ரபோசலுக்குன்னா, போர்டு ஒத்துக்காது. பைசா பெறாது"

"ஏன்?"

"ஸ்கீமே ஓட்டை. ஸ்கூல் விலை போன வருஷத்து விலை. அதுவே தப்பு. இருபத்தஞ்சு பர்சன்ட் ஜாஸ்தியாயிருக்கு. ஒரு கோடி இன்வெஸ்ட் பண்ணி, பிசினஸ் பண்ணி ஒரு கோடி நஷ்டப்படறதை விட, பேசாம அன்பளிப்பா குடுத்துரலாம். அதுக்கும் கிஃப்ட் டாக்ஸ் கட்டணும்."

பரமேஸ்வரன் சில சமயம் கடுமையாகப் பேசுவார்.

"வேற எப்படிக் கொடுக்கறது?"

"ஓய்ஃப், டாட்டர் பேர்ல இருக்கற



ஷேர்ல கொஞ்சம் வித்துத்தான் கொடுக்க முடியும்"

"என்னவோ செய்யும். இல்லைன்னா கோவிச்சுப்பார். இந்தப் பொண்ணுக்கு ஒரு கம்ப்ளெயிண்ட். அரோமால யாரோ வெய்ட்டர் பையன் எல்ப் பண்ணிருக்கான். அவனை மேனேஜர் டிஸ்மிஸ் பண்ணிட்டாராம். அரோமாவை யார் பாத்துக்கறாங்க?"

"ஷண்முகம் செல்வகுமார்னு துடியான பையன்கள் முதலாளி"

"என்னம்மா விஷயம்?"

"மாமா, அழகேசன்னு ஒரு வெய்ட்டரை மறுபடி வேலைக்குச் சேர்க்கணும்"

"அவ்வளவுதானே? மஞ்சரி சொன்னா செய்தாகணுமே. நீயும் கௌசல்யாவும் ஒரே வயசு"

கௌசல்யா அவருடைய ஒரே பெண். துங்கபத்ரா வெள்ளத்தில் இறந்து போனவள்.

ராத்திரி பத்தரை மணிக்கு எல்லா சானல்களிலும் டெலிஷாப்பிங் அல்லது சுவிசேஷம் அல்லது எண்கணிதம் அல்லது வாஸ்து அல்லது அதிர்ஷ்டக் கல் நிகழ்ச்சிகள் தெரிந்து கொண்டிருக்க, சோம்பேறித்தனமாக சானல் மேய்ந்து கொண்டிருந்தாள் மஞ்சரி. சட்டென்று ஒரு சேனலில் நிறுத்தினாள்.

"இந்த எளிய பாக்கெட் ஜிம் உடற்பயிற்சி சாதனத்தின் விலை 278 ரூபாய் மட்டுமே. பத்து நாட்களில் ஏழு கிலோ குறையவில்லை என்றால், திருப்தி இல்லையேல் பணம் வாபஸ்" என்று ஸ்கிப்பிங் ரோப்புடன் 'ப' வடிவ கம்பி இணைத்த, பத்துப் பைசா பெறாத ஒரு அற்ப சாதனத்தை அழகேசன் விவரித்துக் கொண்டிருந்தான். ட்ராக் சூட் அணிந்து சிங்கிலெட் பனியன் அணிந்து காமிராவை புன்னகையுடன் பார்த்து "இப்ப பாத்தீங்களா, ஒவ்வொரு மசிலுக்கும் தனித்தனியா பயிற்சி தரலாம்"

"திரையில் தெரியும் நம்பருக்கு அரை மணிக்குள் போன் செய்து ஆர்டர் கொடுப்பவர்களுக்கு, இருநூறு ரூபாய் மதிப்புள்ள ஒரு ட்விஸ்டர் இலவசம்"

மஞ்சரி அந்த எண்ணுக்கு உடனே போன் செய்தாள்.

"எனக்கு பாக்கெட் ஜிம் வேண்டாங்க. அதை டெமோ பண்ணவர் வேணும்"

"அழகேசன் எப்பவோ ரிக்கார்ட் பண்ணிட்டுப் போய்ட்டாரே. இங்க இல்லைங்க"

"அவர் திரும்பி வந்தா அவருக்கு வேலை போகலைன்னு சொல்லுங்க"

"திரும்பி வர்றது சந்தேகங்க. எங்கயோ ஜப்பான் டூர் போறதா சொல்லி பணபாக்கியெல்லாம் வாங்கிட்டுப் போனார். உங்க பேரு?"

"நெவர் மைண்ட்!"

"சரி எதுக்கும் வந்தா 'நெவர் மைண்ட்' போன் பண்ணதா சொல்றேன்"

"என்னவெல்லாம் பேருய்யா"

(தொடரும்)

பாரதம் எழுதிய விநாயகர்!

"என் எழுதுகோலின் வேகத்துக்கு இணையாக உன்னால் எழுத முடியுமா?"

மகாமுனி வேத வியாசர், உலகம் உய்வதற்காக இமயமலையில் யோக நிஷ்டையில் இருந்தார். அப்போது அவரது மனக் கண் முன்னால், மகாபாரத வரலாறு காட்சிகளாகத் தோன்றியது. பிரம்மதேவர் அவர் முன் காட்சியளித்து. "வியாச ராஜரே..! உலகம் உய்ய, இழந்த இதிகாசத்தைப் பாடுவீராக" என்று பணித்தருளினார்.

"பாடுகின்றவனே எழுதவும் செய்தால், இயற்றும் வேகம் தடைப்படும். நான் பாடப்பாட அதே வேகத்தில் எழுதக்கூடிய நல்ல அறிவாற்றல் உள்ள ஒருவர் தேவை" என்றார்.

"அத்தகைய பேராற்றல் உடையவர், ஞானமே வடிவாகிய கணேசப் பெருமான் மட்டுமே! அவரை வழிபட்டு அவரைக் கொண்டு எழுதச் செய்யும்" என்று ஆசி கூறி மறைந்தார் பிரம்மதேவர்.

வியாசரும், விநாயகப் பெருமானை மனம் உருகி அழைக்க, விநாயகர் தோன்றினார்.

"முனிபுங்கவனே! எல்லோரும் எந்தக் காரியமானாலும் எம்மை நினைத்தே அழைப்பதால், அளவு கடந்த வேலைகள் உள்ளன. நம்முடைய எழுதுகோலின் வேகத்துக்கு இணையாக உன்னால் பாட முடியுமா?" என்று கேட்டார். வியாசரும் "உங்கள் ஆசியிருந்தால் பாடுவேன்?" என்றார் அடக்கத்துடன்.

வியாசர் பாடப் பாட, விநாயகப் பெருமான் தமது தந்தத்தையே எழுதுகோலாக்கி, மேருமலை மீது எழுதியருளினார். மொத்தம் அறுபது லட்சம் கிரந்தங்களில் மகாபாரதத்தைப் பாடி முடித்தார்.

மகாபாரதத்தில் இல்லாத அறங்கள் வேறு நூல்களில் இல்லை. அறங்கள் அனைத்தும் பாரதத்துக்குள் அடக்கம். சிந்தனைக்கு விருந்தாக, அறியாமைக்கு மருந்தாக, வேதாந்தக் கருவூலமாக, அறநெறிப் பெட்டகமாகத் திகழும் மகாபாரதத்தை, உலகுக்குத் தந்து உதவிய ஸ்ரீகணேசரின் சேவை அதி அற்புதமானது.




* மொட்டைப் பிள்ளையார்



* பஞ்சமுக விநாயகர்


முதல்வனின் முதல் கோயில்!



எங்கள் ஊர் பிள்ளையார், ஆறுமுகமங்கலம் ஆயிரத்தெண் விநாயகர், தமிழ்நாட்டில் முதலில் வந்த பிள்ளையார் ஆவார். ஸ்தல வரலாற்றின்படி, சுமார் 2300 வருஷங்களுக்கு முன்னால், பாண்டியர்கள் கொற்கையிலிருந்து அரசாண்ட பொழுது, அரசன் செய்த யாகத்தில் கலந்துகொள்ள நர்மதை நதிக் கரையிலிருந்து வரவழைக்கப்பட்ட அந்தணர்களால் கொண்டு வரப்பட்டு ஸ்தாபிக்கப்பட்டவர்.

விநாயகரை முக்கிய தேவதையாகக் கொண்ட கோயில்களில் கொடிமரம், திருத்தேர் கொண்டு திருநாள் காணும் ஸ்தலம் இது மட்டுமே. இந்தக் கோயிலில் உள்ள உற்சவ மூர்த்திகளில் விநாயகப் பெருமாள், சோமாஸ்கந்தருடன் கூடிய அம்பாள், வள்ளி, தெய்வானையுடன் சுப்பிரமண்ய ஸ்வாமி, சிவகாமி அம்மையுடன் கூடிய நடராஜர் முதலிய பஞ்சலோக மூர்த்தங்கள் தவிர, மிக அபூர்வமான பஞ்சமுக விநாயகரும் வீற்றிருக்கிறார். சம நிலையில் ஐந்து முகத்துடனும், பத்துக் கரங்கள், ஐந்து தும்பிக்கைகளில், பல ஆயுதங்களுடனும், நடனமிடும் கோலத்தில் அமைந்துள்ள இந்த சிலாரூபம் பார்க்கப் பார்க்கத் திகட்டாதது.

சித்திரை மாதத்தில் நடைபெறும் பத்து நாள் திருவிழாவில் விநாயகப் பெருமான் பலப் பல வாகனங்களில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார். ஐந்தாம் நாள் அய்யனுடனும், அம்மையுடனும் சேர்ந்து உலா வருகிறார். ஏழாம், எட்டாம் திருநாட்களில் நடராஜருடன், பஞ்சமுக விநாயகரும் இணைந்து காட்சி தருவது சிறப்பு நிகழ்ச்சியாகும். பத்தாம் நாள் திருத்



உறவுக் கோலம்

பண்டிகை தினம்.
தெருவாசல் வரித்து
கோலம் போட்டிருந்தாள்
அம்மா.

மதிக்காது
மிதித்துச் சென்றோரால்
மனம் வருந்திய
என் பிள்ளை
சிறிதாகப் போட்டிருக்கலாமென்று
சிந்தனை உதிர்த்தான்.

'மிதித்தே பழகிய பாதங்கள்
பழகிப் போனதால்
வலியேதுமில்லை' என்றவளை
புரியாது பார்க்கிறான்...
புரிந்தது எனக்கு.

- சைதை முரளி

தேருடன் திருவிழா நிறைவடைகிறது.

கேது கிரகத்தின் அதிர்ஷ்ட தேவதையான விநாயகர், காளஸ்தீஸ்வரருடன் இருந்து அருள்பாலிக்கும் இந்தக் கோயில், கேது மற்றும் காலசர்ப்ப தோஷ பரிகார ஸ்தலமாகவும் விளங்குகிறது. வேண்டுதலின் பேரில் 108, 1008 தேங்காய் உடைத்து வழிபடுவது, இக்கோயிலில் வழக்கமாக இருக்கிறது. சமீபகாலங்களில் 1008 தீபம் ஏற்றி வழிபடும் முறையும் ஏற்பட்டிருக்கிறது. வழிபடுவோரின் குறைகள் நீக்கி ஏற்றம் தரும் எங்கள் ஊர் ஆயிரத்தெண் விநாயகர், மக்களின் மகத்தான தெய்வமாவார்.

- எஸ். சங்கரன், தூத்துக்குடி

கனவில் வந்தவன்!

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள அழகிய பாண்டியபுரம் கிராமத்தில் இருக்கும் பிள்ளையாருக்கு, 'மொட்டைப் பிள்ளையார்' என்று பெயர். சேத்தூர் ஜமீன்தார், அழகிய பாண்டியபுரம் கிராமத்தில் தங்கி இருந்த போது பிள்ளையாருக்கு 1008 தேங்காய் உடைத்திருக்கிறார். கடைசித் தேங்காய் உடைத்தபோது, அது பிள்ளையாரின் தலையில் பட்டு சிரசு பின்னமாகிவிட்டது. ஜமீன்தார் மிகவும் மனவேதனை அடைய, பிள்ளையார் அவரது கனவில் தோன்றி 'என் தலையைக் கொடுத்து உன் தலையைக் காப்பாற்றினேன்' என்று கூறியுள்ளார். அன்றிலிருந்து மொட்டைப் பிள்ளையாராகவே வீற்றிருந்து தம்மை நாடி வரும் பக்தர்களுக்கு அருள்பாலித்து வருகிறார் இந்த விநாயகப் பெருமான்.


- ஏ.ஜி. மகாதேவன்,
சென்னை

விநாயக மந்திரம்

"**ந**மோ வ்ராத பதயே நமோ
கணபதயே
நம, ப்ரமதே பதயே, நமஸ்தே அஸ்து
லம்போதராய
ஏக தந்தாய விக்ன நாசினே
சிவசுதாய வரதமூர்த்தயே நமோ நம"

இந்த மந்திரம் விநாயகப் பெருமானுக்குரிய எல்லா மந்திரங்களையும் உள்ளடக்கியதாகக் கருதப்படுகிறது. மனத்தூய்மையும், அகத்தூய்மையும் கொண்டு, ஓராயிரம் முறை இம்மந்திரத்தை உச்சரித்து விநாயகரை வழிபட்டால், நினைத்த காரியங்கள் வெகு சீக்கிரமாக நிறைவேறும்.

- பி. பாலாஜிராம்,
மதுரை



ல்லாத ணையம்!

'என்னிடம்
கொட்டிக் கிடக்கும் காதலை
எதைக் கொடுத்தும்
வாங்கிவிட முடியாது...
காதலைத் தவிர!' என்ற தபூசங்கரின் காதல் வரிகள் காணக் கிடைக்கின்றன www.tamil.com/ilavattam/ல். மொழிபெயர்க்கப்பட்ட சில காதல் கவிதைகளும் இங்கு கிடைக்கின்றன. tamil.com/ilakkiyam/kadhi/ பிரிவில் பாப்லோ நெருடாவின் மொழி பெயர்க்கப்பட்ட சில கவிதைகள் மின்னுகின்றன. மேலும் சில பிரபலங்களின் கவிதை பிம்பங்களும் புதைந்துள்ளன. எல்லாம் சரி... இத்தளம் முழுவதும் 'இ' என்ற 'உயிர்' எழுத்து இழந்து காணப்படுகிறது. (தைக் கேட்க ங்க யாரும் ல்லையா?)

மாலதி மைத்ரி, அருண் கொலாட்கர், குட்டி ரேவதி, குகன், நகுலன், பாவண்ணன், ஞானக்கூத்தன், சி.சு. செல்லப்பா, ரிஷி, ஹம்சத்வனி... இவர்களெல்லாம் ஒன்றாய் உட்கார்ந்திருக்கிறார்கள் webulagam.com/literature/kavita/ல். கவிதைகள் எழுத்துப் பிழைகளின்றி இருப்பது மனநிறைவைத் தருகிறது. இருந்தாலும் இத்தளம் அரிதாகவே அப்டேட் செய்யப்படுகிறதென்பது குறையே! பாரதியார் கவிதைகளும் இங்கு கிடைக்கின்றன. சில வருடங்களுக்கு முன்பு 'பாரதி கவிதைகளுக்குத் தனித் தளம் அமைக்க யாராவது முயற்சி செய்யுங்கள்' என்றார் சுஜாதா. இதுவரை அது நிறைவேற்றப்படவில்லை என்பதே உண்மை.



1968ல் ஸ்ரீநிவாச ராகவனின் 'வெள்ளைப் பறவை', 1999ல் அப்துல் ரகுமானின் 'ஆலாபனை', 2002ல் 'சிற்பி' பாலசுப்ரமணியத்தின் 'ஒரு கிராமத்து நதி', 2004ல் ஈரோடு தமிழன்பனின் 'வணக்கம் வள்ளுவ' இவையெல்லாம் தமிழில் சாகித்ய அகாடமி விருது பெற்ற கவிதை நூல்கள். மேலும் மூழ்கி முத்தெடுக்க sahitya-akademi.org -ல் குதிங்க. அள்ளிக்கோங்க!

மொத்தத்தில் இணையத்தைப் பொறுத்தவரை 'தமிழ்க் கவிதைகள்' இன்னும் முழு வீச்சில் வெளிச்சத்துக்கு வரவில்லை.

- ப்ரௌஸர்




பொதுவாகப் பெண் கவிஞர்கள் என்றாலே கந்தகக் கவிதைகள், பாம்பாய்ச் சீறும் பேட்டிகள்... என அவர்களுக்கென்று இறுக்கமான இமேஜ் எப்படியோ விழுந்துவிட்டது. ஆனால் "நாங்களும் ஜாலி பார்ட்டிங்கதாம்பா" என்று கூட்டணி போட்டுக் குதூகலிக்க ரெடியாயினர், தமிழச்சி, மதுமிதா மற்றும் லீனா மணிமேகலை மூவரும். விடுவோமா... நமது கேள்விகளால் கலாய்த்தெடுத்து விட்டோம். அந்த ஹைக்கூ சந்திப்பிலிருந்து...

இது சுனாமி சீஸன். நாளையே உலகம் அழிந்துவிடும் என்றால்...?

தமிழச்சி: உடனே என் கிராமத்துக்கு ஓடோடிப் போய் கம்மாக்கரையில் உட்கார்ந்து, கவிதை படிச்சுட்டே நல்லிசை கேட்பேன். இடையிடையே இளநீர்!

மதுமிதா: என் குடும்பத்தினருக்கு மூன்று வேளையும் சமைச்சுப் போடுவேன்.

லீனா: உலகம் அழியாம இருக்கறதுக்கு என்ன வழியிருக்கோ, அதைச் செய்வேன்.



உங்களைப் பற்றித் தெரியாத விஷயங்கள்!

தமிழ்: ● கல்லூரிக் காலத்தில் நடனக் கலைஞரா இருந்த நான், ஒரு வீணைக் கலைஞர் மீது நேசம் வைத்தேன்.

● வீரப்பன் மீசை மாதிரி யாராவது வைச்சிருந்தா, உடனே இழுத்துப் பார்க்கிற ஆசை இருக்கு.

● சந்தர்ப்பத்துக்குத் தகுந்த மாதிரி குரலை மாத்திப் பேசுவேன்.

மது: விக்ரம் 'காசி'யில் நடித்தது, பிரணாய் ராய் டீ.வியில் பேசுவது, இதையெல்லாம் யாருமில்லாத நேரத்துல 'இமிடேட்' செய்து பார்ப்பேன்.

லீனா: சறுக்கு மரம் பார்த்தால் குழந்தையா மாறி சறுக்கி விளையாடுவேன்.

உங்களுக்கான ஞாயிற்றுக்கிழமை எப்படியிருக்க வேண்டும்?

தமிழ்: பகலில் எனக்குப் பிடித்தவரோடு தனித்தீவில் விட்டுவிட வேண்டும். இரவில் மொட்டை மாடியில் இளைய நிலாவை ரசிக்க விருப்பம்.

மது: சமையல் தொந்தரவுகள் எதுவுமில்லாம, ஜாலியா நாள் முழுக்க டீ.வி பார்க்கணும்.

லீனா: அன்னைக்கு ஒரு நாளாவது அரக்கப் பரக்கக் குளிக்காம, நாள் முழுக்க அழுக்கா இருக்கணும்.

கடைசியாக அழுதது?

தமிழ்: ஆஸ்திரேலியா போயிருந்தப்போ சுடச்சுட காரசாரமா ஒரு உணவு சாப்பிட்டப்போ, கண்ணுல அழுகை பீறிட்டு வந்தது.

மது: 'அழகிய தீயே' படக்ளைமாக்ஸ்ல பிரசன்னா கண்ணீர் விட்டபோது, என்னையறியாம அழுதுட்டேன்.

லீனா: நான் காண்டாக்ட் லென்ஸ் போட்டிருக்கறதால வண்டியில போகும்போது தூசி விழுந்தது. 'விழுந்ததுதான் விழுந்தே, என் கண்ணுலயா விழுவே'ன்னு தூசிக்காகக் கண்ணீர் விட்டேன்.

தமிழ்க் கவிஞர்களே, எக்கணம் நீங்களும் பீட்டரிங் பார்ட்டிகளாக மாறுவீர்கள்?

தமிழ்: என்கிட்ட பீட்டரிங் பார்ட்டிங்க பேசும்போது, அவங்களை


அருவா + அல்வா = ஆண்கள்!
• மதுமிதா
• லீனா
• தமிழச்சி

கலாய்க்கிறதுக்காக நானும் தங்கிலீஷ்ல பேசுவேன்.

மது: தமிழே தமிழே, அழகிய மொழியே எனதுயிரே! உயிரே போனாலும் தங்க்லீஷ்ல பேச மாட்டேன்.

வீனா: நம்ம கவர்ன்மெண்ட் ஆபீஸுக்கு போன் பண்ணி 'ஐயா, குடிநீர் வரவில்லை'னு செந்தமிழில் செப்பினா ஒரு காரியமும் நடக்காது. தாட்பூட்னு இங்க்லீஷ்ல பேசிப் பாருங்க... தன்னால வேலை நடக்கும்.

சினிமாவில் ஹீரோயினாக நடிப்பீர்களா?

தமிழ்: ஸாரிப்பா, என் கால்ஷீட் ரொம்ப பிஸியாச்சே.

மது: ப்ச், ப்ச், நோ சான்ஸ். என் ப்ரைவஸி போயிடும்.

வீனா: அதென்ன நடிப்பீர்களா? ஆங்!

நீங்கள் தவறு செய்திருப்பதை எப்படிக் கண்டுபிடிக்கலாம்?

தமிழ்: ஆத்தாடி, உங்க கண்ணைப் பார்த்துப் பேசமாட்டோம்ல.

மது: அது எப்படின்னே தெரியலை. நான் தப்பு செஞ்சா யாராவது கண்டுபிடிச்சடறாங்க.

வீனா: எனக்கு பொய் பேசவே தெரியாது. நான் உளர்றதுலேயே கண்டுபிடிக்கலாம்.

சுட்டுத்தள்ள ஒரு சந்தர்ப்பம் கிடைத்தால்...?

தமிழ்: மனிதர்களை எதுக்குச் சுடணும்? அதைவிட என் தோழிகளோட அழகழகான துப்பட்டாக்களைச் சுடறதுன்னா, எனக்குக் கொள்ளை இஷ்டம்.

மது: சங்க இலக்கியங்களிலிருந்து சூப்பரான வரிகளையெல்லாம் சுட்டு ஒரு தொகுப்பு வெளியிடணும்.

வீனா: புத்தகம் படிக்கிறதைவிட... ஃப்ரெண்ட்ஸ் வீட்டுக்குப் போகும்போது, நல்ல புத்தகங்களை நைஸா சுட்டுட்டு வந்துருவேன்.

கண்ணாடி முன் நிற்கும்போது?

தமிழ்: கண்ணாடி பக்கத்துல போய், நானே என் கன்னத்தைக் கிள்ளி 'என் செல்லம் இல்லே, எந்தச் சேட்டையும் செய்யாம நல்லபடியா போயிட்டு வாடா'ன்னு எனக்கொரு முத்தா கொடுப்பேன்.

மது: இதெல்லாம் ஒரு மூஞ்சியா? சரி சரி, சிரிக்கும்போது அழகாத்தானே இருக்கேன்னு என்னை நானே எடை போட்டுக்குவேன்.

வீனா: 'கிளியோபாட்ரா, ஐஸ்வர்யாவையெல்லாம் தூக்கியடிக்கிற பேரழகிடி நீ'ன்னு மெச்சிக்குவேன்.

ஆண்கள்...!?

தமிழ்: நிலவு + சூரியன் + தென்றல் + புயல் + குழந்தை + அப்பா + அருவா + அல்வா = ஆண்கள்

மது: பாவப்பட்ட ஜென்மங்க. பெண்கள் போல வெளிப்படையா அழக்கூடத் தெரியாது.

வீனா: ப்பூ... ஆண்கள் இல்லாத உலகத்தை என்னால நினைச்சுக்கூடப் பார்க்க முடியாது. அப்படிப்பட்ட உலகமும் எனக்கு வேண்டாம்.

கோபம் வந்தால் எப்படி வெளிப்படுத்துவீர்கள்?

தமிழ்: அடுத்த நிமிஷமே 'வெடுக்'னு பேசி நல்லா திட்டிடுவேன். அப்போ என் கண்ணிலிருந்து ஜுவாலையெல்லாம் பார்த்ததா சொல்வாங்க.

மது: அந்த இடத்தை விட்டு நகர்ந்துடுவேன்.

வீனா: 'சப்'ன்னு அறைஞ்சிடுவேன். எது கையில கிடைக்குதோ தூக்கி வீசிடுவேன். முடிந்தவரை சம்பந்தப்பட்டவங்களுக்கு ஏதாவது சேதத்தை உண்டு பண்ணாம விட மாட்டேன்.

(அவ்வளவுதான்... அடுத்த நிமிடம் நாம் கிரேட் எஸ்கேப்.)



- ச.ந. கண்ணன்

படங்கள்: **ஸ்ரீஹரி**

இயற்கை அன்னை

திருப்பூர் கிருஷ்ணன்

மின்னல் விரல்களால் மேகக் கருங்கூந்தல்
சீவித் தலைமுடிப்பாள் - அதில்
வெண்மதி செங்கதிர் என்னும் இருமலர்
சூடி அலங்கரிப்பாள்!
கன்னங் கரியவள் காலைப் பொழுதினில்
வெண்மை நிறம் பெறுவாள் - தன்
காலைப் பதித்திடும் சோலை வனங்களில்
பச்சைப் பொலிவடைவாள்!

வெள்ளை நிறத்தினில் துள்ளும் அருவியாய்
உள்ளம் கவர்ந்திடுவாள் - நீர்
வீழ்ந்த இடங்களில் நீண்ட வழிகளில்
ஆறாய்த் தவழ்ந்திடுவாள்!
அள்ளிஅள்ளித் தரும் வள்ளல் அவள் அருள்
வெள்ளம் குறைவதில்லை - அவள்
ஆட்சியிலே இந்த வையத்தின் வளங்கள்
என்றும் மறைவதில்லை!

பூமியின் ஆழத்தில் தங்கம்வைரம் எனச்
செல்வங்கள் கோடி வைத்தாள் - அவள்
பவழங்கள் முத்துகள் போன்றவற்றைக் கடல்
தண்ணீரில் மூடி வைத்தாள்!
தேவியின் புகழை வண்ணத்தில் அச்சிட்டுத்
தோளில் சுமந்தபடி - தினம்
தேன்குடிக்கின்றன பூம்பட்டுப் பூச்சிகள்
பூவில் அமர்ந்தபடி!

அன்னை பெருமைகள் அத்தனையும் மொழிச்
சொல்லில் அடங்கிடுமோ! - இந்த
ஆகாயம் முழுதும் எழுதிய பொழுதும்
சொல்லி முடிந்திடுமோ!
சொன்னபடி, அவள் சொன்னபடி இந்தக்
காலம் கடக்கிறது - கொடும்
சுனாமி போல் பல சோதனை தாண்டியும்
ஞாலம் நடக்கிறது!

அந்த இரண்டு வார்த்தை!

"அப்பச்சிக்குக் கோபம் வந்தா நீங்கதான் ஃபேஸ் பண்ணணும்!"

அந்த நாள் ஞாபகம் - 13 ❖ திரையுலக நினைவுகள்

களத்தூர் கண்ணம்மா'வை பீம்சிங் டைரக்ஷனில் ஹிந்தியில் எடுத்தபோது, கிடைத்த அனுபவங்கள் அதுவரை எங்களுக்குக் கிடைக்காதவை.

கதாநாயகியாக மீனாகுமாரியைப் பார்த்துப் பேசுவதற்கு முன்பாக, அவர் எவ்வளவு சம்பளம் வாங்குகிறார் என்று விசாரித்தோம்.

''மூன்று லட்சம்'' என்றார் மீனாகுமாரியின் கணவர் அம்ரோஹி.

இதில் அப்பச்சிக்குக் கொஞ்சமும் உடன்பாடில்லை.

''ரொம்ப அதிகம்ப்பா. தமிழ் ஆர்ட்டிஸ்ட்டைப் போட்டே எடு'' என்றார்.

அப்போது அப்பச்சி ரஷ்யாவுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார். சென்னையிலிருந்து டெல்லிக்குப் போய், அங்கிருந்து ரஷ்யா போவதென்று திட்டம்.

அவர் கிளம்பியதும் நானும், என் மைத்துனர் வீரப்பனும் ஐம்பதாயிரம் ரூபாய் அட்வான்ஸ் எடுத்துக் கொண்டு போய், மூன்று லட்சம் சம்பளத்துக்கே மீனாகுமாரியை ஒப்பந்தம் செய்து விட்டோம். ஒப்பந்தத்தை முடித்துக்கொண்டு, நாங்கள் தங்கியிருந்த ஏர்லைன்ஸ் ஹோட்டலுக்குத் திரும்பினோம்.

நள்ளிரவு தாண்டிய நேரத்தில் டெலிபோன் ஒலித்தது.

''என்னப்பா ஆச்சு?'' எதிர்முனையில் அப்பச்சியின் குரல். என் வியப்பைப் புரிந்துகொண்டவராய், ''நான் டெல்லியில்தான் இருக்கேன். இன்னும் ரஷ்யாவுக்குக் கிளம்பலே. அப்புறம் யாரை ஃபிக்ஸ் பண்ணே?''

நான் மழுப்பியபடியே ''மீனாகுமாரியையே ஓ.கே பண்ணிட்டோம் அப்பச்சி!'' என்றேன்.

''எவ்வளவுக்கு?''

''மூணு லட்சம்.''

டெலிபோனிலேயே கன்னாபின்னாவென்று என்னை வாங்க ஆரம்பித்து விட்டார்.

''உங்களுக்கெல்லாம் பணத்தின் அருமை கொஞ்சம் கூடத் தெரியாது'' என்று ஆரம்பித்து இஷ்டத்துக்குத்



ஏவி.எம்.சரவணன்

திட்டினார். அன்றிரவு முழுவதும் எனக்குத் தூக்கமில்லை. நான் பொறுப்பேற்றதிலிருந்து அதுவரை அப்பச்சி என்னை அப்படித் திட்டியதில்லை.

"கவலை வேண்டாம். அப்பச்சி திரும்பியதும் நாம் எப்படியாவது அவரைக் 'கன்வின்ஸ்' செய்துக்கலாம்'' என்று என் மைத்துனர் அருண் வீரப்பன் எனக்கு ஆறுதல் கூறினார்.



* மீனாகுமாரி



* சுனில்தத்

கையெழுத்துப் போடுவதற்கு முன்பாக, மீனாகுமாரியுடன் நாங்கள் போட்டிருந்த ஒப்பந்தத்தை, சென்னைக்கு வந்ததும் எங்கள் நிறுவனத்தின் சட்ட ஆலோசகர் எம்.கே. சீனிவாசனிடம் காட்டினோம். அவர் சொன்ன கருத்துகள் எங்கள் வயிற்றில் புளியைக் கரைத்தன.

''என்ன இது? இப்படியொரு ஒப்பந்தம் போட்டிருக்கீங்க? இது ஒரு தலைப்பட்சமான ஒப்பந்தம். இப்படிப் போட்டிருக்கவே கூடாது'' என்றார் அவர்.

'மீனாகுமாரி நாற்பது நாட்கள்தான் எங்கள் படத்துக்காக நடிப்பார். அதற்கு மேல் நடிப்பதும் நடிக்காததும் அவரது விருப்பம். ஒப்புக் கொண்டிருக்கும் சம்பளம், அந்த நாற்பது நாட்களுக்குத்தான். மேற்கொண்டு அவர் விருப்பப்பட்டு நடித்தால், அப்படி நடிக்கும் ஒவ்வொரு நாளுக்கும் 'புரோ ரேட்டா' அடிப்படையில் சம்பளம் தர வேண்டும். வசனங்களை மீனாகுமாரி 'அப்ரூவ்' பண்ணினால்தான் அவை பயன்படுத்தப்பட வேண்டும். உடைகளும் அப்படியே...' என்று ஏகப்பட்ட நிபந்தனைகள் அந்த ஒப்பந்தத்தில் இருந்தன.

"இவையெல்லாம் சரிப்பட்டு வராத நிபந்தனைகள். இந்த ஒரு தலைப்பட்சமான அக்ரிமெண்ட் தேவையில்லை. இதில் கையெழுத்துப் போட வேண்டாம்'' என்றார்.

''நாங்கள் மீனாகுமாரிக்கு அட்வான்ஸ் கொடுத்து விட்டோம். 'களத்தூர் கண்ணம்மா' படக் கதையால்





● அருண்வீரப்பனுடன் நான்...

அவர்கள் ரொம்பவும் 'இம்ப்ரஸ்' ஆகிவிட்டார்கள். ஒப்பந்தப் படிவத்தில் பலவிதமாக கண்டிஷன்ஸ் இருந்தாலும், நமக்கென்று வரும்போது அவங்க கண்டிப்பாக இருக்க மாட்டாங்கன்னு தோணுது. எனக்கு நம்பிக்கை இருக்கு. கையெழுத்துப் போடலாம்' என்று நான் சொன்னதற்கு, ''எனக்கொண்ணுமில்ல சரவணன். நாளைக்கு அப்பச்சிக்குக் கோபம் வந்தா, நீங்கதான் ஃபேஸ் பண்ணணும். 'நான் வேணாம்னு சொன்னேன். ஆனா சரவணன்தான் பிடிவாதமாயிருந்தார்'னு நான் சொல்லிடுவேன்'' என்றார் எம்.கே.எஸ்.

''ஒரு சின்ன வேண்டுகோள்'' என்றேன். ''அப்படி ஒரு நிலைமை வந்தா அப்ப வேணும்னா சொல்லுங்க. நீங்களே போய் சொல்ல வேண்டாம்.''

''ஓ.கே சரவணன். ஆனா அப்படி அப்ப சொல்றப்பக்கூட, 'அப்பவே நான் சொன்னேன். சரவணன்தான் இப்ப சொல்ல வேணாம்னு சொன்னான்'னுதான் சொல்லுவேன்'' என்றார் எம்.கே. சீனிவாசன்.

மீனாகுமாரி அற்புதமாக ஒத்துழைத்து அருமையாக நடித்துக் கொடுத்தார். நாற்பத்தைந்து நாட்கள் நடித்தார். ஆனால் மேற்கொண்டு பணம் எதுவும் கேட்கவில்லை.

அந்தப் படத்தில் யாரை ஹீரோவாகப் போடுவது என்ற பிரச்னையும் தலையெடுத்தது.

மனோஜ்குமார், தர்மேந்திரா இரண்டு பேருக்குமே தலா இருபதாயிரம் ரூபாய் சம்பளம் பேசி, ஆயிரம் ரூபாய் அட்வான்ஸும் கொடுத்திருந்தோம்.

'யாரைப் போடலாம்' என்று கமல் அம்ரோஹியை யோசனை கேட்டேன்.

''மீனாகுமாரி 'லட்கி' (இளம்பெண்) அல்ல. 'அவுரத்' (மங்கை). ஆகவே ஹீரோவா ஒரு 'லட்கா'வை (சின்னப் பையன்) போடக் கூடாது. 'ஆத்மி'யை (இளைஞன்)த்தான் போடணும்'' என்று கிண்டலடித்தார்.

'களத்தூர் கண்ணம்மா' கதை ஹீரோயின் ஓரியன்டட். இப்படி கதாநாயகிக்கு முக்கியத்துவம் தரும் படங்களில் நடிக்க, பெரிய பிரபல கதாநாயக நடிகர்கள் தயக்கம் காட்டுவதுண்டு என்பதால், மனோஜ்குமார், தர்மேந்திராவை நாங்கள் மனத்தில் வைத்திருந்தோம்.

சுனில்தத்தைப் போடலாம் என்று பேச்சு வந்தது. எங்களுக்கும் உடன்பாடுதான். ஆனால் அதற்கு முன், நாங்கள் ஹிரிகேஷ் முகர்ஜியின் டைரக்ஷனில் தயாரிக்கப்பட்ட 'சாயா' படமும், அப்புறம் அவர் நடித்த வேறு சில படங்களும் சரியாகப் போகாததையும் நண்பர்கள் சுட்டிக் காட்டினார்கள்.

சுனில்தத்தைப் போடலாம் என்று நாங்கள் விவாதிப்பதை அறிந்த எங்கள் கல்கத்தா பங்குதாரர் வி.ஏ.பி.ஐயர், ஒரு தந்தி அனுப்பினார்.

'டோன்ட் புட் த பாக்ஸ் ஆபீஸ் பாய்ஸன்' என்று அந்தத் தந்தியில் இருந்தது.

அதாவது சுனில்தத்தைப் போட்டால், பாக்ஸ் ஆபீஸ் தோல்வியாகப் படம் அமையுமாம். வெற்றியைக் குலைக்கும் விஷம் போன்றவராம்

சுனில்தத்.

அந்தத் தந்தியை மடித்துத் தன் மேஜை அறையில் அப்பச்சி வைத்துக் கொண்டார்.

கடைசியில் நாங்கள் சுனில்தத்தைத்தான் ஒப்பந்தம் செய்தோம்.

ஈகோ கொஞ்சமுமின்றி, அந்தப் படத்தில் அருமையாக அவர் நடித்துக் கொடுத்தார். கமல்ஹாசன் நடித்த ரோலில், பப்லு என்ற குழந்தை நடித்தது.

படம் வெள்ளி விழா கண்டது. 'மைகுப் ரஹூங்கி' என்ற அந்தப் படத்தின் வெள்ளி விழாவை சென்னையில் எங்கள் ஸ்டுடியோவில் சிறப்பாகக் கொண்டாடினோம்.

படத்தில் நடித்த எல்லாக் கலைஞர்களும் அந்த விழாவில் மகிழ்ச்சியுடன் கலந்து கொண்டார்கள். அப்போது பீம்சிங்கின் ஆடிட்டர் டபிள்யூ.எஸ். ராஜு, அப்பச்சியிடம் படத்தைப் பாராட்டிவிட்டு, 'படத்தின் வெற்றிக்கு மீனாகுமாரியின் அற்புதமான நடிப்புதான் காரணம். அவரைத் தேர்ந்தெடுத்து அந்த ரோலில் போட்டது மிகச் சரியான முடிவு' என்றபோது, அருகேயிருந்த என்னைச் சுட்டிக்காட்டி "அவன்தான் காரணம்" என்றார் அப்பச்சி.

அந்த இரண்டு வார்த்தை பாராட்டால், என் இதயம் நிறைந்தது.

(தொடரும்)

மூன்றாவது வேஷம்!



எனக்குப் புரியவில்லை தீவிரமாக
உரையாற்றும்
வேஷமும் வேஷமும் பேசிக் கொண்டால்
என்ன பலன் விளைந்திடுமென்று

போட்டுப் பார்க்கலாம்
மூன்றாவது வேஷத்தை என்பதைத் தவிர
என்ன பலனோ வேஷங்கட்கு

அற்பமும் அற்பமும் பேசிக் கொண்டால்
மூன்றாவது அற்பத்தைத் தவிர
பிறிதென்ன தோன்றும்

சுயநலமும் சுயநலமும்
பேசிக் கொண்டால்
பொது நலமா உருவாகும்

கணிதத்தில் தவிர
மூன்றாம் எண்ணிக்கை தவிர
பயனொன்றில்லை

பா. சத்தியமோகன்



இரவு விழிப்பவன்

மகுடேசுவரன்

முழு ராத்திரியும் உறங்காதிருந்து
மோனம் அனுஷ்டிப்பவன் நான்

பழகிய சாலையில்
அல்லது வெட்டவெளியில்
வாய்ப்பிருந்தால் ஒரு மலைமுகட்டில்
பேசாமல் அமர்ந்து
புலன் விழித்திருப்பவன்

பகல் வெளிச்சங்களால்
வெந்து தகிக்கும் எனது தினங்களுக்கு
மருந்தாக
நன்கு இருண்டு குளிர்ந்த ஓர் இரவை
உடல்மீது படிய விடுவேன்

இரவுகளில் களித்தாடும்
எண்ணற்ற உயிரிகளைச் சந்திப்பேன்
பாதத்தின் மீதேறி ஓடும் எலியை
வழிமாற்றித் திரும்பும் பாம்பை
செவியுரசிப் பறக்கும் கூகையை
மிக்குயர் வானில் துருவ நாரைகளை

ஓரிடம் தேர்ந்து மல்லாந்து காண்பேன்
என் முழு வானை
என் விழி கொள்ளும்
அளப்பரிய மீன்களை

விடிந்ததும் திரும்புவேன்
எனது சிறைச் சாலைக்கு

அப்படித்தான்
அடர்மழைக்கு முந்தைய
முற்றிக் கனிந்து ஒழுத ஓர் இரவில்
என் மீள்வழிகளைத்
தொலைத்துவிட்டிருந்தேன்

அன்று முதல்
சூரியன் இறந்து சாம்பல்
திட்டாகியிருந்தது
எங்கும் இரவு மட்டுமே இருந்தது


மீண்டும் விடியலற்ற நிரந்தர இரவு.

நெல்லை ஜெயந்தா

வெள்ளி இழைத்த பட்டு
வெட்டி விட்ட கூந்தல்
எடைக்கு எடை நகையோடு
இவள்
எத்தனை முறை
சிரித்தென்ன...
சரிந்தோடும் கூந்தல்
சாயம் போன தாவணி
ரப்பர் வளையலென
ரகசியமாய்ச் சிரித்த முகம்
பசுமரத்தாணியாய்
பதிந்து தொலைத்தபின்

'சவப்பெட்டியிலேனும்
அறையப்பட்டிருக்கலாம்'
'வயிறு விதி'யை எண்ணி
வருந்துகிறது
படப்பெட்டிக்குள்ளிருக்கும்
பம்பர ஆணி!

வாடகை வீட்டின்
வரவேற்பறை!
பெரிதும் சிறிதுமாய்
பிகாசோ ஓவியங்கள்
வீட்டுக்காரரின்
விழிகள் மட்டும்
அகல மறுக்கின்றன
ஆணிகளை விட்டு!





பழுதடைந்த நினைவுகளின்
குடை சாய்ந்த இரவொன்று
கும்மிருட்டுக் கல்லாகி
உறக்கத்தின் இளம் தளிர்க்கொடியி
'நச்'சென விழுந்தபோது
அழைத்து அழைக்க முடியாது
அழைக்கும் முன்பான
விலக்கத்திற்குப் பின்
நேபாள கூர்க்காவின்
விசிலும் தரைதட்டும் ஒலியும்
நடுங்கும் இரவின்
கைத்தடியானது.
இரவு மட்டும் அவிழ்த்துவிடப்படும்
பெரும் பணக்காரர்களின்
நாய்கள் குரைத்தபோதெல்லாம்
பகலெல்லாம் கட்டப்பட்டிருந்த
சோகங்கள் கேட்கத் தொடங்கின
நள்ளிரவில்.
கரைந்து பறக்கும்
சில காகங்களின்
எதிர்பாரா தேடலின்
மெலிந்த மௌனத்தில்
தலைசாய்த்துக் கொண்டன
கனவுப் பனி பற்றிய
அதிருப்திகள் ஒவ்வொன்றும்.

ஹார்ட்டுக்குள்ள

**இது ஒரு
பாடலின் கதை! ஆனால்
ஸ்டோரியல்ல, நெசம்!**

பாடல் டிஸ்கஷன். இசைச் சுனாமி 'ஏ.பி.சி.டி ஏகா'வின் ஸ்டுடியோ. உடன் டைரக்டர் 'டச்சிங்'தாஸ், புரொடியூசர் தில்வாலே கபூர் மற்றும் புதிய கனவுகளோடு முதன்முதலாகப் பாடல் எழுத வந்திருக்கும் பாடலாசிரியர் கவிச்சாரதி.

டைரக்டர்: அட... அட... நினைச்சாலே ஏதேதோ அரிக்குது. நான் யோசிச்சு வைச்சிருக்கிற சிச்சுவேஷனைத்தான் சொல்றேன்.

மியூசிக்: சீக்கிரம் சொல்லுங்க. கை, காலெல்லாம் படபடன்னு வருது. எதை யாவது போட்டு உடைக்கணும் போல இருக்கு. போட்டுத் தாக்கிரலாம்.

டைரக்டர்: இது ரொம்ப மென்மையான ஸீன். ஆனா பாட்டு பிரேக் இல்லாத தண்ணி லாரி மாதிரி தறிகெட்டு ஓடணும்.

தயாரிப்பு: டைரக்டர் சார், எவனும் எதிர்பார்க்காத மாதிரி ஸீன் சொல்லுங்க.

டைரக்டர்: இது ஹீரோ - ஹீரோயினுக்கு காதல் 'கண்ட'மேனிக்கி வர்ற ஸீன். கேளுங்க. ஹீரோயின் ரோட்டுல நடமாடும் ப்யூட்டி பார்லரா நடந்து வர்றா. அப்போ ஒரு கல்லு தடுக்கிவிட, செருப்பு அறுந்து போயிடுது. வெறுப்புல செருப்பைத் தூக்கி எறியறா. அது ஹீரோ முதுகுல போய் விழுது. ஹீரோ 'பக்'குனு பாக்க, ஹீரோயின் 'திக்'குனு நிக்க, அங்க 'டக்'குனு காதல் 'லேண்ட்' ஆகுது. இங்க 'கிக்'கா ஒரு சாங்!

தயாரிப்பு: வாரே வாவ்! ஆஸ்திரேலியாவில ஆல்ப்ஸ் மரங்கள்ல நிறைய கலர் கலர் செருப்பா தொங்கவிட்டு, ஸாங்கை 'ரிச்'சா பின்னிடலாம்.

மியூசிக்: செம சிச்சுவேஷன். உருட்டுக் கட்டை, அம்மிக் குழவி, விளக்குமாறு, பாட்டா செருப்பு இதையெல்லாம் பழைய தகரத்துல தட்டி, புது மியூசிக் வர வைச்சு பெண்டெடுத்திடலாம். கவிஞரே, 'நச்'சுனு நாலு வரி சொல்லுங்க!

கவி: ரொம்ப அருமையா வரும் சார். எனக்குள்ளே வார்த்தைகள் வட்டம் போட்டுக் கொட்டம் அடிக்கின்றன. ஒவ்வொன்றாக அவிழ்த்து விடுகிறேன். கேளுங்கள்.

தவழ்ந்து வந்தது காலணியல்ல!
தாவணி இதயம்...! லலலா!
உறைந்து போனேன் நானும் மெல்ல!
காதல் உதயம்...! லலலா!
செவ்வாயில் வார்த்தைகள் பின்னும்
செவ்வானம் வெட்கத்தில் மின்னும்
லலல்லா! லலல்லா!

தயாரிப்பு: அய்யய்யே! தமிழ்ல ஏதாவது பாட்டு கட்டச் சொல்லுங்க! அருவருப்பா இருக்குது!

மியூசிக்: கவிஞரே! 'பாகவதர்' பாடுறாப்பல இருக்குது! வார்த்தைக்கு 'பாப் கட்டிங்' பண்ணி வெளிய அனுப்புங்க!

டைரக்டர்: ஆமா! ஒவ்வொரு வார்த்தையும் தலை விரிச்சு 'பேயா' ஆடணும்! 'ஆட்டம் பாம்' வெடிக்கணும்! காதெல்லாம் துடிக்கணும்!

(கவிஞர் கதி கலங்குகிறார். சிறிது நேரத்தில் சுதாரித்துக் கொண்டு களமிறங்குகிறார்.)

கவி: சார், இதைக் கேளுங்க!

காலணி காலணி காலணி
காதலி வீசிய காலணி
தாவணி தாவணி தாவணி
மனசுக்குள் மன்மத ஆவணி

மியூசிக்: இன்னா கவிஞரே! புரிஞ்சுக்க மாட்டியே! லோலாய் பண்றியே! மக்களுக்குப் புரியற மாதிரி கானா கட்டுப்பா!

டைரக்டர்: இல்லி, மாஞ்சா, ரவுசு, லொள்ளு, உம்மா, போடாங், சோடா, பேட்டை, கூத்து அப்படின்னு 'காதல் வார்த்தை'யாப் போட்டுக் குத்துவியா,

அதவிட்டுப்புட்டு!

தயாரிப்பு: ஆமா. தட்டுற மியூசிக்லயும், கட்டுற பாட்டுலயும் அவன் அவனுக்கு வயித்தைப் புரட்டணும், காதுல இருந்து ரெண்டு சொட்டு ரத்தம் வரணும், தியேட்டர் சீட்டெல்லாம் கிழியணும்.

மியூசிக்: கவிஞரே! முதல்ல 'காலணி', 'தாவணி', 'ஆவணி' மாதிரி கெட்ட வேர்ட் ஸையெல்லாம் தூக்கிட்டு 'சப்பல், லவ்வு, டாவு' மாதிரி மென்மையான வேர்ட்ஸைக் கொண்டுவாங்க!

(கவிஞர் காலரா வந்த கோழியாக முழிக்கிறார். கொஞ்சம் கொஞ்சமாய் லைனுக்கு வருகிறார்.)

கவி: *சார்!* இதுக்கு முன்னாடி என் பேனா இப்படிப் பினாத்துனதே இல்ல. அப்படி 'ஜில்'வுன்னு வார்த்தைகளைப் பிடிச்சுருக்கேன். பாடுறவங்களே திக்கித் திணறுவாங்க!

மியூசிக்: அதப்பத்தி நீங்க கவலைப் படாதீங்க. உஸ்பெஸ்கிதான்ல இருந்து 'உஸ்தூத்கான்'னு ஒரு பெரிய பாடகரையும், உகாண்டாலயிருந்து 'கண்டானி'ன்னு ஒரு பாடகியையும் அறிமுகப்படுத்தப் போறேன். எந்த வார்த்தையையும், அவங்க வங்க தாய்மொழில எழுதி வைச்சு கடிச்சுத் துப்பிருவாங்க. பாட்டைச் சொல்லுங்க!

கவி: *ஏ விர்ருனு வந்த சப்பலு!*
ஓ சர்ருனு போகும் கப்பலு!
ஹார்ட்டுக்குள்ள விக்கலு!
இது லவ்வு பண்ணும் நக்கலு!

டைரக்டர்: அட! அட! கவித! கவித! மேல போங்க!

(கவிஞர் குஷியாகி, மேலும் குத்து கிறார்)

கவி: *வாயிக்குள்ள பல்லு!*
வழியுது பார் ஜொள்ளு!
தில்லிருந்தா நில்லு!
நீ பனைமரத்துக் கள்ளு!

மியூசிக்: ...ம் அப்படிப் போட்டுத் தாக்குங்க. இன்னும் 'தெறிச்சு ஓடுற' மாதிரி ரைமிங்கா சொல்லுங்க!

கவி: *ஹே! டோங்குரா! டோங்குரா!*
நீ கடன்காரா! கடன்காரா!
அரியர்ஸ்லோட அலைஞ்சேனே!
அரிப்பெடுத்தா சொறிஞ்சேனே!
லொக்கு! லொக்கு! லொக்கு!
நீயும், நானும் கொக்கு!

தயாரிப்பு: சூப்பரு கவிஞரே! சொரு கிப்புட்டீங்க! அட்வான்சைப் பிடிங்க!

டைரக்டர்: இப்படி ஒவ்வொரு பாட்டுலயும் நாசமாக்கிரணும்.

கவி: கட்டாயமா! நாளைக்குக் கூவத்துல குளிச்சிட்டு வாரேன். இன்னும் 'கப்போட' பாட்டெழுதலாம்.

மியூசிக்: கலக்கிடணும். நேஷனல் அவார்டு, ஸ்டேட் அவார்டு எல்லாத் தையும் அள்ளிரலாம்.

\- முகில்

விக்கலு!



மகுட வைரம்

"உன்னைச் சிறை செய்து இங்கேயே வைத்துவிடப் போகிறேன்!"

27. நந்திவர்மன் நாடகம்

காஞ்சிக் கோட்டைக்குள் அந்த அழகிய ரதம் நுழைந்தபின்பு, விபரமறியாத பல ராஷ்டிரகூட வீரர்கள் வாழ்த்துக் கோஷங்களுடன் ரதத்தைத் தொடர்ந்து வந்து அரண்மனை வாயிலில் கூட்டமாக நின்றார்கள். ரதத்துடன் வந்த வீரர்களுடன் அளவளாவவும் தொடங்கினார்கள்.

தீட்சண்யமான விழிகளுடனும், ஏறக்குறைய நந்திவர்மனைப் போலவே உயர்ந்த, திடமான உடலமைப்புடனும் இறங்கிய துருவனை, வேகமாகப் புரவியில் வந்து எதிர்கொண்ட நந்திவர்மன் அணைத்துக் கொண்டான். நந்திவர்மனை வணங்கி வாழ்த்தும் பெற்றுக் கொண்ட துருவன், மன்னனுடன் இணைந்தே அரண்மனைக்குள் நுழைந்தான். இருவரும் ஒன்றாக வருவதைக் கவனித்த மகாராணியின் சித்தத்தில் உஷ்ணம் ஏறினாலும், முகம் வரவேற்கும் பாவனையில் மலர்ந்தே கிடந்தது.

"வர வேண்டும் துருவா. இத்தனை காலம் கழித்து என் நினைவு இப்போதுதான் வந்ததா உனக்கு?" என்று வரவேற்கவும் செய்தாள்.

"நினைவு என்றுமிருக்கிறது சகோதரி. ஆனால் மக்கள் பணி எதிரிலிருக்கும் போது, மற்றவற்றைக் கவனிக்க காலமேது?" துருவனின் பதில் நிதானமாகவே வந்தது.

"சரி, நீ சென்று நீராடிவிட்டு வா. விருந்து தயாராக இருக்கிறது. பிறகு அமர்ந்து நிதானமாகப் பேசலாம்" என்றவள், யவன மங்கையரை அழைத்து துருவனை அழைத்துச் செல்ல உத்தரவிட்டாள். பின்னர் வாயிலை அடைந்தவள் தன் உபதலைவர்களை அழைத்து, துருவனுடன் வந்த வீரர்களை 'தக்கபடி' கவனிக்கவும் உத்தரவிட்டாள்.

துருவனுக்கு ஏற்பாடு செய்திருந்த விருந்தும், உபசரிப்புகளும் மிகப் பலமாகவே இருந்தன. அந்த அதீத உபசாரத்தில் பின்னால் அபாயம் மறைந்திருப்பதை உணர்ந்து கொண்ட நந்திவர்மனின் விஷமப் புன்முறுவல் மகாராணியை சங்கடப்படுத்தியது. விருந்து முடிந்து மேன்மாடத்தில் வந்து அமர்ந்த துருவனை நோக்கிய மகாராணி, "இப்போது சொல் துருவா, ராஷ்டிரகூடத்தில் மன்னர் நலமா? உன் தாய் நலமா?" என்றாள்.

தான் சொந்த சகோதரனல்ல, கிளை வம்சத்தில் வந்தவன்தானென்பதையும் மறைமுகமாகக் குறிப்பிடும் அந்தக் கேள்வியின் பொருள், நன்றாகவே புரிந்தது துருவனுக்கு. அவன் பதில் மிகத் தெளிவாகவே வந்தது. "மக்களைத் தவிர மற்றவர்கள் அனைவருமே நலமாகவே இருக்கிறார்கள் சகோதரி."

நந்திவர்மன் குறுக்கிட்டான். "மக்கள் நலத்துக்கு என்ன குறை துருவா? மக்களுக்காகத்தானே மன்னர் கோவிந்தர் அரியணையில் அமர்ந்திருக்கிறார்?"

விஷ்வக்ஸேனன்



போலியான வியப்பு ஒலிக்க நந்திவர்மன் கேட்ட கேள்வி, அடுத்து நேரவிருந்த விபரீதத்துக்கு அடியெடுத்துக் கொடுத்தது.

ரேவாதேவியின் குரலில் உஷ்ணம் தெரிந்தது. "துருவா, எந்த ஆட்சியிலும் குறை கூறுபவர்கள் இருக்கத்தான் செய்வார்கள். அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளக் கூடாது"

துருவன் மன்னனை நோக்கினான். "தாங்களே கூறுங்கள். மன்னனுக்காக மக்களா? அல்லது மக்களுக்காக மன்னனா?"

"இதில் சந்தேகமென்ன? மக்களுக்காகத்தான் மன்னன். எக்காலத்திலும் தமிழகத்தில் அதுதான் அரசதர்மம். ராஷ்டிரகூடத்து தர்மங்களைப் பற்றி நான் அதிகம் அறிந்திருக்கவில்லை துருவா'' நந்திவர்மனின் பதில் தெளிவாக வந்தது.

''ராஷ்டிரகூடத்தில் மன்னர் கோவிந்தரின் நிலையும், கொள்கையும் வேறாக இருக்கிறது மன்னவா" - துருவனின் குரலில் வருத்தம் ஒலித்தது.

"துருவ வர்மா..." - மகாராணியின் குரல் உயர்ந்து ஒலித்தது.

அந்த நாடகம் விரைவில் ஒரு முடிவுக்குக் கொண்டு வரப்படும் என்பதை அறிவித்த மகாராணியின் குரலிலிருந்த உஷ்ணத்தை கவனித்த நந்திவர்மனின் விஷமப் புன்முறுவல் இன்னும் விரிந்தது.

துருவன் தொடர்ந்தான். "உண்மையைத்தான் கூறுகிறேன் சகோதரி. கோவிந்தரின் நினைவு சதா மதுவிலும், மங்கையர் நினைவிலும் உல்லாசத்திலேயே அமிழ்ந்து கிடக்கிறது. மந்திரி மண்டலத்தாரும் கங்க நாட்டு சிவமாறனாலும், மாளவத்து வத்ஸராஜனாலும் செயலிழந்து கிடக்கிறார்கள். கோவிந்தரை இந்த நிலையில் வைத்திருப்பதே அவர்கள்தாம்''

''போதும், நிறுத்து'' - மகாராணி சீறினாள்.

''கேட்பதற்கே மிகச் சங்கடமாக இருக்கிறதே. ஏன் துருவா, பேரமைச்சர் அறிவிலும் வயதிலும் மூத்தவராயிற்றே. அவருமா எடுத்துக் கூறவில்லை?'' நந்திவர்மன் வெகு அக்கறையோடு விசாரித்தான்.

"எடுத்துக் கூறுவதென்ன, இடித்தே கூறிவிட்டார் பலமுறை. பயனேதுமில்லை மன்னவா''

''படைத்தலைவர்களும், உபதலைவர்

களும் என்னதான் செய்கிறார்கள். பாதுகாப்புக்கு அபாயமாயிற்றே. அவர்களுமா கோவிந்தருக்கு எடுத்துரைக்கவில்லை?" - முக்கியக் கட்டத்துக்கு இழுத்தான் மன்னன்.

"படைத் தலைவர்கள் இரு பிரிவாகப் பிரிந்து கிடக்கிறார்கள் மன்னவா. ஒரு பிரிவு கங்கர்களுடனும், மாளவத்து வீரர்களுடனும் சேர்ந்து, மக்களை அதிகாரம் செய்கிறார்கள். வரிகளை வசூலிப்பது பகற்கொள்ளையாகவே நடக்கிறது. மக்கள் அனுபவிக்கும் கொடுமைகளுக்கு எல்லையே இல்லாமற்போய்விட்டது. மற்றொரு பிரிவு மக்களைக் காக்கவும், கொடுமைகளிலிருந்து மீட்கவும் முயல்கிறார்கள். அவர்களை புரட்சிக்காரர்கள், கலகக்காரர்கள் என்றும் கோவிந்தரிடம் சித்திரிக்கப்படுகிறார்கள்"

"சரி, துருவா. நீ என்ன செய்யப் போவதாக உத்தேசித்திருக்கிறாய்? இளவல் என்ற முறையில் உனக்கும் இதில் பொறுப்புகள் உள்ளனவே?" - நந்திவர்மன் விசாரிப்பில் சுவாரசியம் தெரிந்தது.

"என் முடிவு சற்றுக் கடுமையானது தான். அதை சகோதரி ஏற்றுக் கொள்வதும் சற்றுக் கடினம்தான். மக்கள் நலன் கருதி நான் இதைச் செய்யத்தான் வேண்டும்"

"மக்கள் நலன் என்றால் செய்யத்தான் வேண்டும். ஆனால் என்ன செய்யப் போகிறாய்?" ஆவலுடன் வந்தது நந்திவர்மனது குரல்.

"அரியணையிலிருந்து மன்னரை அகற்றிவிட்டு, என்னை அமர்த்தவேண்டுமென்று மக்கள் விரும்புகிறார்கள். இருமுறை இதற்காக புரட்சியும் செய்துவிட்டார்கள். மக்கள் விருப்பம்தான் என் விருப்பமும். அதற்காக உங்களிடம் உதவி கோரித்தான் வந்திருக்கிறேன்."

"நீ உதவி கோரும்போது நான் செய்ய வேண்டியது கடமையாயிற்றே துருவா. ஆனால் இது உங்கள் அரச குடும்பத்தின் விவகாரம். மகாராணியின் அனுமதியின்றி நான் என்ன செய்ய முடியும். .என்ன சொல்கிறாய் தேவி? பாவம், துருவன் உதவி என்று வந்து நிற்கிறான்" நந்திவர்மன் மகாராணியை நோக்கினான்.

ரேவாதேவியின் முகமும் விழிகளும் சிவந்து ஜொலித்தன. "துருவா, எத்தனை துணிச்சல் உனக்கு? என் எதிரிலேயே மகாராஜா கோவிந்தரை பழித்துக் கூறி விட்டு, அவரை அகற்றக் கூறுமளவிற்கு நீ வளர்ந்து விட்டாயா? யார் கூறிய துர்போதனையிது? இதற்கு என்னிடமே உதவி கோர எப்படி மனம் வந்தது? பாச உணர்ச்சியே அற்றுவிட்டதா உனக்கு?

"அதுதானே, எப்படி மனம் வந்தது துருவா? அவர் உனக்கும் மூத்த சகோதரர் அல்லவா?" - நந்திவர்மன் குரலில் வியப்பு தொனித்தது.

"மன்னர்களின் உறவுகளைவிட, மக்கள் நலன்தான் பெரிது என்பதைத் தங்களிடம் தான் கற்றேன் மன்னவா. மக்கள் படும் இன்னல்களை நேரில் கண்டால்தான் சகோதரிக்கு உண்மை நிலை புரியும். மக்களுக்குக் காவலனாக இருக்க வேண்டியவரே, காலனாக மாறுவதும், மாற்றானும் அதில் பங்கு கொள்வதும் மிகக் கொடுமை. இதே நிலை நீடித்தால் ராஷ்டிர கூடத்தை கங்கனும், மாளவனும் பங்கு போட்டுப் பிரித்துக் கொண்டு விடுவார்கள். கோவிந்தரும் அவர்களாலேயே அழிக்கப்படுவார்"



துருவனின் பதில் தெளிவாக வந்தது.

"துருவா, எனக்குப் புரிந்துவிட்டது" - மகாராணியின் குரலில் எகத்தாளம் ஒலித்தது.

"என்ன புரிந்துவிட்டது சகோதரி?"

"ஆமாம். என்ன புரிந்தது தேவி? எப்படியோ உனக்கு எல்லாம் புரிந்துவிடுகிறது" - நந்திவர்மன் பாராட்டினான்.

"துருவா, உனக்கு உன் மாமன் விஷ்ணு வர்த்தனனின் போதனையும் தூண்டுதலும், அரியணைமீது மோகம் கொள்ள வைத்து விட்டன. அதற்கு மக்கள்மீது பழியைப் போடுகிறாய்."

"ஆகா, அப்படியும் இருக்கலாம்"

நந்திவர்மன் மகாராணியை ஆமோதித்தான்.

"சகோதரி, இது அபாண்டம். விஷ்ணுவர்த்தனர் மானவத்துக்கு அடங்கிய சிற்றரசல்லவா? வத்ஸ ராஜனுக்கு அடங்கியவர் ராஷ்டிரகூடத்துக்கு எதிராக நடக்க இயலுமா?"

"அதுவும் சரிதான், நடக்க இயலாது. வேறு யார்தான் தூண்டியிருக்க முடியும் தேவி" - சந்தேகம் கேட்டான் நந்திவர்மன்.

மகாராணியின் குரல் உயர்ந்து ஒலித்தது. "உன் எண்ணத்தை அறிவேன் துருவா. கங்கர் அரியணையில் உன் தாய்வழி உறவினன் துக்க மாறனை அமர்த்த விரும்பினாய். கோவிந்தர் மறுத்துவிட்டார். அதற்குப் பழி தீர்க்கவே மக்களை நீயே தூண்டிவிட்டு கோவிந்தரை அகற்ற திட்டமிடுகிறாய்"

துருவன் அவளை வெறித்தான். "சகோதரி, உன்னிடமும் உன்னைச் சேர்ந்த உறவினரிடமும் உள்ள குற்றங்களை ஒப்புக்கொள்ளும் குணம் உனக்கு என்றுமே இருந்ததில்லை. தர்மத்தையும், மக்கள் நலனையுமே பிரதானமாக எண்ணும் பல்லவ மன்னரின் அண்மைகூட உன்னை மாற்ற இயலவில்லை. நான் எடுத்துக் கூறியா உணரப் போகிறாய்? என் வழியிலேயே இதைத் தீர்த்துக் கொள்கிறேன்'' என்றான் துருவன் வறண்ட குரலில்.

ரேவாதேவியின் முகத்தில் விபரீதச் சாயையொன்று படர்ந்தது. "உன் எண்ணம் ஈடேறப் போவதில்லை துருவா" என்றாள்.

"ஏன் ஈடேறப் போவதிலலை?"

"நீ இங்கிருந்து ராஷ்டிரகூடத்துக்குத் திரும்பப் போவதில்லை"

"என்ன கூறுகிறாய் சகோதரி?"

"உன்னைச் சிறை செய்து இங்கேயே வைத்துவிடப் போகிறேன். நான் விரும்பாத செயல்களில் நீ ஈடுபடுவதைப் பார்த்துக் கொண்டிருக்க என்னால் இயலாது"

துருவன் மன்னனை நோக்கினான் "பல்லவ மன்னரும் இதை அனுமதிக்கப் போகிறாரா?" என்றான் அதே வறண்ட குரலில்.

"துருவா, மகாராணி யாரைச் சிறை வைப்பதானாலும் என் அனுமதியைக் கேட்பதில்லை. சிறை வைத்தபின் தப்புவதும் மிகக் கடினம். வருத்தமாகத்தானிருக்கிறது. ஆனால் இது உடன்பிறந்தவர்களுக்குள் நடைபெறும் போராட்டம். நான் யார் இதில் தலையிட? நீங்கள் இருவருமே என் அன்புக்குப் பாத்திரமானவர்கள். நீ கேட்பதையும், மகாராணி கேட்பதையும் மறுக்காமல் நிறைவேற்றித் தருவது என் கடமை'' என்றான் நந்திவர்மன் மாறாத முறுவலுடன்.

ரேவாதேவியின் கரங்கள் இருமுறை ஒலித்தன. வெளியே தயாராக நின்றிருந்த கோட்டைத் தலைவன், இரு வீரர்களுடன் நுழைந்தான்.

"கோட்டைத் தலைவரே, ராஷ்டிர கூட இளவலை விருந்தினர் மாளிகையில் காவலில் வைத்துவிடுங்கள். உடன் வந்திருக்கும் வீரர்களையும் சிறையில் அடைத்து விடுங்கள்'' என்றவள் மன்னனை நோக்கி, "மன்னவா, விருந்தினர் மாளிகையில் உள்ள உங்கள் பல்லவ வீரர்களை வெளியேற உத்தரவிடுங்கள். இந்த துருவன் அவர்களை எளிதில் ஏமாற்றி விடக்கூடும். என் வீரர்களை அங்கு நியமித்துக் கொள்கிறேன்'' என்றாள் வேகத்துடன்.

''உத்தரவு தேவி'' நந்திவர்மன் சிறு நகைப்புடன் அவள் உத்தரவை ஏற்றான்.

மகாராணியின் உத்தரவின்படி விருந்தினர் மாளிகையில் அதித கட்டுக் காவலுடன் சிறை வைக்கப்பட்ட துருவனை யாரும் பார்க்கவோ, பேசவோ கூடாதென்றும் உத்தரவிட்டான்.

உணவளிக்கவும், மற்ற பணிவிடைகளுக்கும் மற்ற எவரையும் நம்பாத ரேவாதேவி, தன் அந்தரங்க மெய்க்காவலான இரு யவன மங்கையரையும் துருவனுக்குப் பணிவிடை செய்யவும், கவனித்துக் கொள்ளவும் அனுப்பி வைத்தான்.

(தொடரும்)

''உங்க பொண்ணு குளிக்கும்போது...''

''நிறுத்துங்க. நிச்சயமா அது என் பொண்ணா இருக்க முடியாது. வெளிப்புற படப்பிடிப்புக்குப் போனா, ஒரு மாசமானாலும் அவ குளிக்கவே மாட்டா!''

- ஸ்ரீகாந்த்

மைக்ரோவேவ் மாமி



ஹாய்! போன வாரம் செஞ்ச இஞ்சி வடை கொஞ்சம் காரமா இருந்ததுன்னு உங்ககிட்டருந்து கமெண்ட்ஸ். ஸோ, இந்த முறை ஒரு ஸ்வீட் ஐட்டம். பேரு 'ஹக்கேலா பர்ஃபி'. இதை முழுக்க முழுக்க தேங்காய், கேரட்டை யூஸ் பண்ணித் தயார் பண்ணினேன்.

ஒரு கப் துருவின தேங்காய், ஒண்ணரை கப் சர்க்கரை, முந்திரிப் பருப்பு நூறு



படம் : முத்து

ஹக்கேலா பர்ஃபி

கிராம், நெய் ஏழு டீஸ்பூன் எடுத்துக்கோங்கோ. கால் கிலோ கேரட்டை, நன்னா தோல் சீவிட்டு, பொடியா நறுக்கிக்கோங்கோ, ஓ.கேவா. அத்தோட அஞ்சாறு ஏலக்காயைப் பொடி பண்ணி எடுத்துக்கோங்கோ.

முதல்ல ஒரு பாத்திரத்தை அடுப்பில வச்சி, அதுல சர்க்கரையைக் கொட்டி, கொஞ்சம் ஜலத்தை விட்டு நன்னா கொதிக்க விடுங்கோ. முக்கியமா அடி கனமான பாத்திரமா இருக்கணும். சர்க்கரைப் பாகு கம்பிப் பதத்துல வந்துடுத்துன்னா, அதன் மேல துருவி வச்சிருக்கற அந்த தேங்காய், கேரட்டை மிக்ஸ் பண்ணி, தொடர்ச்சியா கிளறிண்டே இருக்கணும். இடையில இன்னொரு அடுப்புல வாணலியை வச்சி, முந்திரிப் பருப்பை நெய் விட்டு வறுத்து வச்சிருங்கோ.

தேங்காய், கேரட் ரெண்டும் நன்னா சுருண்டு வர்றச்சே, நெய்யை ஊத்திக் கிளறி, இறக்கறதுக்கு முன்னால வறுத்த முந்திரி, ஏலக்காய்ப் பொடி ரெண்டுத்தையும் தூவி இறக்கிடுங்கோ. இறக்கினவுடனே, வீட்ல இருக்கற அல்வா தட்டுல நெய்யைத் தடவி அதில ஊத்தி ஆற விடுங்கோ. லேசா ஆறிடுத்துன்னா, உங்களுக்குப் பிடிச்ச டைமண்ட் - ஸ்கொயர் ஷேப்ல கட் பண்ணி ஆறவிட்டா, ஹக்கேலா பர்ஃபி அசத்தலா ரெடி!



* மீனவர்கள்

“மக்கள் வயித்துல அடிக்கிறாங்க!”

தமிழ்நாட்டை சுனாமி உலுக்கி ஒரு மாதமாகப் போகும் நிலையில், நிவாரணப் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன. இருந்தும் அதிகம் பாதிக்கப்பட்டுள்ள மீனவ சமுதாய மக்களிடமிருந்து உதவி செய்ய வேண்டி கோரிக்கைகள் தொடர்ந்து எழுந்த வண்ணம் உள்ளன. என்னதான் நடக்கிறது என்றறிய களத்திலிறங்கினோம்.

“**சு**னாமி அலையால் அடித்துச் செல்லப்பட்ட எண்ணற்ற விசைப் படகுகள், இன்றும் அரசால் மீட்கப்படாமல் கடலிலேயே கிடக்கின்றன. இதைத் தனியார் மூலம் எடுக்க முப்பதாயிரம் ரூபாய் வரை கேட்கிறார்கள். ஆனால், எங்களிடம் பணமேதும் இல்லாததால் அப்படியே விட்டு விட்டோம். ஒரு ஃபைபர் போட் உரிமையாளருக்கு ஏற்படும் நஷ்டம் கிட்டத்தட்ட மூன்று லட்சம். ஆனால், அரசு நிவாரண நிதியோ, வெறும் பத்தாயிரம் அல்லது பதினைந்தாயிரம். இது எப்படி எங்களுக்குப் போதும்? இந்த நிவாரணத் தொகையும் பலருக்குக் கிடைக்கவில்லை. இடையில் ஏதோ நடக்கிறது. அது ஒருபுறம் இருக்கட்டும். இப்பொழுது இந்தச் சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் மறுவாழ்வுக்கு, அரசு சில முடிவுகளை கட்டாயம் எடுத்தே ஆக வேண்டும்.

முதற்கட்டமாக பாதிக்கப்பட்டோருக்கு நிவாரண நிதியினை, நேர்மையான அதிகாரிகள் மூலம் அவரவர் சேதத்துக்கு ஏற்றாற் போல் தர வேண்டும் - கடற்கரையிலிருந்து ஐந்நூறு மீட்டருக்குள் பாதுகாப்பான - நிரந்தரக் குடியிருப்பினை ஏற்படுத்தித் தர வேண்டும். வாழ்க்கையே கேள்விக்குறியாக இருக்கும் இந்தச் சூழ்நிலையில், மீனவர் கூட்டுறவு சொசைட்டி மூலமாக மீனவர்கள் வாங்கிய நீண்ட

* அன்பழகன்



காலக் கடனை அரசு ரத்து செய்ய வேண்டும். கட்டு மரத்துக்குப் பதிலாக அரசே ஃபைபர் போட் வாங்கித் தர லாம். எங்களுடைய தொழில் தொடர் பான உடைமைகளுக்கு இதுவரை இல்லாத இன்ஷூரன்ஸ் வசதியினை அரசு ஏற்படுத்தித் தந்தால் நலமாக இருக்கும்" என்று கூறும் தமிழ்நாடு மீன வர்கள் பேரவையின் தலைவர் ஆர். அன் பழகன், ''மீன் சாப்பிடக் கூடா தென்று மக்கள்கிட்ட ஒரு வீணான வதந்தி பரவியிருக்கு. அரசே இது புரளின்னு சொன்னப்புறமும் ஏன் மக்கள் நம்பாம, எங்க வயித்துல அடிக் கிறாங்கன்னு தெரியலை'' என்று வருத்தப்பட்டார்.

நாம் சந்தித்த மீனவர்களின் குரலி லும் இந்த சோகம் எதிரொலித்தது.

''பாழாய்ப்போன சுனாமியாலே முதலாளி, தொழிலாளி இரண்டு பேரும்தான் பாதிக்கப்பட்டாங்க. ஆனா, நிவாரண உதவி தர்றதில பார பட்சம் காட்டுறாங்க. போட் முதலாளி களுக்கு மட்டும் நிதி தர்றாங்க. எங்கள அம்போன்னு விட்டுடறாங்க. கூட சேர்ந்து இப்போ நிதி மோசடியும் நடக் குது. சமீபத்துல திடீர் நகர்ல ஆயிரத்து இருநூறு டோக்கன் கொடுத்தாங்க. ஒரு டோக்கனோட மதிப்பு நாலாயிரம். ஆனா நானூறு டோக்கன்தான் உண் மையா மீனவர்களுக்குத் தந்தாங்க. மீதி எண்ணூறை அதிகாரிங்க சாப்பிட்டுட் டாங்க. இந்த ஏமாற்று வேலைக்கு அதி காரிங்களுக்கு உடந்தையா இருக்கறதே ஒரு சில மீனவர்கள்தான். அவங்க யாரும் உண்மையிலேயே மீன்பிடி தொழிலுக் குப் போறவங்க கிடையாது. சும்மா அரசியல், அடிதடின்னு சுத்தறவங்க.

மீன் வியாபாரம் இல்லாம மார்க் கெட்டெல்லாம் வெறிச்சோடிக் கெடக் குது. பொய்யான ஒரு தகவலுக்கு மக்கள் முக்கியத்துவம் தர்றத நினைச்சா, வேதனையா இருக்கு. என்ன செய்யறது, எல்லாம் எங்க தலை விதி'' என்று நொந்து போய் புலம் பினார் சம்பத் என்ற மீனவர். இவரின் நண்பரான பெயர் சொல்ல விரும்பாத மீனவர் ஒருவர் கூறிய தகவல் கொஞ் சம் பீதியூட்டியது. நேரடியாகவோ, மறைமுகமாகவோ மீன்பிடித் தொழி லில் ஈடுபடாத, ஆனால் மீனவச் சமு தாயத்தைச் சேர்ந்த சுமார் இருபது பேருக்கு, முறைகேடாக நிவாரண நிதி வழங்கப்பட்டுள்ளதாம். சுனாமியால் உண்மையிலேயே பாதிக்கப்பட்டு, நிவாரண நிதி கிடைக்கப் பெறாத மீன வர்களுக்கும், முறைகேடாக நிதி வாங்கிய மீனவர்களுக்கும் இடையே இது தொடர்பாக மோதல் ஏற்படும் சூழ்நிலை உருவாகியுள்ளதாக நம்மிடம் கூறினார்.


பெரும்பாலான மீனவர்களும் அர சின் நிவாரண உதவிகளில் பாரபட்சம், குறைபாடு, மோசடி என்று பேசிய தோடு, தங்களுக்கு இனி அரசிடமிருந்து என்ன தேவை என்பதைத் தெளி வாகவே கூறினர்.

''கடல் சார்ந்த இடத்தில் ஒரு

மீனவர்களின் குற்றச்சாட்டுகள், கோரிக்கைகளுக்கு அரசின் பதில் வேண்டி தமிழக அமைச்சர் டி. ஜெயக்குமாரைச் சந்தித்தோம்...

''மீனவர்களின் குற்றச்சாட்டுகளை எங்களால் ஏற்க முடியவில்லை. அரசு முழுவீச்சுடன் சுனாமி நிவாரணப் பணிகளைப் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் பயன்தரும் வகையில் ஆற்றி வருகிறது. குடிசைகளை இழந்தவர்களுக்கு ரூ. 5000 வீதம் நிவாரண நிதி தரப்பட்டு வருகிறது. குடிசைகளை இழக்காத, அதேசமயம் தொழிலுக்குப் போக முடியாத நிலையில் இருப்பவர்களுக்கு loss of wage என்ற முறையில் ரூ. 2000ம் நிவாரண நிதி அளிக்கப்பட்டு வருகிறது. இந்த 2000 ரூபாயைப் பெறுபவர்கள்தான் சரியாக பணம்,டோக்கன் கிடைக்கவில்லை; முறைகேடு நடக்கிறது என்றெல்லாம் குற்றம்

* ஜெயக்குமார்





பாதுகாப்பான இடம் வேண்டும். இல்லையென்றால் எங்களிடம் மீதமுள்ள பொருள்களை அரசே எடுத்துக் கொண்டு, எங்களுக்கு வேறு தொழில் ஏற்பாடு செய்து தர வேண்டும். நாங்கள் எந்த வேலைக்கும் தயார். எப்படியாவது எங்களுக்கு மறுவாழ்வு கிடைக்க வேண்டும். எத்தனை நாளுக்குத்தான் அடுத்தவர் கொடுக்கும் இலவசத்தை நம்பி வயிற்றைக் கழுவுவது?" என்கின்றனர்.

இவர்களின் கருத்துகளிலிருந்து பல விஷயங்களில் முற்றிலுமாக மாறுபட்டார் சி.ஐ.டி.யூ.வுடன் இணைக்கப்பட்ட தமிழ்நாடு மீன்பிடித் தொழிற்சங்கக் கூட்டமைப்பின் மாநிலப் பொதுச் செயலாளர் கருணாநிதி.

"நிவாரணப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. கிட்டத்தட்ட அறுபது சதவிகிதம் பேருக்கு உதவிகள் கிடைக்கப் பெற்றுள்ளன. மீதமுள்ள நாற்பது சதவிகிதம் பேருக்குக் கிடைக்காததன் காரணம், கடந்த நான்கு வருடங்களாக சொஸைட்டி மூலமாக உறுப்பினர் சேர்க்கை நடைபெறவில்லை. இப்பொழுது கட்டுமரம் மற்றும் வள்ளத்துக்கு (நீண்ட படகு) அரசு நிவாரணத் தொகை அறிவித்து இருந்தாலும், ஏனோ விசைப் படகுகள் பற்றி மூச்சுக் கூட விடவில்லை. உண்மையில் அதிக பண நஷ்டம் அவர்களுக்குத்தான். இதற்காக மத்திய அரசிடம் 30 அடி போட்டுக்கு ரூ 10 லட்சம் வீதமும், 40 அடி போட்டுக்கு 15 லட்சம் வீதமும், ஆக மொத்தம் ரூ.1831 கோடி கேட்கப்பட்டுள்ளதாக அரசுத் தரப்பு கூறுகிறது. எப்பொழுது கிடைக்கும் என்பதுதான் புதிராக உள்ளது. அடுத்து, சுனாமி தாக்கிய நாளில் இருந்து இன்றுவரை மீனவர்கள் தொழிலுக்குப் போகவில்லை. இதற்குக் காரணம் ஒரு சாராருக்கு நிவாரணம் கிடைத்து, மற்றொரு சாராருக்கு நிவாரணம் கிடைக்கப் பெறாமல் இருப்பதுதான். இதற்கு அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். அடுத்து வருடா வருடம் ஏப்ரல் 15 - மே 31 வரை மீன் பிடிக்கக் கூடாது என்று அரசு போட்டுள்ள தடை, இந்த ஆண்டுக்குக் கிடையாது என்று அறிவித்தால் இன்னும் நல்லது. கடற்கரையில் மீனவர்களின் படகுகள், வலைகள் உள்ளிட்டவற்றைப் பாதுகாக்க ஒரு ஷெல்டர் அமைத்துத் தர வேண்டும்" என்று அடுக்கினார்.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கையில் மீனவர்களின் நிலை பரிதாபமாகத்தான் இருக்கிறது. அவர்களுக்கான நிவாரணப் பணிகளில் வேகம் காட்டும் அரசு, அதை உரியவர்களுக்கே வழங்கி விவேகத்தையும் காட்டினால் நல்லது.

- முத்து

படங்கள்: ராஜன்

சாட்டுகிறார்கள். இது ஆதாரமற்ற குற்றச்சாட்டு. அதேபோல பழுதடைந்த படகுகளைச் சீர் செய்ய நிதி தரப்படவில்லை என்பதும் தவறு. இதுவரை மீன்பிடிக் கலன்கள் மற்றும் சாதனங்களுக்காக அறுபது கோடி வரை நிதி தரப்பட்டுள்ளது. உண்மையில் சொல்லப் போனால் சுனாமியால் பாதிக்கப்பட்ட மற்ற மாநிலங்களைக் காட்டிலும் rescue, relief, rehabilitation என்று மூன்றிலுமே முழு வீச்சுடன் செயல்படுவது தமிழகம்தான்" என்று முடித்துக் கொண்டார்.

பூக்குரல்

கவிஞர் எழுதும் கதை – 4

அம்மா, குழந்தைகளைப் பெயர் சொல்லிக் கூப்பிடுவது போல இருக்கும் அவள் பூ விற்கும் குரல். அவள் பூ விற்று வாழ்கிறாளா, இல்லை பூக்கள் தங்களை விற்று அவளை வாழ வைக்கின்றனவா என்று தெரியவில்லை.

அவள் பூத்தட்டைச் சுமப்பது, முழம் போடுவது, அதைப் பந்துபோல் சுருட்டிப் பெண்களின் கைகளில் கொடுப்பது, பூச்சூடாத பெண்களைப் பார்த்துத் தேடி நடப்பது, ஒவ்வொன்றுமே கவனிப்புக்குரியதாக இருக்கும்.

திருவல்லிக்கேணியில் ஒரு விடுதியில் தங்கியிருந்தபோது, பெரும்பாலும் சாயங்கால நேரங்களைக் கடற்கரையில் கழிப்பது வழக்கம். இப்போது கண்ணகி சிலை இல்லாத இடத்தில்தான் அவளை அடிக்கடி பார்த்திருக்கிறேன்.

ஒருநாள் பூக்கள் விற்பனை சரியில்லாமல் அலைந்து கொண்டிருந்தாள். சோகம் முகத்தில் படர்ந்திருந்தது. அவ்வளவு பூக்களையும் நான் வாங்கிக் கொண்டேன். வாங்கிய பிறகு பூக்களை என்ன செய்வதென்று தெரியவில்லை. திரும்பி அவளிடமே கொடுத்துவிடலாமென்றால், அந்த உறவில் நேர்மை இருக்காது என்று என் தலையில் மனம் ஒரு குட்டு வைத்தது. அவ்வளவு பூக்களையும் பார்த்தசாரதி கோயிலுக்குப் போய் சாமிக்குப் போட்டுவிட்டுப் போய்விட்டேன். அப்போதுதான் அந்தக் கோயிலுக்கே முதன் முதலில் போனேன். பக்தி ஒன்றும் கிடையாது. இப்படி, சில நாள் பூ விற்கவில்லையென்றால் அவள் என்னைப் பார்த்துப் 'பூ வேணுமா சார்' என்று கேட்பதும், நான் வாங்குவதும் வழக்கமாகிவிட்டது.

அந்தச் சித்திரத்தைத் தாண்டி வேறு எந்தக் குறிப்புகளையும் அவளிடமிருந்து நான் வாங்கிக் கொள்ளவில்லை. அது மேலும் சோகம் ஊட்டக்கூடியதாய் இருந்தால் உறுத்தும். அவளது நடைபாதைப் பிழைப்பை மாற்றி, அவளுக்கு ஏதாவது செய்ய நினைத்தேன்.

எதிர்பாராத அந்த நேரத்தில்தான் அது நடந்தது. எங்கிருந்தோ ஒருவன் தடதடவென்று ஓடி வந்தான். யாரென்று தெரியவில்லை. அவளது பூத்தட்டைக் கீழே தள்ளிவிட்டான். முதுகிலும் மார்பிலும் எட்டி உதைத்தான். கூந்தலை ஒரு கையால் இறுக்கிப் பிடித்துக்கொண்டு "ஏண்டி வரல... ஏண்டி வரல?" என்று முகத்தில் ஓங்கி அறைந்தான். அவள் மூர்ச்சையாகி அப்படியே கீழே சரிந்தாள். ஒரு பெண் செம்பில் தண்ணீர் கொண்டுவந்து அவளது முகத்தில் அடித்தாள். மெல்ல மெல்ல மூர்ச்சை தெளிந்து எழுந்து உட்கார்ந்தாள். மூக்கும் உதடுகளும் வீங்கியிருந்தன. அவன் அவளது முடியைப் பிடித்து இழுத்துக் கொண்டு போனான். நாயொன்று அவர்களுக்குப் பின்னால் குரைத்துக் கொண்டே ஓடியது. அப்போதுதான் வந்த காவல்காரர் எதுவுமே நடக்காதது மாதிரி கூட்டத்தைக் கலைந்து போகச் சொன்னார்.

பழநிபாரதி



கண்ணகி, பாரதி, ஔவை, வள்ளுவர், இளங்கோ, காந்தி என்று ஒவ்வொரு சிலையாகக் கடந்து, கண்களில் இருந்து அவள் மறைந்துபோனாள். அந்த இரவு தூக்கம் வராமல் விடுதியின் மொட்டை மாடியில் உலவிக் கொண்டிருந்தேன். கட லின் பேரிரைச்சல் பக்கத்தில் கேட்டது.

அடுத்த நாள் சாயங்காலம் அவள் அலைந்த இடத்தில், நேற்று சிந்திக்கிடந்த பூக்கள் அப்படியே வாடிக் கிடந்தன.

என்னைச் சுட்ட நெருப்பு!

சி. மகேந்திரன்

அரசியல் எல்லைகளுக்கு அப்பால் மனிதர்களை அவர்களின் பலம், பலவீனத்தோடு நேசிக்கிற காவேரி மைந்தர் சி. மகேந்திரன். அண்மையில் தமது தாயாரின் இழப்பைச் சந்தித்திருக்கும் அவர், அம்மா பற்றிய நினைவுகளை நம்முடன் பகிர்ந்து கொள்கிறார்...

அம்மாவை சற்று உற்றுக் கவனிக்கிறேன். தோல் போர்த்திய எலும்புக் கூடு ஒன்று கண்ணுக்குத் தெரிகிறது. நீண்ட நாள் நீரில் வைத்து, பதர் நீக்கப்பட்ட தேங்காய் நார் போன்ற தலைமுடி. கோரப்புயல் ஒன்றில் சிக்கி தன்னிடமுள்ள அனைத்தையும் இழந்து, வேரை மட்டும் இழக்காமல் சாய்ந்து கிடக்கும் ஒரு மூத்த மரத்தின் சாயல். அம்மா படுக்க வைக்கப்பட்டுள்ளார்.

• அம்மா



இது என்னுடைய அம்மாதானா? அடையாளங்களைத் தேடுகிறேன். அழகிய பல் வரிசையில், கீழ் பற்களில் ஒன்றின் மேல் பகுதி, சிறிது உடைந்திருக்கும். நான் இரண்டு வயதுக் குழந்தையாக இருந்தபோது, பால் நிரப்பித் தந்த புட்டியால் திருப்பி அடித்ததில் இந்தப் பல் உடைந்ததாக புன்னகை ததும்ப அம்மா அடிக்கடி கூறிக் கொள்வார். இந்த உடைந்து போன பல் தெரியாமல் இப்போது வாய் கட்டப்பட்டுள்ளது.

அம்மாவின் கால்கள் சுறுசுறுப்பானவை. எந்த நெருக்கடியான காலத்திலும் இவை ஓய்ந்தவை அல்ல. இந்தச் சுறுசுறுப்பை சிறுவயது முதலே அம்மா சேகரித்து வளர்த்து வந்துள்ளார். இந்திய தேசிய ராணுவத்தின் மாபெரும் தலைவர் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் சிங்கப்பூர் வந்து சேர்ந்த காலம். சுபாஷ் சந்திர போஸின், ஜான்சிராணி மகளிர் படைப் பிரிவில் ஆர்வத்துடன் சென்று, சேர முடியாமல் ஏமாற்றத்துடன் திரும்பியவர். சாகும் வரை அம்மா, இந்த ஆதங்கத்தை வெளிப்படுத்திக் கொண்டேயிருந்தார்.

என்னைத் தேடி ஓடிப் பறந்து கொண்டிருந்த அம்மாவின் கால்களைப் பற்றி யோசிக்கிறேன். பள்ளிப் படிப்பை முடித்தவுடன், ஒருவித வேகத்துடன் அரசியலில் ஈடுபாடு கொள்ளத் தொடங்கிவிட்டேன். மாதக்கணக்கில் அம்மாவால் என் இருப்பிடத்தைக் கண்டுபிடிக்க இயலாது. கட்சி அலுவலகத்துக்கும், பொதுக் கூட்ட மேடைகளுக்குமாக எத்தனை தடவைகள் இந்தக் கால்கள் அலைந்து தேடியிருக்கும்!

'உடல் நலம் குன்றிய உன்னருகில் மூன்று நாட்கள் காத்திருக்கிறேன். ஒவ்வொரு நிமிடமும் ஆமையைப் போல் நகர்ந்து கொண்டிருக்கிறது. கடந்த முப்பது ஆண்டுகளாக பல நாட்கள், என் வருகைக்காகக் காத்துக் கிடந்த உன்னிடம், உன் வாயிலிருந்து வெளிப்படும் ஒரு வார்த்தைக்காகக் காத்திருக்கிறேன். வார்த்தைகளை வெளிப்படுத்த நடைபெறும் போராட்டத்தைப்

பார்க்க மனம் பொறுக்கவில்லை. 'இது உயிர் விடுதலை பெறுவதற்கான போராட்டமா?' சந்தேகம் எழுகிறது. "அம்மாவுக்கு உடல் பலவீனம்தான். சீக்கிரத்தில் எழுந்து விடுவார்கள்" தம்பியின் சொற்களில் நம்பிக்கை நிறைந்திருக்கிறது. தம்பி அம்மாவைப் பிரிந்து வாழ்ந்தறியா பிள்ளை. அவனுக்கு அவன் அம்மா சாகக்கூடாது.

தம்பியின் நம்பிக்கை எனக்கு சங்கடத்தைத் தருகிறது. அக்கா, என் கைகளைப் பிடித்துக் கொண்டு சொல்கிறாள், "அம்மா பிழைக்க மாட்டார்கள். தம்பி ஏமாற்றம் அடையப் போகிறான்" என்றவளின் கண்களில் தாரை தாரையாகக் கண்ணீர் பொங்கி வெளிப்படுகிறது.

சுதந்திர உணர்ச்சி மிகுந்த அம்மாவின் கால்கள் செயலற்றுக் கிடக்கின்றன. கால்களின் இரண்டு பெரு விரல்களும் சேர்த்துக் கட்டப்பட்டிருக்கின்றன. இதனை நேரில் பார்த்ததில் மனம் எத்தகைய வேதனை கொள்கிறது! சுற்றிலும் அழுகுரல் கேட்கிறது. ஒவ்வொருவரின் துயரமும் ஒப்பாரிப் பாடல்களாக வெளிப்படுகின்றன. நதிகள் அனைத்தும் கடலில் கலப்பதைப் போல எல்லாருடைய துயரங்களும் அம்மாவின் மரணத்தில் சங்கமிக்கின்றன. தம்பியின் விசும்பல் ஒலி தொடர்ந்து கேட்டுக் கொண்டேயிருக்கிறது.

சிம்னி விளக்குகளும், அரிக்கேன் விளக்குகளும் எரியத் தொடங்கிய இருள் கவிந்த வேளையில், ஒரு தேவதையைப் போல் இந்த வன்னிப்பட்டுக் கிராமத்தில் என் தாயின் வருகை நிகழ்ந்தது. கணவனும் ஐந்து குழந்தைகளுமாக சிங்கப்பூரிலிருந்து வந்து இறங்கிய இந்த தேவதையைப் பார்க்க ஊர் கூடி நின்றது. 'வறுமையும் அறியாமையும் நிறைந்த அந்த கிராமத்தில் என் தாய் தங்க மாட்டார்' என்று ஊர் கூடி உறுதியுடன் சொல்லியது. இப்போது யோசித்துப் பார்க்கும்போது, என் தாயிடம் ஊர் தோற்றுப் போனது. மீண்டும் சிங்கப்பூர் சென்ற கணவர் அங்கேயே மரணமுற்றார் என்ற செய்தி மட்டும் கிடைத்தது. பூர்வீக கிராமத்தில்தான் வாழ்க்கையைத் தொடர்ந்து வழி நடத்துவேன் என்ற வைராக்கியத்தை ஐம்பது ஆண்டுகள் அம்மா காப்பாற்றி விட்டார். ஆனால் இந்தப் போராட்டத்தில் இளம் விதவையாக நின்று, அம்மா சந்தித்த துயரங்கள் வார்த்தைகளால் விவரிக்கக் கூடியவை அல்ல.



தாய்க்குத் தலைமகன்தான் கொள்ளி வைக்க வேண்டும் என்கிறார்கள். கொள்ளிச் சட்டியை கையில் தூக்கி நடக்கிறேன். புகை என்னைச் சூழ்ந்து கொள்கிறது. 'உன்னிலிருந்து பிரிந்த எனக்கு, பால் ஊட்டி வளர்த்தாய். என்னிலிருந்து பிரிந்து செல்லும் உனக்கு நான் கொள்ளி வைக்கப் போகிறேன். தாயே, என்னை மன்னித்து விடு. உன் பூவுடலுக்கு நெருப்பு வைத்து சாம்பலாக்கும் பொறுப்பு எனக்கு இப்பொழுது கொடுக்கப்பட்டிருக்கிறது. தாய்க்குத் தலைமகனாய்ப் பிறந்தவர்களுக்கு விதிக்கப்பட்ட இந்த தண்டனையிலிருந்து யார்தான் தப்பிக்க முடியும்?' என் தண்டனையை நானே நிறைவேற்றிக்கொள்ளப் புறப்பட்டு விட்டேன்.

சிதைக்குத் தீயிடுகிறேன். திரும்பிப் பார்க்காமல் செல்ல வேண்டும் என்கிறார்கள். ஆனால் நான் திரும்பிப் பார்க்கிறேன். தீப்பற்றி எரியத் தொடங்கிய வெளிச்சம் தெரிகிறது. யுகம், யுகமாக தாயையும் பிள்ளைகளையும் பிரித்து வைத்து வேடிக்கை பார்க்கும் சுடுகாட்டு நெருப்பு, இப்பொழுது உன்னை, எங்களிடமிருந்து பிரித்து வைக்கப்போகிறது தாயே.

'முன்னை இட்ட தீ முப்புரத்திலே
பின்னை இட்ட தீ தென்
இலங்கையிலே
அன்னை இட்ட தீ
அடிவயிற்றிலே
யானும் இட்ட தீ மூள்க...
மூள்கவே'
- பட்டினத்தார்

"இதுக்குத்தான் வாங்கினோம்!"



• சோனட்ஸ்

வழக்கம்போல் இந்த முறையும் அலைபாய்ந்த கூட்டத்தால் திமிறிப் போனது சென்னை புத்தகக் கண்காட்சி. இதில் கவிதைகளுக்கு வரவேற்பு எப்படி என்று தெரிந்து கொள்ளச் சென்ற நாம், கவிதைப் புத்தகங்கள் வாங்கின சிலரை மடக்கி 'என்ன காரணத்துக்காக இந்தப் புத்தகத்தை வாங்கினீர்கள்?' என்று கொக்கி போட்டோம்.

ஷக்தி :

நம் உள்ளுணர்வுகளை மென்மையான வார்த்தைகளால் வெளிப்படுத்தக் கூடியவை கவிதைகள். நான் ஆங்கிலக் கவிதைகள் நிறையப் படிச்சிருந்தாலும் தமிழில் கவிஞர் வாலி வார்த்தைகளால் விளையாடுவது ரொம்பப் பிடிக்கும். அதான் அவரோட லேட்டஸ்ட் வெளியீடான 'இவர்கள் இன்னமும் இருக்கிறார்கள்' வாங்கியிருக்கேன். விலை கொஞ்சம் அதிகம்னாலும் அவரோட கவிதைகளுக்கு அது கம்மிதான்!

• இவர்கள் இன்னமும் இருக்கிறார்கள்



பிருந்தா

எனக்குக் கவிதைகள், கள்ளமில்லாத குழந்தைகள் இரண்டும் ரொம்பப் பிடிக்கும். மொழிபெயர்க்கப்படும் வேற்று மொழிக் கவிதைகளையும் விரும்பிப் படிப்பேன். இப்போ மு.மேத்தாவோட 'ஆகாயத்துக்கு அடுத்த வீடு' தொகுப்பு வாங்கி



யிருக்கேன். அவரோட கவிதைகள் பிடிக்கும்னாலும், இந்தப் புத்தகத்தோட அட்டைப் படம் டக்குனு வாங்கத் தூண்டுது.

ஸ்வேதா :

இங்கிலீஷ் மீடியத்துல படிச்சதால தமிழ் சரளமா படிக்க வராது. பட், ஐ லவ் இங்கிலீஷ் பொயம்ஸ். ஷேக்ஸ்பியர், ராபர்ட் ஃப்ராஸ்ட், வில்லியம் வோர்ட்ஸ்வொர்த், ஷெல்லி கவிதைகளெல்லாம் ரொம்பப் பிடிக்கும். புது இங்கிலீஷ் கவிதை புக் ஒண்ணு வாங்க வந்தேன். ஷேக்ஸ்பியரோட 'சோனட்ஸ்' வாங்கியிருக்கேன். புரட்டிப் பார்த்ததுல கன்டன்ட் ரொம்ப நல்லாருக்கும்னு தோணுது.


• இது சிறகுகளின் நேரம்

ஸ்வாதி :

எனக்கு மென்மையான விஷயங்கள்ல பிரியம் அதிகம். ரோஜாப்பூ, பச்சைப் புல்வெளி, ஆற்று மணல்னு பலதும் என்னைக் கவர்ந்திருக்கு. அதேபோலதான் இந்த புக்ஃபேர்ல புத்தகங்களைப் பார்த்துட்டே வந்தப்போ 'இது சிறகுகளின் நேரம்'ங்கற மென்மையான டைட்டில் கொண்ட அப்துல் ரஹ்மானோட புக் என்னைக் கவர்ந்துடுச்சு, வாங்கிட்டேன்!

• ஆகாயத்துக்கு அடுத்த வீடு


• ஒரு கதவும் கொஞ்சம் கள்ளிப் பாலும்

ஃலனா கண்ணப்பன் :

நான் அமெரிக்காவில் கடந்த பதினான்கு வருஷமா எலக்ட்ரானிக்ஸ் துறையில் பணிபுரிந்தாலும், தமிழ் மீதும் தமிழ்க் கவிதைகள் மீதும் உள்ள பாசம், பற்றை அறவே விடாதவன். இந்த ஆர்வத்தில் சாப்ட்வேரில் பயன்படுத்தப்படும் If, Else போன்ற புரோக்ராம் லாஜிக்குகளை அப்பொழுதே கண்ணதாசன் தனது பாடல் வரிகளில் பயன்படுத்தியுள்ளதைக் கண்டுபிடித்து பிரமித்துவிட்டேன். தற்பொழுது இந்தத் தலைமுறையின் கவிதைகளை சுவாசிக்க கவிஞர் தாமரையின் 'ஒரு கதவும் கொஞ்சம் கள்ளிப் பாலும்' தொகுப்பை வாங்கியுள்ளேன்.

- நீலாவள்ளி

படங்கள் : எழில்

"சிம்ரனைப் பார்த்து

சமீபத்திய சின்னத்திரை வரவுகளில் 'பளிச்'சென்று மின்னிக் கொண்டிருக்கிறார் ஷ்ரத்தா. எதிர்நீச்சல், கோலங்கள் என்று கலக்கி வரும் இவர், பிரபல கல்லூரி ஒன்றில் பி.எஸ்.சி. மைக்ரோ பயாலஜி மூன்றாம் வருடம் படித்து வருகிறார். அவரிடம் கொஞ்சம் பேட்டினோம்.

எப்படி நடிக்க வந்தீங்க?

''கொல்கத்தாவிலிருந்து சென்னைக்கு வந்த தமிழ்க் குடும்பம் நாங்க. தனஞ்செயன், பிறகு ராதிகா போன்றோரிடம் பரதநாட்டியம் கத்துக்கிட்டேன். ராதிகா மேடம் ஜெயா டி.வி.யில 'தகதிமிதா' நிகழ்ச்சி தயாரித்தபோது அப்படியே என்னை காம்பியர் ஆக்கிட்டாங்க. அப்படி வந்ததுதான் எதிர்நீச்சல் வாய்ப்பு. அப்படியே சன் டி.விக்கும் தாவி, 'கணவருக்காக'ல நடிச்சு இப்போ 'கோலங்கள்' பண்றேன்."



• ஷ்ரத்தா

அடுத்ததா சினிமாவுக்கும் தாவிடுவீங்களோ?

"சினிமால நடிக்கற ஐடியா இல்ல. நான் குட்டிப் பொண்ணா இருக்கும்போது டைரக்டர் மணிரத்னம் வீடு தேடிவந்து 'அஞ்சலி' பாப்பாவா நடிக்கக் கேட்டாரு. +2 படிக்கும்போது 'ஹலோ', 'குட்லக்' படங்களுக்காக பிரசாந்த்துக்கு ஜோடியா நடிக்கச் சொன்னாங்க, மறுத்துட்டேன். பெரிய சயின்டிஸ்ட் ஆகறதுதான் என் கனவு."

'கணவருக்காக' சீரியல்லருந்து ஏன் உங்களை நீக்கிட்டாங்க?

"அவங்க என்னை நீக்கல. நானாதான் விலகிட்டேன். எனக்கு செமஸ்டர் எக்ஸாம் இருக்கிறதால, தொடர்ந்து பல நாடகங்களில் என்னால நடிக்க முடியல. அதனாலதான் செலக்டிவ்வா பண்றேன்"


'எதிர்நீச்சல்' போட்ட அனுபவம் ஏதாவது...

"என்னை விடுங்க. சிம்ரன் எதிர்நீச்சல் போட்ட அனுபவத்தைச் சொல்றேன், கேட்டுக்குங்க. 'தேரே மேரே சப்னே'வுல அறிமுகமான சிம்ரன், தமிழ்ப் படங்களில் நடிக்க சென்னைக்கு வந்தபோது, ஒரு விழாவுல அவங்களைப் பார்த்து எனக்கு பெரிய ஷாக் ஆயிடுச்சு. இங்கிலீஷ் பேசத் தெரியாம, பாவம் 'ஓகே, ஓ எஸ்'ன்னு ஓரிரு வார்த்தைகளை மட்டும் பேசி சமாளிச்சிட்டிருந்தாங்க. என்னைப் பார்த்து 'நீ இங்கிலீஷ் கத்துத்தா'ன்னு கேட்டு நிறைய இங்கிலீஷ் வாக்கியங்களைத் தெரிஞ்சுக்கிட்டாங்க. ஆனா இப்போ நான் அவங்க முன்னாடி போய் நின்னா 'ஹூ ஆர் யூ"ன்னு அதே இங்கிலீஷ்ல என்னைக் கேள்வி கேட்பாங்க!" என்றவரை இங்கிலீஷ் கத்துத் தரச் சொன்னோம். ஓடியே போய்விட்டார்.

'ரமணி Vs ரமணி' டைப் காமெடியானாலும் சரி, 'சிதம்பர ரகசியம்' டைப் மர்மத் தொடரானாலும் சரி... ரசிகர்களை டி.வி. முன் கட்டிப் போடுவதில் கில்லாடி இயக்குனர் நாகா. தற்போது மீண்டும் 'வெளக்கு வெச்ச வீடு' மூலம் காமெடிக்குத் தாவியுள்ளவரைக் காண, ஷூட்டிங் ஸ்பாட்டுக்கு விரைந்தோம்.

''எனக்கு காமெடியும் ஈஸியா வரும் சீரியஸூம் ஈஸியா வரும். ஆனா ஒரே மாதிரி எல்லாத்தையும் செய்யக் கூடாதுன்னு நினைப்பேன். அதனாலதான் சிதம்பர ரகசியத்தோட, இப்போ 'வெளக்கு வச்ச -

'ஜாக்' ஆனேன்!''



* நாகா

வீடு' காமெடி சீரியலைப் பண்றேன்" என்றவர்,

"இப்போ எல்லா சீரியலுமே ஒரு குடும்பத்தை அடிப்படையா வச்சித்தான் வருது. ஆனா 'வெளக்கு வச்ச வீடு' குடும்பமே இல்லாத, போக்கிடமற்ற ஆறு பேர் குடும்பமா வாழறதைச் சொல்ற கதை. பலரும் சீரியஸா பண்ற சீஸன்ல, நாங்க சிரிப்பா பண்றோம்" என்றார்.

ஷாட் முடிந்து சேத்தன் வர, அவரது வாயைக் கிண்டினோம்.

"இதுல நான் காரைக்குடியைச் சேர்ந்த ஜொள்ளு விடும் கிரிமினல் கேரக்டர் பண்றேன். டாக்டர் ஆக ஆசைப்பட்டு முடியாததால, இருக்கவே இருக்கு 'போலி டாக்டர் ஜாப்'னு ஏமாற்றி, போலீஸ் கிட்ட மாட்டிக்கிட்ட கேரக்டர். நான் 'மெட்டி ஒலி'ல செய்த கேரக்டருக்கு நேர் எதிரா இருக்கும். எனக்கு இயற்கையாவே சென்ஸ் ஆஃப் ஹியூமர் உண்டு. அது தெரிஞ்சுதான் என்னை இந்த கேரக்டருக்கு நாகா சார் செலக்ட் பண்ணியிருக்கார்னு நினைக்கிறேன். எங்க யூனிட்டே ரொம்ப ஜாலியான யூனிட். இதுல எனக்குத் தெரிஞ்ச வித்தியாசமான விஷயம்னா, அது கேரக்டர் செலக்ஷன் தான். எப்படின்னா, மத்த சீரியல்கள்ல ரொம்ப சென்சிடிவா, எமோஷனலா நடிக்கறவங்கதான் இந்த சீரியல்ல காமெடி பண்றாங்க."

சேத்தன் சொல்வது உண்மைதான் என்பதை நிரூபிக்கும் வகையில், 'மெட்டி ஒலி'யில் நெகட்டிவ் ரோல் பண்ணும் அருணாதேவி, 'வெளக்கு வெச்ச வீட்டில்' போலீஸ் உடுப்பில் செட்டை கலகலப்பாக்கிவிட்டு ரிலாக்ஸ் செய்ய வந்து அமர்ந்தார்.

"என்ன, நெகட்டிவ் கேரக்டர் நமக்கு சரிப்படாதுன்னு வெளில வந்துட்டீங்களா...?" என்று நாம் உஷ்ணமூட்ட,

"என்னால 'வில்லி' கேரக்டர் மட்டுமில்லாம, 'காமெடி' கேரக்டரும் பண்ண முடியும்னு நிரூபிக்கக் கிடைச்ச ஒரு நல்ல சான்ஸ்தான் இது. மற்றபடி நீங்க கிளப்பிவிடற மாதிரி எதுவுமில்ல. இந்த சீரியல்ல நான் ஒரு போலீஸ் கான்ஸ்டபிள். ஆறு கைதிகளை பணத்துக்கு ஆசைப்பட்டு, தப்பிக்க வச்சுடுவேன். ஆனா அவங்க பணம் தராம ஏமாத்திடுவாங்க. நான் விடாம அவங்களைத் துரத்தித் துரத்தி பணம் கேட்டு மிரட்டுவேன்.



* 'வெளக்கு வெச்ச வீடு' தொடரில்...

ஆனா எப்படியாவது என்னை ஏமாத்திட்டு தப்பிச்சிடுவாங்க. இதுல காமெடின்னா ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு ஸ்லாங்ல பேசறதுதான்" என்று டென்ஷனாகாமல் பதிலளித்த அருணாதேவியிடம் "ஆமாமா... இதுல இன்னொரு காமெடியும் இருக்கு..." என்று நாம் புதிர் போட, "என்ன அது...?" என்று அவர் விழிக்க, "நீங்க போட்டிருக்கிற இந்த போலீஸ் டிரஸ்தான்" என்று சொல்லிவிட்டு நாம் சிட்டாய்ப் பறந்துவிட்டோம்.

- நீலாவள்ளி, கோகிலா

MOM FROM INDIA

மாம் ஃப்ரம் இண்டியா

"வேற யாரையாவது உன் லைஃப் பார்ட்னரா சேர்த்துக்க..."

பலூன் போல உப்பியிருந்த மனைவியின் வயிற்றையே பார்க்கிறான் ஸ்டீஃபன்...

அவனையுமறியாமல் சிரிப்புப் பொங்கியது.... கண்களில் நீர் தளும்பச் சிரித்தான்.

''எதற்காகச் சிரிக்கிறாய்?''

ஜேனட் பொய்யாய்ச் சிணுங்கினாள்.

"இப்படியொரு காலம் வருமான்னு நாம ரெண்டு பேரும் எத்தனை வருஷமாகக் காத்திருந்தோம் ஜேன்... ஒவ்வொரு தடவையும் 'மிஸ்' ஆறப்ப எல்லாம் எப்படி அழுவே... உன்னைச் சமாதானப்படுத்தவே முடியாம நான் - பாதி நான் எங்கேயாவது ஓடிப் போயிடலாமான்னு தவிச்சிருக்கேன்...''

"இப்ப அதெல்லாம் கனவு மாதிரி இருக்கு இல்லே? பாரு... பாரு... உன் பையன் என் வயித்துல உதைக்கிறான்...''

ஸ்டீஃபன் 'சட்'டென அவளது வயிற்றில் கை வைத்துப் பார்த்தான்.

நிஜம்தான். அவனது உள்ளங்கை பதிந்த இடத்தில் சிசுவின் பாத அசைவு தெரிந்தது.

ஸ்டீஃபன் உணர்ச்சி மேலிட்டு அழுதான்.

இதுதான் அமெரிக்கர்களின் குண விசேஷமே. சந்தோஷமோ, நெகிழ்ச்சியோ, வெள்ளை முகம் குங்குமமாய்ச் சிவக்க அழத் தொடங்கி விடுவார்கள்.

மனைவி 'முழுகாம'லிருக்கும் இந்த எட்டு மாத காலத்துக்குள் ஸ்டீஃபன், தினமும் ஒரு தடவையாவது அழுது விடுவான். இவன் அழுவதைப் பார்த்து, அவளும் 'ஓ... நோ... மை டியர்...' என்று பதிலுக்கு அழுது, அது மருத்துவமனையோ, ஷாப்பிங் மாலோ, சர்ச்சோ, கார் நிறுத்துமிடமோ - கால தேச வர்த்தமானம் எதையும் பார்க்காமல், கணவனை இழுத்து அணைத்து, 'பச்'சென்று உதட்டிலேயே முத்தம் கொடுத்து விடுவாள்...

இப்பொழுதுகூட அப்படித்தான்... தங்களை மறந்து, அழுது, சிரித்து, முத்தமிட்டு எல்லா வைபவங்களையும் நடத்திக் கொண்டிருந்த நேரத்தில்தான் ப்ரியம்வதாவும், கிஷோரும் அவர்களைத் தாண்டிப் போனார்கள்.

"ஹேய்... கிளாஸ் எப்படி இருந்தது...?''

அனுராதா ரமணன்

''உம்...''

ப்ரியம்வதா, சுரத்தின்றி பதிலளித்தாள். கிஷோர்தான் வலுவில் மகிழ்ச்சியை வரவழைத்துக் கொண்டு, ஜேனட்டிடம் பேசினான்.


''எங்களுக்கென்ன குழந்தையப் பார்த்துக்க அவ அம்மா வேற இண்டியாவுல இருந்து வரப் போறாங்க. எங்க அம்மாவும் இருக்காங்க. இந்த கிளாஸ் எல்லாம் தேவையே இல்லே...''

அவன் சொல்வதை ஸ்டீஃபன் தீவிரமாய் மறுத்தான்.

''அது எப்படி? பொறக்கப் போறது நம்ம குழந்தை. அதை எப்படித் தூக்கணும்... எப்படி, எந்த பொஸிஷன்ல வச்சுக்கணும்... எப்படி ஃபீட் பண்ணணும்... இதெல்லாம் நாமதான் தெரிஞ்சு வச்சுக்கணும் ஃப்ரெண்ட்... எத்தனை நாளைக்குத்தான் வயசானவங்க உதவுவாங்க...''

இவர்களது உரையாடல் நடந்ததே

கலகல தொடர் 3



இளம் பெற்றோருக்காக, மருத்துவ மனையில் நடைபெறும் வகுப்பறையின் வாசலில்தான்.

இந்தியா மாதிரி, ஏதோ மாதம் ஒருமுறை ஆரம்ப கால கர்ப்பத்தின் போதும், பிறகு பதினைந்து நாட்களுக்கு ஒருமுறையும் டாக்டரை தரிசித்துவிட்டு, வலியெடுத்ததும் உபத்திரவத்தோடு உபத்திரவமாக கூடச் கூட ஒரு ரசம் சாதத்தைச் சாப்பிட்டு, சுவாமி படத்தின் முன்பு குனிய மாட்டாமல் குனிந்து நமஸ்கரித்து நெற்றியில் விபூதி இட்டு, தலையில் வேப்பிலை செருகி, ராகுகாலம் பார்த்து, சகுனம் பார்த்து, ஆட்டோவோ காரோ பிடித்து ஆஸ்பத்திரிக்குப் போய் படுக்கிற வழக்கமில்லை இங்கே.

ஏழாம் மாதத்திலிருந்தே ஒவ்வொரு தலைச்சன் பிரசவக்காரியும், கணவருடன் தான் பிரசவிக்கப் போகும் மருத்துவமனையின், ஒவ்வொரு அறையையும் சென்று பார்ப்பாள்.

தவிர, சுகப்பிரசவத்துக்கான யோசனைகளை இங்குள்ள டாக்டர்கள் முன்னமேயே சொல்லித் தருவார்கள்.

குழந்தை அழுதால் தூக்குவது எப்படி, பால் கொடுப்பது எப்படி, 'உச்சா' போனால் நாப்கின் மாற்றுவது எப்படி - இது போன்ற சகல விஷயங்களுக்கும் பாடம் நடத்தப்படும்.

'ஏதோ நடக்கட்டும். எனக்கென்ன ஆச்சு' என்று புருஷன்காரன் ஆபீஸ் மீட்டிங்கிலோ, கம்பெனி டின்னரிலோ மூழ்கிவிடக் கூடாது... அவன் பின்னாலேயே வர வேண்டும். டாக்டர்கள் சொல்வதை எல்லாம் மிகுந்த கவனத்துடன் கேட்க வேண்டும். வந்த இடத்தில் வேறு எவளையாவது 'லுக்'விட்டுக் கொண்டு நிற்கக் கூடாது. அப்படி நின்றால் - அவனுடைய கர்ப்பிணி மனைவி - துர்க்குணியாகி விடுவாள். கையில் கிடைத்ததைக் கொண்டு புருஷனை அடித்து, நிர்துளி செய்து விடுவாள்...

இவர்கள் தூக்கி வைத்து பாலூட்டி, சீராட்டிப் பழகுவதற்காகவே - நிஜக் குழந்தை மாதிரியே பொம்மைக் குழந்தைகள் இருக்கும்.

சரியாகத் தூக்காவிட்டால், தலை 'தொளக்'கென ஒரு பக்கம் சரியும்.

"ஹேய்... லுக் மேன்... மை பேபி..."

- இப்படி கூடவே வரும் பெண்டாட்டி, பொம்மைக் குழந்தைக்கே உருகி அழத் தொடங்கி விடுவாள்...

வயிற்றில் பிள்ளை இருக்கும்போது தாய் அழுதாலோ, மனச் சோர்வுடன் இருந்தாலோ, டாக்டர்கள் ஏகமாய் கவலைப்பட்டு, மானாவாரியாய் அட்வைஸ் செய்யத் தொடங்கி விடுவார்கள்.

ஆகையால்... இங்கே வரும் ஒவ்வொரு கணவனும், பிரசவ காலம் முடியும் வரையில் மனைவியைக் கண்ணும் கருத்துமாய் பார்த்துக் கொண்டே ஆக வேண்டும்.

கிஷோர் - இந்த பொம்மைக் குழந்தைக்கு நாப்கின் கட்டுவதிலும், குளிப்பாட்டுவதிலும் அத்தனை ஈடுபாட்டோடு இல்லை.

இன்னமும் அவன், சராசரி இந்தியக் கணவனாகவே இருந்தான்...

அதாவது, 'குழந்தையைக் கொடுத்த



- அம்பை தேவா



- சீர்காழி வி. ரேவதி

தோடு நம் பங்கு முடிந்துவிட்டது... மற்றபடி அதை வளர்ப்பதெல்லாம் வீட்டிலுள்ள பெண்களின் வேலை' என்கிற அழுத்தமான எண்ணம் அவனது ரத்தத்திலும் ஊறிப் போயிருந்தது.

அதனாலேயே அப்படிப் பேசினான். ஆனால், தான் அப்படி அலட்சியமாய்ப் பேசியது, ப்ரியம்வதாவை எந்த அளவுக்குப் பாதிக்கும் என்பது அவனுக்குப் புரியவில்லை...

"இண்டியன் ஃபேமிலியில, மனைவியோட டெலிவரியில எல்லாம் கணவனுக்கு முக்கியப் பொறுப்பு எதுவுமில்லே. ஆனா, எத்தனைக் குழந்தை பிறந்தாலும், எத்தனை வருஷமானாலும் அதுங்களை வளர்த்து ஆளாக்கற கடமை முழுக்க பெத்தத் தகப்பனைச் சேர்ந்தது ஸ்டீஃபன்... தட்டிக் கழிக்கவே முடியாது. ஒரே புருஷன்... ஒரே பெண்டாட்டி... அதனால பொறக்கற குழந்தைகளிலேயும் எது, எந்தப் புருஷனுக்குப் பொறந்ததுங்கற கேள்விக்கெல்லாம் இடமேயில்லே. அதுதான் இந்தியா..."

இப்படிச் சொல்லிவிட்டு அவன், மனைவியுடன் காரிலே போய் விட்டான்.

ஜேனட், அவர்கள் சென்ற திசையையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவளது நீல நிறக் கண்களில் கண்ணீர் தளும்பியதைப் பார்த்தால், சமுத்திரத்தில் நிலவு மிதப்பது போல இருந்தது.

பதறி விட்டான் ஸ்டீஃபன்...

"ஏய்... எதுக்கு அழறே?"

"பாரு... ஒரு வார்த்தையில இந்தியாவோடப் பெருமையைச் சொல்லிட்டுப் போயிட்டான் பாரு அந்த கிஷோர்... ஒரு கணவன் - மனைவிக்குப் பொறக்கற எல்லாக் குழந்தைகளுக்கும் ஒரே அப்பா - இல்லே - ஒரே அம்மா இருக்க முடியுமா...?"

ஸ்டீஃபன், அவளை ஆதரவுடன் தன் தோளில் சாய்த்துக் கொண்டான். அவளது அழகிய பொன் நிறக் கூந்தலை ஒதுக்கி விட்டான்...

"அமெரிக்காவிலேயும் சில விதிவிலக்கானவங்க இல்லையா ஜேன்... நம்மை மாதிரி..."

ஜேனட் இதை மறுக்கவில்லை... அவள், ஸ்டீஃபனைச் சந்தித்து, காதலிக்கத் துவங்கி, அவனுடன் ஒரே ஃபிளாட்டில் இரண்டு வருடங்கள் போலத் தங்கி, குடித்தனம் நடத்தி, பிறகே சம்பிரதாயப்படி மோதிரம் மாற்றி, சர்ச்சில் கிறிஸ்தவ முறைப்படி அவனை மணந்தாள்.

கிட்டத்தட்ட எட்டு வருடங்கள்... சேர்ந்துதான் இருக்கிறார்கள். சண்டைகள் வரும். போகும். அவ்வப்பொழுது கடித்துக் குதறிக் கொள்வதும் உண்டு. கட்டிப் புரள்வதும் உண்டு. ஆனாலும் வேறு துணை தேட வேண்டும் என்கிற நினைப்பே இருவருக்கும் கிடையாது.

இத்தனை வருடங்களாகக் குழந்தை இல்லை என்கிற மன வருத்தம், தன் மனைவிக்கு ஏற்படக் கூடாது



சன்னமான கீறல்தான்
துளி டெட்டால்
போதுமானதாயிருந்திருக்கும்தான்
கவனக்குறைவு சிறிதென்றாலும்
பெரிய ரணமாகித் தூங்க விடாமல்
செய்ய
வலியை ஈனும் திடமான இரவு
இறுகக் கடித்த பற்களுக்கிடையே
நொறுங்கும்

சீழ் வைத்த காயத்தைக் கீறி
மருந்திட்டு
என் கவனக்குறைவைச் சுட்டும்
மருத்துவருக்குத் தெரியாது

நான் மிகச் சரியான தருணத்தில்
டெட்டாலைப் பயன்படுத்துவதற்கு
கீறல் விழுந்த இடம்
என் குழந்தையின் விரலாக
இருந்திருக்க வேண்டும் என்பது.

என்பதற்காக, ஸ்டீஃபன் ஒருமுறை ஜேனட்டைக் கேட்டிருக்கிறான்.

"நாம வேணுமானாப் பிரிஞ்சிடலாமா ஜேன்?"

"எதுக்கு?"

"இல்லே... வேற யாரையாவது உன் லைஃப் பார்ட்னராச் சேர்த்துக்க... குழந்தை பிறக்கும் இல்லையா..."

அவ்வளவுதான். வெறி பிடித்தவள் போல, ஸ்டீஃபனின் சட்டையைப் பிடித்து உலுக்கி, அவனது முதுகிலும், கன்னத்திலும் பளீர் பளீரென அறைந்து... அதற்குப் பின் தன் முகத்திலும் அறைந்து கொண்டு பெரிதாய் அழத் தொடங்கி...

அவள் அழுவதைப் பார்த்து ஸ்டீஃபனும் சேர்ந்து அழத் தொடங்கி...

அதுதான் சொன்னேனே... அழுவது என்பது இவர்களுக்குத் தண்ணீர் குடிப்பது மாதிரி... மன்னியுங்கள்... மதுபானம் குடிப்பது மாதிரி...

ஜேனட்டுக்கு ப்ரியம்வதாவை நாலைந்து வருடங்களாகவே தெரியும் தான்... ஒரு காலத்தில் இருவரும் ஒரே அலுவலகத்தில் வேலை பார்த்தார்கள். போதாக்குறைக்கு இருவருக்குமே குழந்தை இல்லை என்கிற குறை...

ஆனாலும் ஜேனட்டுக்குச் சில சமயங்களில் ப்ரியம்வதாவைப் பார்க்கையில் மெலிதான ஏக்கம் அடி மனசில் ஓடும் தான்...

"உன் மேரேஜ் வரைக்கும் உங்க அம்மா, அப்பா ரெண்டு பேரும் சேர்ந்தேதான் இருந்தாங்களா..."

"மேரேஜ் வரைக்குமா... இப்பக்கூட ரெண்டு பேரும் சேர்ந்துதான் இருக்காங்க. எங்க அப்பாவாலே, அம்மாவை விட்டுட்டு ஒரு நிமிஷம்கூட இருக்க முடியாது. தவிச்சுப் போயிடுவார்..."

ஜேனட், ப்ரியம்வதாவின் இந்த வார்த்தைகளை மறக்கவே மாட்டாள்.

"ஹவ் நைஸ்... ரெண்டு பேரும் எப்படி இத்தனை வருஷமா...?"

நினைத்துப் பார்க்கிறவளுக்கு, உடனேயே தனது அம்மாவின் நினைப்பும் எழும்...

'மாம்... நீ இப்ப எங்கே, யாரோட இருக்கே...?'

அவள் குலுங்கிக் குலுங்கி அழ, ஸ்டீஃபன் பதறிப் போய் விட்டான்.

(தொடரும்)



நடக்குமென்பார்; நடக்கும்!

ஜனவரி 26 முதல் பிப்ரவரி 1 வரை

மேஷ ராசிக்காரரான கவிஞர் யுகபாரதி, வெற்றிகள் தேடி வந்து சுக பாரதியா இருப்பாராம்!

மேஷம் : புதுக்கவிதையா சில புது அறிமுகங்கள் கிடைக்கிற நேரங்க இது. உங்க கிறுக்கல்களைக் கூடக் கவிதையா எல்லாரும் பார்ப்பாங்க. வெற்றிகள் தேடி வரும். பொருளாதாரம் ஏறுமுகமா இருக்கும். தொழில், வியாபாரத்தில அனுகூலங்கள் அற்புதக் கவிதை பாடும். குடும்பத்திலயும் உற்சாகமும் மகிழ்ச்சியும் கூடும். பெண்களுக்கு சந்தோஷமான வாரம்.

ரிஷபம் : ஹைக்கூவா சுருங்கிப் போன உங்க பொருளாதாரம் உரைக் கவிதையா உல்லாச நடை போடும். துணிவும், தன்னம்பிக்கையும் சேர்ந்து வெற்றிக் கவிதை பாடும். உத்தியோகத்தில உங்க கோரிக்கைகள் நிறைவேறி மகிழ்ச்சி தரும். தொழில், வியாபாரங்கள்ல லாபம் கூடி முன்னேற்றம் ஏற்படும். குடும்பத்தில சுப காரியங்கள் கூடிவரும். பெண்களுக்கு எண்ணம் போல எல்லாம் நடக்கும்.

மிதுனம் : கல்வி, விஞ்ஞானம், ஆராய்ச்சின்னு இருக்கிறவங்க சாதனைக் கவிதை படைப்பாங்க. படிப்புக்காக வெளிநாட்டு வாய்ப்புகள் கூடிவரும். ஆனா பயணங்கள்ல மட்டும் எச்சரிக்கையா இருங்க. ஆபீஸ்ல இதுவரை இருந்த பிரச்னைகள் விலகி சுமுகமான சூழ்நிலை சிந்து பாடும். தொழில், வியாபாரங்கள்ல எதிர்பார்த்த உதவிகள் கிட்டும். குடும்பத்தில உடன்பிறந்தவர்களால் சிறு பிரச்னைகள் ஏற்பட்டு விலகும். பெண்களுக்கு புதிய பொருள் சேர்க்கை மகிழ்ச்சி தரும்.

கடகம் : உங்க பாட்டுக்கு எதிர்ப் பாட்டுப் பாடினவங்க, அடங்கி ஒடுங்கிப் போவாங்க இனிமேல். வெற்றி தேவதை மரபுக் கவிதை பாடுற காலம் வந்தாச்சு. ஆபீஸ்ல கொஞ்சம் அடக்கி வாசிங்க. வாரப் பின்பகுதியில நிலைமை மாறிடும். தொழில், வியாபாரங்கள்ல நெருக்கடி மறைஞ்சு, உதவிகள் வந்து கைகொடுக்கும். குடும்பத்தில உறவுகள் பலப்படும். பெண்களுக்கு ஆடை ஆபரணச் சேர்க்கை உண்டாகும்.

சிம்மம் : மனசும், ஆரோக்கியமும் உற்சாகக் கவிதை பாடுற நேரங்க இது. பண நடமாட்டம் தாராளமா இருக்கும். ஆபீஸ்ல உங்க திறமையை நிரூபிச்சு, பாராட்டுக் கவிதை வாசிக்கப் போறாங்க. தொழில், வியாபாரம்னு இருக்கறவங்களுக்கு வரவேண்டிய பாக்கியெல்லாம் வந்து சேரும். குடும்பத்தில கல்யாணத்துக்குக் காத்திருக்கிறவங்க, முகூர்த்த நாள் பார்க்க ஆரம்பிச்சுடுவாங்க. பெண்களுக்கு விருந்து, உபசாரம்னு உல்லாச வாரம்.

கன்னி : இசையோடு சேரும் கவிதைக்கு இன்னும் அழகு கூடுதில்லையா, அதே மாதிரி அனுகூலமும் அதிர்ஷ்டமும் சேர்ந்து, திட்டம் போட்டபடியே எல்லாக் காரியங்களையும் முடிச்சு வைக்கும். புரியாத புதுக்கவிதைபோல பண நெருக்கடி திணறவைக்கும். உஷாரா இருங்க. தொழில், வியாபாரங்கள்ல

கொடுக்கல், வாங்கல் சீரும் தனையுமா மதிப்புமிக்க மரபுக்கவிதை பாடும். குடும்பத்தில கேள்விக்குறியா இருந்த கருத்து வேறுபாடு மறைஞ்சு, ஒற்றுமை கூடிவரும். சொத்து, வழக்கு விவகாரங்கள் சாதகமாகும். பெண்களுக்கு நிம்மதியான வாரம்.

துலாம் : இரட்டை வரிக் குறள் மாதிரி துணிவும் தன்னம்பிக்கையும் உங்க மதிப்பைக் கூட்டும். ஆனா உங்க பொருளாதாரம்தான் ஆட்டுக்கு வால் போல அளந்து வெச்சிருக்கும். ஆபீஸ்ல திருப்பங்கள் உங்கள் விருப்பங்களாயிருக்கும். பதவி உயர்வு, இடமாற்றம் சிலருக்குக் கிடைக்கலாம். தொழிலும், வியாபாரங்களும் மப்பும் மந்தாரமுமா இருந்த நிலை மாறி, வெளிச்சக் கவிதை பாடும். குடும்பத்தில் செலவுகள் வந்து சில்லறைக் கவி பாடி சிக்கலுண்டாக்கும், கவனமா இருங்க. வாரக் கடைசியில நிலைமை சீராயிடும்.

விருச்சிகம் : கனவுல மட்டும் இது வரை வந்த வெற்றி தேவதை நனவிலயும் வந்து இசைக்கப் போறா. வெகு நாளைய அபிலாஷைகள் நிறைவேறும். துணிவும் தன்னம்பிக்கையும் இசையமைக்கிற பாடல் கேட்டு எதிரிகள் காணாமப் போயிடுவாங்க. ஆபீஸ்ல பதவி உயர்வும், புதுப் பொறுப்புகளும் கூடும். உங்க உழைப்பும் திறமையும் பாராட்டையும் பரிசையும் பெறும். தொழில், வியாபாரங்கள்ல மகாலக்ஷ்மி மங்கலப் பாட்டு பாடுவா. அதுக்குன்னு கண்ணை மூடிக்கிட்டே கவிதை பாடி கவுந்துடாதீங்க. குடும்பத்தில குட்டி தேவதை பிறந்து குதூகலக் கவிதை பாடும். பெண்களுக்கு எண்ணம் போல எல்லாம் நடக்கும்.

தனுசு : பாதி புரிஞ்சும் பாதி புரியாமலும் போகிற நவீனக் கவிதைங்க இந்த வாரம். முதல் பாதியில போக்குக் காட்டி குழப்புற புதுக்கவிதை, பின்பாதியில சரியாகி சந்தோஷம் தரும். ஆபீஸ்ல சிறு பிரச்னைகள், பாராட்டு கிடைக்காத பாட்டைப் போல எரிச்சல் தரும். இதமாப் பேசி பதமா நடக்கிறதுதான் நல்லது. தொழில், வியாபாரங்கள் தளை தட்டின மரபுக் கவிதையா சிரமப்படும், உஷாரா இருங்க. குடும்பத்தில சிறு குழப்பங்கள் ஏற்பட்டு விலகும். பொறுமை, நிதானம் மிக முக்கியம். கடுமையான வார்த்தைகளைத் தவிர்த்துடுங்க. பெண்களுக்கு உறவினர் வருகை சந்தோஷம் தரும்.

மகரம் : மெட்டுக்குப் பாட்டெழுதறவங்களும் உண்டு, துட்டுக்குப் பாட்டெழுதறவங்களும் உண்டு. குரு பகவான் உங்க பாட்டுக்கு மெட்டுப் போடறதால, துட்டு வந்து சேரும் நேரம். தெய்வ பலம், பெரியோர் ஆசி கிட்டும். ஆபீஸ்ல இடமாற்றம், பதவி உயர்வு சிலருக்கு ஏற்படலாம். தொழில் வியாபாரத்தில கொடுக்கல் வாங்கல் உதவும். புதிய தொழில் துவங்கலாம். அரசு, வங்கி உதவிகளை கிடைக்கும். குடும்பத்தில் சுப மங்கள காரியங்கள் கைகூடி வரும்.



பரிகாரம்

சுற்றிச் சுற்றி வர்ற கிரகங்கள் பண்ற சேஷ்டைகளாலதான் நம்ம வாழ்க்கை சுழற்றிச் சுழற்றி அடிக்குது. எதெதுக்கு எங்கெங்கே போய் பரிகாரம் பண்றதுன்னு வருத்தப்படறவங்க கவலையை விடுங்க. எல்லாக் கிரகங்களுக்கும் நடு நாயகனான சூரியனுக்குப் பண்ணினா, அத்தனை கிரகங்களும் அப்படியே அடங்கிப் போய் அனுகூலமா நடப்பாங்க. ஆனா ஒண்ணு, மத்த கோயில் போல இல்லாம, இங்க வலமிருந்து இடமாத்தான் சுத்தி வழிபடணும். தோஷங்கள் நிவர்த்தியாகி நன்மை கிடைக்க ஆரம்பிக்கும்.

இந்த சூரியனார் கோயில் குடந்தையிலிருந்து வடக்கே 14 கி.மீ. தூரத்தில் இருக்கிறது.

பெண்களுக்கு உல்லாச உற்சாக வாரம்.

கும்பம் : சிதறி விழுந்த வார்த்தைகளைத் தொகுத்து, இடறி விழுந்தால்தான் பொருள் புரியும் உரைக்கவிதைங்க இந்த வாரம். முன் பாதியை உதறிட்டீங்கன்னா பிற்பாதியில சரியாயிடும். ஆபீஸ்ல உங்க கோரிக்கைகள் மெல்ல நிறைவேறும். தொழில் முறையில் சில வெளியூர் / பாத்துக்கோங்க.

மீனம் : தெய்வபலம் வாழ்த்துப்பா பாடி உங்க காரியம் எல்லாத்திலேயும் கைகொடுத்து, நல்லபடியா முடிச்சு வைக்கும். உங்க அறிவாற்றல் பல காரியங்களில் சாதனைக் கவிதை பாடும். பொருளாதாரம் பெரிய ஆதாரமா இருக்கு. சேதாரமில்லாம மூலாதாரமா

குறையொன்றுமில்லை...

அடுத்த வாரம்

வெளிநாடு பயணங்கள் நேரும். தொழில், வியாபாரம்னு இருக்கிறவங்க எச்சரிக்கையா இருங்க. மொழி தெரியாக் கவிதை படிச்சு முழி பிதுங்க வேண்டாம். குடும்பத்திலேயும் எதிர்பார்த்த உதவிகள் வாரப் பிற்பகுதியில் கிடைக்கும். சுப மங்கள காரியங்களுக்கு வேளை கூடி மகிழ்ச்சி தரும். பெண்களுக்கு எதிர்பார்த்த நல்ல செய்தி வந்து சேரும். ஆரோக்கியத்தை கொஞ்சம் கவனமா நின்னு மகிழ்ச்சி தரும். ஆபீஸ்ல அதிர்ஷ்டக் கவிதை படிக்கப் போறீங்க. எதிர்பாராத, அதிர்ஷ்டகரமான திருப்பங்கள் காத்திருக்கு. புத்திசாலித்தனமா பயன்படுத்தினா பயனடையலாம். தொழில், வியாபாரம் லாபம் கூட்டித் தரும். குடும்பத்தில திருமணம், மக்கட்பேறுன்னு மங்கலப்பா ஒலிக்கும். பெண்களுக்கு ஆனந்தப்பள்ளு பாடும் அனுகூலமான வாரம். ●



• வெற்றி ரகசியம்!

● டி.கே.சுப்ரமண்யன், திருப்பரங்குன்றம்

? சுனாமியால் அதிக பாதிப்பு இந்தியாவுக்கா, இலங்கைக்கா, அந்த மானுக்கா...?

! அந்தமான் வேறு, இந்தியா வேறா...? இரண்டும் ஒன்றுதானுங்க. நிற்க. அதிக பாதிப்பு தாய்லாந்து, இந்தோனேஷியா நாடு

'காதல்' பட வெற்றிக்கு

● எஸ்.சிவகாமி சுந்தர், மதுரை-10 ❐

? விவேக் ஓபராய் தமிழக அரசியலுக்கு வருவாரா...?

! மாட்டார். முடியவும் முடியாது. இத்தனை மனிதாபிமானமுள்ள நல்ல மனிதரை எந்தக் கட்சி சேர்த்துக் கொள்ளும்?

● வசீகரன், சென்னை

? ஜயேந்திரர் தென்னிந்தியாவில் தங்கக் கூடாது என தமிழக அரசு கேட்பது ரொம்ப ஓவராகப் படவில்லை...?

! இன்னும் யோசிச்சிருந்தா, அந்த மான்லதான் தங்கணும்னுகூட கேட்டிருக்கலாம். பீடாதிபதி எங்கே இருக்கிறாரோ அங்கே காஞ்சி சங்கர மடம் இயங்கும் என்னும்போது, இந்தக் கோரிக்கைகள் எல்லாம் உச்சநீதிமன்றத்தின் நேரத்தை வீணடிப்பவையா இல்லையா என்பது, தீர்ப்பு வருகிறபோது தெரியும்.

● எஸ்.முரளி, குறிஞ்சிப்பாடி

? 'இனி சினிமாவில் சிகரெட் பிடிக்கிற சீனெல்லாம் இல்லாமல் பார்த்துக்குவேன்' என்கிறாரே அஜித்?

! சிகரெட் பிடிக்கிற சீனை விடறது இருக்கட்டும். முதலில் விஜய்யை ஒரு பிடி பிடிக்கறதை விடட்டும். 'அட்டகாச'த்தில், தேவையில்லாமல் அவர் ஒரு சவுண்டு விட, 'திருப்பாச்சி'யில் விஜய் எதிர் சவுண்டு விட... விஸிலடிச்சான் ரசிகர்களுக்கே எரிச்சலாகிவிடுகிறது.

களுக்குத்தான். எண்ணற்ற கடலோர கிராமங்கள் உப்புச் சகதியில் உறைந்து கிடக்க, லட்சக்கணக்கில் உயிர்ப்பலி.

● க.வேடியப்பன், கும்மிடிப்பூண்டி

? ஜயேந்திரரைத் துன்புறுத்தினால், அயோத்தி பிரச்னை போல போராட்டம் வெடிக்கும் என்று ஆர்.எஸ்.எஸ். எச்சரிக்கை செய்துள்ளதே...?

● ரேவதிப்ரியன், ஈரோடு

? இளைய சங்கராச்சாரியார் கைது நடவடிக்கைக்கு, தி.க. தலைவர் வீரமணி தமிழக முதல்வரைப் பாராட்டியுள்ளாரே...?

● எம்.ராஜேந்திரன், லால்குடி

? 'விஜயேந்திரரைக் கைது செய்தது வரவேற்கத்தக்கது' என்று திருமாவளவன் கூறியுள்ளாரே...?

● பி. ஜெயப்பிரகாஷ், சர்க்கார்பதி

? ஜயேந்திரருக்கு உச்சநீதிமன்றம் ஜாமீன் வழங்கியுள்ளதால், ஜெயலலிதா ராஜினாமா செய்ய வேண்டும் என்கிறாரே பிரமோத் மகாஜன்...?

! நான்கு வாசகர்களின் நான்கு கேள்விகளுக்கும் ஒரே பதில்தான். Political Stunt!

● எம்.ஹரிஹரன், பழநி

? கோஃபி அனான் இந்தியாவில்

சுனாமி பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட இந்திய அரசு மறுத்தது நியாயமா...?

! கோஃபி அனான் மகன்மீது பயங்கரக் குற்றச்சாட்டு உள்ளது. கோஃபி அனான் பதவியைத் துறக்க வேண்டும் என்ற கோரிக்கையும் பல நாடுகளில் எழுப்பப்பட்டுள்ளது. மேலும், சுனாமி பாதிப்புக்கு அயல்நாட்டு உதவி இன்றியே சமாளிக்கலாம் என்ற துணிவு இந்திய அரசுக்கு உள்ளது. இவற்றைக் கூறாமல் நாகரிகக் காரணங்களைச் சொல்லி, இந்திய அரசு அவர் கோரிக்கையை மறுத்துள்ளது.

● **கே.வி.ராமன், சென்னை - 73**

காரணம் யார்?

? 'எம்.எஸ். மதுரையில் வாழ்ந்த வீட்டை ஞாபகச் சின்னமாக மாற்ற வேண்டும்' என கோரிக்கை எழுந்துள்ளது குறித்து...?

! தமக்கு நினைவுச் சின்னமோ, அறக்கட்டளையோ, சிலையோ நிறுவக்கூடாது; அதற்கு யாரும் நிதி திரட்டக் கூடாது என்பதைத் தமது விருப்பமாக உயிலில் பதிவு செய்துள்ளார் எம்.எஸ். பாரதப் பண்பாட்டுக்கு அது விரோதமாக அமையும் என்று காரணமும் சொல்லியிருக்கிறார். அந்த உணர்வை மதிப்பதே அவர் நினைவைப் போற்றும் நற்செயலாகும்.

● **ச.கணேசன், காரைக்குடி**

? கோடி கோடியாய் சம்பாதிக்கும் கம்பெனிகள், நடிகர், நடிகைகள், விளையாட்டு வீரர்கள், அமைச்சர்கள், முதல்வர்கள் போன்றவர்களை விட்டுவிட்டு, ஐம்பது - நூறுக்கு - சுனாமி நிவாரண நிதியாக - சாமானிய மக்களிடம் கையேந்துவது சரியா...?

! நூறு சதவிகிதம் சரிங்க... அந்த எளியவர்களுக்கும் தங்களாலான உதவி பண்ண வேண்டும் என்கிற ஆசை இருக்குமில்லையா...? அதுபோக, கோடிக்கணக்கில் வைத்திருப்போரும் தாராளமாகக் கொடுத்துத்தானே இருக்காங்க.

● **இரா. சக்கரபாணி, மதுரை - 7**

? ஆங்கில ஆண்டு 2005 பிறப்பு, ஆண்களுக்குத் தீமை செய்கிறதாமே...?

! ஆண்களுக்குத் தீமையென்றால் அது பெண்களையும் பாதிக்காமலா போய் விடும்? மஞ்சள் புடைவைகளை விற்றுத் தீர்க்க வேண்டும் (பரிகாரம்) என்பதற்காக உருவாக்கப்பட்ட பிதற்றல் வதந்திகளை நம்ப வேண்டாமே!

* நினைவைப் போற்ற...



* அட்டகாச...



* சினிமா நண்பர்!



* ... அட்டாக்!



● க.நா.இராஜேஸ்வரன், மொரட்டுப்பாளையம்

? காஞ்சி சங்கர மடத்தின் வங்கிக் கணக்குகள் அரசால் முடக்கப்பட்டிருப்பது குறித்து...?

! நீதிமன்ற உத்தரவின் பேரில் இரண்டு இந்தியன் வங்கிக் கணக்குகள் விடுவிக்கப்பட்டுள்ளன, முக்கியப் பணிகள் தடையின்றி நடக்க. நிற்க. மடத்துக்கு நூற்றுக்கணக்கான வங்கிக் கணக்குகள் எதுக்குங்க...? பணவீக்கம் நாட்டுக்கு மட்டுமல்ல, மடத்துக்கும் ஒத்துவராதுங்க.

● எச்.ஜனார்த்தனன், அந்தியூர்

? கும்மிடிப்பூண்டி எம்.எல்.ஏ.வை வடநாட்டுக் கொள்ளையர்கள் வீட்டில் புகுந்து கொன்ற சம்பவம் பற்றி..?

! கொடூரம்! அதைவிடக் கொடூரம் அவர் ஆளுங்கட்சிக்காரர் என்பதால், உடனே 'ரவுண்ட் அப்' என்ற பெயரில் ஐந்நூறு பேர் கைது செய்யப்பட்டுள்ளது.

● ஏ.ஜி.முகம்மது தௌபிக் ★

? 'ஜயேந்திரர் வழக்கைப் போன்றதுதான் என் வழக்கும். ஆகவே எனக்கும் ஜாமீன் தாருங்கள்' என்று லல்லு கட்சியைச் சேர்ந்த எம்.பி. பப்பு யாதவ் மனு தாக்கல் செய்துள்ளாரே...?

! இதைப் போன்ற பூதங்கள் கிளம்பும் என எதிர்பார்த்துத்தான் உச்சநீதிமன்றம், ஜயேந்திரருக்குத் தரப்பட்ட ஜாமீன் பிற வழக்குகளுக்கு முன் உதாரணம் ஆகாது என்றும் தெளிவுபடுத்தியுள்ளது.


● ந.உமாமகேஸ்வரி, சென்னை - 61

? காஷ்மீரில் தீவிரவாதிகளின் தாக்குதல் தொடர்ந்து கொண்டிருக்கும்போது, அவர்களுடன் பேச்சுவார்த்தை என சிவராஜ் பாடீல் அறிவித்திருப்பது சரியா?

! தீவிரவாதிகளின் ஊடுருவல், தாக்குதல், எல்லாம் நின்ற பிறகு பேச்சுவார்த்தை என்பது, அலை ஓய்ந்து சமுத்திர ஸ்நானம் செய்கிற கதைதான். விழிப்புணர்ச்சியைக் கைவிடாமல் நேசக்கரம் நீட்டி, காஷ்மீர் பிரச்னைக்கு அரசியல் தீர்வு காண்பதே முத்தரப்புக்கும் நன்மை.



✱ அரசியலாகும்...



✱ ... கைது!

● வி.எம்.செய்யது புகாரி, அதிராம்பட்டினம்

? 'நான் சினிமாவுக்கு விரோதி அல்ல' என்று டாக்டர் ராமதாஸ் கூறியுள்ளாரே...?

! யாராவது கெஸ்ட் ரோல் பண்ணக் கூப்பிட்டுக்கோங்கப்பா!

● த.சத்தியநாராயணன், அயன்புரம்

? பலரைக் காயப்படுத்திச் சிலரைச் சாகடிக்கும் ஜல்லிக்கட்டு விளையாட்டு தேவைதானா...?

! தேவையே இல்லை! புல்ஃபைட் என்ற பெயரில் ஸ்பெயின் நாட்டில் முரட்டுக் காளைகள் துன்புறுத்தப்படும் அநாகரிகமும் தேவையில்லை. இரண்டுக்கும் தடை தாராளமாக விதிக்கலாம். தராசு சொல் அம்பலம் ஏறுமா?

● பி.எல். பரமசிவம், புனலூர்

? 'காதல்' பட வெற்றிக்கு மூல காரணமாக யாரைச் சொல்லுவீர்கள்....

! காதலைத்தான்!

□ ரூ.100 பரிசு பெறுபவர் :
எஸ்.சிவகாமி சுந்தர்,
28ஏ, ஜானகி நாராயணன் தெரு,
எஸ்.எஸ். காலனி,
மதுரை - 10

★ ரூ.50 பரிசு பெறுபவர் :
ஏ.ஜி.முகம்மது தௌபிக்,
நவாஸ் ஸ்டோர்,
36ஏ/20, சுல்தானியா காம்ப்ளெக்ஸ்,
அம்பை ரோடு, மேலப்பாளையம்,
திருநெல்வேலி - 627 005.

அறிக்கை அமர்க்களம்!



2004 கடைசியிலும் புதிய வருஷத்தின் முதல் இரண்டு நாட்களிலும் ஏறிக்கொண்டே இருந்த பங்கு மார்க்கெட், திடீரென்று வீழ்ச்சி அடையத் தொடங்கியதும், நிதி நிர்வாகம் மற்றும் பங்கு மார்க்கெட் முதலிய துறைகளில் ஈடுபட்டுள்ளவர்கள் ஓரளவுக்குக் கவலைப்படத் தொடங்கினர். ரிஸர்வ் வங்கியின் கவர்னர் வேணுகோபால ரெட்டியும் இதைப் பற்றிய கவலையைத் தெரிவித்ததோடு, வெளிநாட்டு முதலீடுகளுக்கு ஒரு வரம்பு ஏற்படுத்த வேண்டும்; அவற்றுக்கு ஏதாவது வரி விதிக்க முடியுமா என்று யோசிக்க வேண்டும் என்ற முறையில் ஓர் அறிக்கையை வெளியிட்டார். ரிஸர்வ் வங்கி கவர்னரின் கவலை நியாயமானது. பங்குகளின் விலை ஏற்றத்துக்கும், விலை இறங்குவதற்கும் வெளிநாட்டு முதலீட்டு நிறுவனங்கள் ஒரு முக்கியக் காரணம் என்பதை மனத்தில் கொண்டு, தமது கவலையை வெளிப்படுத்தி இருந்தார்.

மேலும் இந்த வெளிநாட்டு முதலீட்டு நிறுவனங்களால் பணப் புழக்கம் அதிகமாகி, அது நிதி நிர்வாகத்தில் ஒரு பிரச்னையை ஏற்படுத்தக் கூடும் என்று நன்றாகத் தெரிந்துதான் தம்முடைய அறிக்கையை வெளியிட்டார். ஆனால், அவர் அறிக்கை வெளியிட்ட ஒரு மணி நேரத்துக்குள், நமது நிதிமந்திரி ப. சிதம்பரம் ஓர் அறிக்கையை வெளியிடும் நிர்ப்பந்தமும், சூழ்நிலையும் ஏற்பட்டது. ரிஸர்வ் வங்கி கவர்னரின் அறிக்கையால் பங்கு மார்க்கெட் பாதிக்கப்படும் என்பதால், சிதம்பரம், 'மத்திய அரசுக்கு அந்த மாதிரி எண்ணம் ஒன்றும் கிடையாது' என்றும் தெரிவித்தார். நிதி மந்திரியின் அறிக்கையைத் தொடர்ந்து, ரிஸர்வ் வங்கியின் கவர்னரும் தமது அறிக்கைக்கு ஒரு விளக்கம் அளிக்க வேண்டியதாயிற்று. இந்த இரண்டு அறிக்கைகளால் நல்லவேளையாக பங்கு மார்க்கெட் பாதிக்கப்படவில்லை. ஆனால் ஒன்று நிதர்சனம். பங்கு மார்க்கெட்டில் அன்றாடம் ஏற்படும் விலை ஏற்ற இறக்கங்களுக்கு வெளிநாட்டு முதலீட்டு நிறுவனங்களும் ஒரு முக்கியக் காரணம் என்பதை சம்பந்தப்பட்ட எல்லோரும் தெரிந்து கொண்டிருக்கிறார்கள்.

- வி. கோபாலன்

(அடுத்த வாரம் பார்ப்போம்)

பங்குச் சந்தை டிப்ஸ்

தன் வசம் இருக்கும் பொது நிறுவனங்களின் பங்குகளை அரசு அவ்வப்போது விற்க ஏற்பாடு செய்கிறது. சமீபத்தில் NTPC-ன் பங்குகளை அரசு விற்றது. அந்தப் பங்குகள் அரசு விற்ற விலையை விட இப்போது அதிகமாக விலை போகின்றன.

அந்த முறையில், வரும் மார்ச் 31க்குள் அரசு தன் வசம் இருக்கும் Maruti Udyog மற்றும் Bharat Heavy Electricals (BHEL) பங்குகளில் ஒரு பகுதியை விற்க முடிவு செய்திருப்பதாகவும், அதற்கு பிரதம மந்திரியின் அங்கீகாரம் கிடைத்து விட்டதாகவும் சொல்லப்படுகிறது. பங்குகளின் விலையை அரசு இன்னும் நிர்ணயிக்கவில்லை என்றாலும், அரசு இந்தப் பங்குகளை விற்க வரும்போது வாங்கலாம். அந்தப் பங்குகள் விலை ஏற வாய்ப்புண்டு.



• மாணிக்கவேல்



• காமேஸ்வர குருக்கள்

சங்கர மடம் - பக்தர்களின் உள்ளத்தோடும், உதிரத்தோடும் இரண்டறக் கலந்து விட்ட விஷயம். இது இன்றைக்கு மிகப் பெரிய சர்ச்சைக்குள் சிக்கியுள்ளது. இரு பீடாதிபதிகளும் தற்போதைக்கு காஞ்சியில் இல்லை. இந்நிலையில் காஞ்சிபுரம் எப்படி இருக்கிறது - பொது மக்களின் மனநிலை எப்படி உள்ளது என்பதைத் தெரிந்துகொள்ள, காஞ்சிபுரம் மக்களிடம் கலந்துரையாடினோம்.

'இரு பீடாதிபதிகளும் இல்லாததை எப்படி உணர்கிறீர்கள், அரசு மடத்தை எடுத்துக் கொள்ளும் என்று பேச்சு எழுந்துள்ளதே - ஒருவேளை அது நடந்தால் நிர்வாகம் சீராக இருக்குமா, மூன்றாவதாக ஒருவர் நியமிக்கப்பட வாய்ப்பிருக்கிறதா, நல்ல தீர்ப்பு வந்து இருவரும் மீண்டும் ஆன்மிகப் பணியைத் தொடர்வார்கள் என்ற நம்பிக்கை உள்ளதா?" என்பது போன்ற பல கேள்விகளுடன் பலதரப்பினரையும் சந்தித்தோம்.

பொது மக்கள் பலரும் உணர்ச்சிப் பிழம்பாகவே காட்சியளித்தனர். அவர்களது வார்த்தைகளே அவர்கள் இன்னும் அந்த பேரதிர்ச்சியிலிருந்து மீளவில்லை என்பதைத் தெளிவாகக் காட்டியது. நாம் சென்றபோது, சங்கரமடத்திலும் சரி - காஞ்சி காமாட்சி கோயிலிலும் சரி - ஒரு கனத்த அமைதி நிலவியது.

இதோ காஞ்சிப் பொதுமக்களின் உணர்ச்சிக் குவியல்கள்...



• காஞ்சி மடம்

செந்தில்குமார் (ஓய்வு பெற்ற வங்கி ஊழியர்):

"இரு பீடாதிபதிகளும் தற்போது காஞ்சியில் இல்லாதது, பொது மக்களைப் பெருமளவில் பாதித்துள்ளது என்பது உண்மைதான். இத்தனை சிரமங்களுக்கும் காரணம் இரு பீடாதிபதிகளும் பணம் மற்றும் பல விஷயங்களுக்காக பாரம்பரிய முறையில் இருந்து விலகி விட்டதுதான். அதற்காக மடத்தை அரசே எடுத்துக் கொள்வதும் சரியான தீர்வாக இருக்காது. மூன்றாவது மடாதிபதியை நியமிப்பது என்பதும் சாதாரண விஷயமில்லை. அதற்கென்று சில நடைமுறைகள் உள்ளன. ஆகவே, அரசு அவசரம் காட்டாமல் நடந்து கொள்வது அவசியம். அதே





ஜெயேந்திரர்
வி

சமயம் இவ்விஷயத்தில் மீடியாவின் பார்வை, நியாயத்தை வலியுறுத்துவதில்தான் இருக்க வேண்டுமே தவிர, இதைப் பரபரப்பான வியாபாரமாக்குவதிலேயே குறியாக இருக்கக் கூடாது.''



• லட்சுமி



• சரவணன்

காமேஸ்வர குருக்கள் :

''ஆன்மிகவாதிகளுக்குத் தீராத வருத்தத்தை அளிக்கக்கூடிய விஷயம். தமிழக அரசும், பத்திரிகைகளும் இவ்விஷயத்தில் மடத்தின் புனிதத்தை, நற்பெயரைக் கெடுத்து விட்டனர். ஒவ்வொரு வீட்டிலும் பெரியவர் மற்றும் பால பெரியவர் பெயரில் கோயிலில் அர்ச்சனை செய்து வருகிறோம். இதுதான் எங்களால் முடிந்தது. தற்போது அரசே மடத்தை நடத்த வேண்டும் என்ற பேச்சு எழுந்துள்ளது. அரசின் கீழ் இயங்கும் ஆலயங்களில் ஏதாவது ஒன்று நல்ல முறையில் இயங்குகிறது என்று, உண்மையான நடுநிலையாளர் - 'சிவன் சொத்து குலநாசம்' என்பதை பரிபூரணமாக நம்புபவர் - மனசாட்சியுடன் சொல்லட்டும்... பிறகு அரசே எடுத்துக் கொள்ளட்டும். அப்படியே எடுத்துக் கொண்டாலும், மடத்தை பெயருக்குத்தான் நடத்த முடியுமே தவிர, தார்மிக நெறிப்படி நடத்த முடியாது. இரு பெரியவர்களும் மீண்டு வருவார்கள்- மீண்டும் வருவார்கள்- இறைப்பணியைத் தொடர்வார்கள்.''

மாணிக்கவேல் (வர்த்தகர்) :

''இருவரும் ஊரில் இல்லாதது மக்கள் மத்தியில் பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்தவில்லை. இதற்குக் காரணம் அவர்கள் மீது தற்போது இருக்கும் குற்றச்சாட்டு அல்ல. ஏற்கெனவே இரு பெரியவர்களும் பொது மக்களிடம் காட்டிய பாரபட்சம்தான். அதற்காக, இருவரும் காஞ்சிக்குச் செய்த நல்ல காரியங்களை மறக்கவோ - மறுக்கவோ முடியாது. இதில் வருத்தம் என்ன தெரியுமா? இருவர் மீதும் குற்றம் சுமத்திய தமிழக முதல்வர் பேரிலும் குற்றச்சாட்டுகளும் வழக்குகளும் உண்டு. எது எப்படி இருந்தாலும், இந்தப் புனிதமான மடத்தை அரசு எடுத்துக் கொள்வதையோ அல்லது இருவரின் அனுமதியில்லாமல் மூன்றாவது மடாதிபதியை நியமிப்பதையோ யாராலும் ஏற்க முடியாது. இவ்வளவு நடந்திருந்தாலும், இருவரும் வழக்கிலிருந்து விடுவிக்கப்படுவார்கள் என்ற நம்பிக்கை காஞ்சியில் உள்ள சாமி கும்பிடுபவர்களுக்கும் உள்ளது, சாமி கும்பிடாதவர்களுக்கும் உள்ளது.''

• செந்தில்குமார்




லட்சுமி (செருப்பு தைப்பவர்) :

''தப்பு செய்தாங்களோ இல்லையோ, காஞ்சிபுரத்துக்கு ஒரு களங்கம் வந்துடுச்சு. ஒரு பொம்பளப் புள்ள பேர்ல குற்றம் சாட்டினா எப்படி அது ஒட்டு மொத்தக் குடும்பத்துக்கும் கெட்ட பேரோ அப்படித்தான் இதுவும். பெரிய பெரியவாளோட கண்காணிப்புல வளர்ந்த இவங்களே தப்பு செய்துட்டாங்கன்னு சொல்றப்ப, இனிமே ஒருத்தர் வந்து நல்லா நடத்துவாங்கன்றது ஒண்ணும் நம்பிக்கையாப் படல. இவங்க ரெண்டு பேரும் இங்க இல்லங்கறதால மடத்துக்கும், கோயிலுக்கும் கூட்டம் முன்ன மாதிரி இல்ல. இதனால எல்லா

இல்லாத காஞ்சி!

–ஒரு 'பல்ஸ்' ரிப்போர்ட்



• காமாட்சி அம்மன் கோயில்...



• நந்தகுமார்

வியாபாரமும் பாதிக்கப்பட்டிருக்கு. ஒரு வேளை அவங்க நல்லபடியா திரும்பி வந்தாக்கூட, போன நல்ல பேரு திரும்ப வராது."

நந்தகுமார் (காஞ்சிமட பக்தர்):

"சகல தரப்புக்கும் உதவி செய்து வந்தவர்கள் மீது காட்ட வேண்டிய குறைந்தபட்ச கருணையைக் கூட, அரசு காட்டத் தவறிவிட்டது. இது நாத்திகவாதிகளுக்கு வேண்டுமானால் கொண்டாட்டமாக இருக்கலாம். ஆனால் இது தாற்காலிகம்தான். விரைவில் அரசு செய்தது தவறு, இருவரும் குற்றமற்றவர்கள் என்பது காமாட்சி அருளால் நிரூபிக்கப்படும். இது நடப்பதற்குள், மூன்றாவதாக ஒரு மடாதிபதியை நியமிப்பது என்பது தவறாகவே முடியும். அப்படியே நியமிப்பதும் இரு பீடாதிபதிகளின் தனிப்பட்ட உரிமை - அதை யாரும் பறித்துக் கொள்ள முடியாது."

கவர்ன்மென்ட் எடுத்துக்கிட்டா மடம் சீரழிஞ்சு போறது உறுதி!

சரவணன் (ஆட்டோ ஓட்டுனர்):

"இதைப்பத்தி மக்கள் பெரிய அளவுல சிந்திக்கறதா தெரியல. ஏன்னா பிரச்சனை ஆரம்பிச்சு ரொம்ப நாள் வேற ஆயிட்டுது. மடத்தை அரசாங்கம் எடுத்துக்கிட்டாலும் பெரிசா ஒண்ணும் மாற்றம் வந்துடாது. நாமதான் ஏற்கெனவே கவர்ன்மென்ட் நடத்துற கோயில்களின் லட்சணத்தைப் பார்த்திருக்கோமே. அப்படி எடுத்துக்கிட்டா மடம் சீரழிந்து போறது உறுதி. மூணாவதா ஒருத்தர் வந்தாலும், கூட இருக்கறவங்க சும்மா இருக்க விட மாட்டாங்க."

மடத்துக்கு மிகவும் பழக்கப்பட்ட பெண்மணி (பெயர், படம் வெளியிட விரும்பவில்லை):

"ரொம்ப ரொம்ப வருத்தமா இருக்குங்க. எங்களுக்கு இருக்குற ஒரே சந்தேகம் என்னன்னா, இந்த நாட்டுல மூதன் முதல்ல கொலை செய்யப்பட்டவர் சங்கரராமன் மட்டும் தானாங்கறது தான். ஜயேந்திரர் தனிப்பட்ட முறையில் நல்ல மனுஷர். இப்படி ஆனதுக்கு சூழ்நிலைதான் காரணம். இப்போ பார்த்தீங்கன்னா, மகா பெரியவர் ரொம்ப ரொம்ப ஆசாரமானவர் - கட்டுப்பாடுகள் ஏராளம். பால பெரியவரோ அல்ட்ரா மாடர்ன். இங்க ரெண்டு பேருக்கும் இடையில் மாட்டிக்கிட்டு, குழம்பி, கடைசில இந்த நிலைமைக்கு வந்துட்டாரு. இத்தனைக்கும் காரணம் கூடாத சகவாசம், அரசியல், படாடோபம் இதுதான். மீடியாவுக்கும் இந்த விஷயத்துல உண்மைச் செய்தியை நியாயமாத் தர்றது நோக்கமில்ல. பரபரப்பும், விற்பனையும்தான் முக்கியமா இருக்கு. உதாரணமா உத்திராதிமட நிர்வாகி கொலையை 'காஞ்சி மடாதிபதி கொலை'ன்னு ஒரு பத்திரிகை 'போஸ்டர்' போட்டு விற்குது. இதெல்லாம் ரொம்ப தப்பு!"

– இரா. முத்துக்குமார்

படங்கள் : முகில்



மெய் சிலிர்த்தோம்!

✉ சுனாமி சோகத்தில் இருக்கும் இந்த நேரத்தில் கல்கி 'குஷி ஸ்பெஷல்' வழங்குவதை யாரும் வேண்டாம் என்று சொல்ல மாட்டார்கள். என்றாலும், யாருடைய மனமும் புண்படக் கூடாது என்ற நல்ல நோக்கத்துடன், ஒரு நல்ல கதை மூலம் எடுத்துக் காட்டிய ஆசிரியரின் செயலை நினைக்கும்போது பெருமையாக இருந்தது.
பெங்களூர், கே. விஸ்வநாத்.

பலே 'ஓ'!
பெங்களூர் - 21, ப. மூர்த்தி.

✉ 'பொங்கல் ரீலா'ன பொங்கல் ரிலீஸ் திரைப்படங்களின் ஸ்டில்களும், அதற்கு ரவுண்ட்ஸ் பாயின் கற்பனை டயலாக்குகளும் 'கரீல்'மா!
நெய்வேலி, எஸ். ஸ்ரீகாந்த்.

✉ எரிகிற வீட்டில் பிடுங்கின வரை லாபம் என்ற மனிதனின் மனப் போக்கை மட்டும் 'சுனாமி'யால் அடித்துச் செல்ல இயலவில்லை என்கிற தலையங்க எச்சரிக்கையை, தலைவர்கள் மனத்தில் நிறுத்திக் கொள்வது அவசியம் மட்டுமல்ல, அவசரமும்கூட!
திசையன்விளை, ஆர்.ஜி. அம்பிகைராமன்.

✉ 'கலகல தொடரை' அனுராதா ரமணன்தான் எழுதப் போகிறார் என்பதை யூகிக்க முடியாமல் நான் தோற்றாலும், 'மாம் ஃப்ரம் இண்டியா'வில் இரண்டறக் கலந்து கலகலப்பாகி விட்டேன்.
திருச்சி - 18, மதுரை முருகேசன்

✉ 'சுனாமி' என்ற ஆழிப் பேரலையை அறியாத இந்தியர்கள் நடுவில், பல ஆண்டுகளுக்கு முன்பே, நேரில் பார்த்தது போல மிகத் தெளிவாகத் தம் 'பொன்னியின் செல்வன்' கதையில் எழுதிய சிந்தனையாளர் கல்கியின் பேராற்றலை எண்ணி மெய்சிலிர்த்துப் போனோம்.
கோவில்பட்டி, பா. சீனிவாசன்.

✉ அதிகப் பக்கங்கள், அதே ரூபாய் விலை. பக்கத்துக்குப் பக்கம், படிக்கப் படிக்க ஒரே குஷி மயம்தான். சிடுமூஞ்சிக் காரர்களையும் சிரிக்க வைத்த பக்கங்களுக்குப் போட வேண்டும் ஒரு

✉ ஏன் சார், திருப்பாச்சிக்கு ரவுடி கெட்அப்பில் அரிவாள் வாங்கப் போன உங்க நிருபரை அதே தோற்றத்தில் நாங்களும் பார்க்கக் கூடாதா? ஏன் அவரது புகைப்படத்தைப் பிரசுரிக்க வில்லை?
சென்னை - 91, பாலு. சூர்யா.

✉ சுனாமி நிவாரண நிதிக்கு குஜராத் சிவப்பு விளக்குப் பகுதியிலிருந்து பெண்கள் நன்கொடை தந்துள்ளது குறித்த வாசகரின் கேள்விக்கு தராசு அளித்த பதிலைப் படித்து, கண்கள் பனித்தேன்!
திருவாரூர், ஆர். ராமசுப்ரமணி.

✉ அந்நியனின் 'குஷி' கொஞ்சம் கூட அந்நியமாகத் தெரியாமல், ரொம்ப அன்னியோன்னியமாகப் பிரதிபலித்தது!
ஈரோடு - 10,
பள்ளிப்பாளையம் ரஞ்சனிப்ரியன்.

✉ மெகா சீரியல்கள் பக்கம் போய்விட்ட தேவிபாலா, மீண்டும் சிறந்த சிறுகதை எழுத முடியுமா என்று நினைத்துக் கொண்டிருந்த என் போன்றோருக்கு, நல்லதொரு சிறுகதையைத் (ஜனனம்) தந்திருக்கிறார். பாராட்டுகள்.
சென்னை - 28,
டி.வி. ராதாகிருஷ்ணன்.

வட்டமேஜை


கல்கி வழங்கும்

சென்னை ஸ்டேஜ்

பிரிட்டிஷ் பீட்டரிங்!

ஹாய் கைஸ், ஹாய் கேர்ள்ஸ்...ஹே! போன வாரம் என்ன ஆச்சு தெரியுமா? டோனி ப்ளேர் என் மொபைலுக்கு போன் பண்ணி (அட ஆமாம்ப்பா), 'லஜ்ஜாவதி, பிரிட்டிஷ் கவுன் சிலுக்கு ஜல்தியா போ! அங்க உனக்கு ஒரு மியூசிக் ட்ரீட் ஏற்பாடு பண்ணியிருக்கேன்'னாரு. போகலேன்னா, சின்னப் பையனாட்டம் அடம் பிடிப்பாரேன்னு போய் எட்டிப் பார்த்தேன். வாவ்... வாட் எ சர்ப்ரைஸ்!

ஆலிவ் ஜூஸ் அப் படின்னு ஒரு மியூசிக் பேண்ட் காட்டுத்தனமா கலக்கிட்டிருந்தாங்க. தி பீட்டில்ஸ், பிங்க் ப்ளாய்ட், டீப் பர்பல்னு ஒரே பீட்டரிங் ஆல்பம்ஸ்தான். டோனாள் முர்ரேவும் கித் பீட்டர்ஸ“ம் எலக்ட்ரிக் கிடாரை எடுத்து வச்சிக்கிட்டு டொய்ங்ங் டொய்ங்குன்னு அழகா வாசிச்சாங்க. ஒருத்தர் எங்கேயிருந்தோ ஓடி வந்து, ட்ரம்மைப் போட்டு அடியோ அடின்னு அடிச்சார். ஒரே அலரல்ஸ்தான். அனுராதா அச்சு அசல் என்னை மாதிரியே அட்டகாசமா பாடினாங்க. (யா...யா...ஐ ஆம் எ ப்ரொஃபஷனல் சிங்கர்...!)




எனக்கு முன்னாடி வரிசையில் இருந்த ஜீன்ஸ் பார்ட்டிங்க, பிங்க் ப்ளாய்ட் ஆல்பம் வந்தவுடனே 'ஆத்தா' வந்த மாதிரி ஆட ஆரம்பிச்சுட்டாங்க. 'ஊஊஊ...'ன்னு டால்பி எஃபெக்ட்ஸ்ல சவுண்ட் வேற.

நான் கொஞ்ச நேரம் டான்ஸ் ஆடட்டுமா ப்ளீஸ்னு பர்மிஷனெல்லாம் கேக்காம, எல்லாரோட காலும் ஆட்டோமேட்டிக்கா ஆடிக்கிட்டிருந்துச்சு. சும்மா தேமேன்னு வேடிக்கை பார்த்தவங்களைக் கூட 'ஹே கமான் யா. லெட்ஸ் டான்ஸ்'னு தலையை ஆட்டி ஆட்டிக் கூப்பிட்டுக்கிட்டேயிருந்தாங்க.

அப்பப்பா... ஒரு வழியா ப்ரோகிராம் முடிஞ்சு வீட்டுக்குப் போகும்போது, காதுல 'கொய்ங்ங்' தவிர வேற ஒண்ணும் கேக்கலைப்பா....

- லலல்லா லஜ்ஜாவதி









* பிரசாந்த், கௌதமி...

டாக்டர் கமல்ஹாசன்!

வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள் பல, கௌரவ டாக்டர் பட்டங்கள் அளிக்க முன் வந்தும், அவற்றைத் தொடர்ந்து மறுத்து வந்தார் கமல். ''எம் ஊரில் எம்மவர் கையால் பெறுவதே பாராட்டும், பட்டமும்'' என்பதே கமலின் நிலைப்பாடு. அது அவர் வாழும் காலத்திலேயே, சத்யபாமா நிகர்நிலை பல்கலைக் கழகம் மூலம் நிறைவேறி விட்டது. வாழ்க! வளர்க! டாக்டர் கமல்!

* பட்டமளிப்பு விழாவில்...



* ஸ்ருதி கமல்

குதிரை மேல ஏறி! நான் கட்டப் போறேன் தாலி!

சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்துக்கு எதிரே, இந்த கலர்ஃபுல் குதிரை வண்டியைக் காண முடியும். முன்பெல்லாம் ஒரு குறிப்பிட்ட இனத்தைச் சார்ந்தவர்கள், திருமணத்தின்போது குதிரை மீது ஏறித்தான் தாலி கட்டுவார்களாம். அதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டு வந்த இந்த குதிரையும் வண்டியும், தற்போது மணமக்கள் ஊர்வலம், தேர்தல் பிரசாரம், வி.ஐ.பிக்கள் வரவேற்பு என்று பல விஷயங்களுக்கும் பயன்படத் துவங்கிவிட்டன. என்ன, கல்யாண ஊர்வலம் போக ஆசையா இருக்குதா? இதுக்கு தொகை அதிகமில்லை ஜென்டில்மேன்- ஜஸ்ட் ரூ. 1500/- அவ்ளோதான். ஓகே... ரெடியா?

- கலை



கல்கி வழங்கும் சென்னை ஸ்கேன்



• வைரவன்

"கவிதை வெளியிடுவது லாபகரமானது!"

இன்றைய தேதியில் தமிழ்நாட்டில் பெரும்பாலான பதிப்பகங்கள் கவிதைத் தொகுப்புகளை வெளியிட முன் வருவதில்லை. கவிதைக்கு மட்டுமேன் இந்தப் பாகுபாடு?

"யார் சொன்னது? கவிதைத் தொகுப்புகள் வெளியிடுவது மிக லாபகரமான தொழில்" என்கிறார் மிக அதிக கவிதைத் தொகுப்புகள் வெளியிட்டு வரும் குமரன் பதிப்பகம் வைரவன். தொடர்ந்து அவரே, இன்றைக்குக் கவிதைத் தொகுப்புகளை பதிப்பகங்கள் புறக்கணிப்பதற்கான காரணங்களையும் கூறினார்.

"85லிருந்து தமிழில் புதுக்கவிதைகளுக்கு பலத்த வரவேற்பு ஏற்பட்டு, பல தொகுப்புகள் வெளிவந்தன. நாளடைவில் வைரமுத்து, வாலி, மு. மேத்தாவைத் தவிர, வேறு யாரும் புதிதாகத் தோன்றாததால் தேக்கம் ஏற்பட்டு 90லிருந்து 2000ம் வருடம் வரைக்கும் கவிதைகளுக்கு தமிழில் வரவேற்பு கிட்டாமல் போய் விட்டது. அரசு நூலகங்களிலும் கவிதைகள் வாங்குவதை நிறுத்தி விட்டனர்."

சரி, உங்களால் மட்டும் எப்படி தொடர்ந்து கவிதைத் தொகுப்புகளாகக் கொண்டு வர முடிகிறது?

"திடீரென கொத்துக் கொத்தாகக் கிளம்பிய இளம் கவிஞர்களால், கடந்த நான்கு வருடங்களாக மிகப்பெரிய மாற்றம் ஏற்பட்டு, தமிழில் கவிதைப் புத்தகங்களுக்குப் புதுமலர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. இதை யாரும் உணர மறந்த நிலையில், நாங்கள் முந்திக் கொண்டோம். கடந்த சில வருடங்களில் பிரபல மற்றும் இளம் எழுத்தாளர்களின் முப்பத்தைந்துக்கும் மேற்பட்ட கவிதைத் தொகுப்புகளை வெளியிட்டுள்ளோம். தொடர்ந்து வெளியிடுவோம்.

சினிமாவில் பாடல் எழுதும் பாடலாசிரியர்கள், பெண் கவிஞர்கள், இளம் கவிஞர்கள் என அனைவரின் கவிதைகளையும் தொண்ணூறு சதவிகிதம் வாங்குவது இளைஞர்கள் மட்டுமே. குறிப்பாக, அதிலும் பெண்கள்தான் தத்தம் தோழியரோடு வந்து காதல் கவிதைகளை அள்ளிச் செல்கின்றனர்!" என்கிறார் புன்னகையோடு.

- செந்தில்

படம்: ஸ்ரீஹரி





ஹைக்கூவும், கொசுவும்!

1890 இல் மோஸாக்கா ஷிக்கியின் காலத்தில் ஹைக்கூ எனும் குட்டிக் குழந்தை 'குவா குவா' சப்தத்தோடு பிறந்தது.

பதினைந்தாம் நூற்றாண்டில் ஹைக்கூவின் பெயர் 'ரெங்கா'. அப்புறம் 'ஹைக்கை'. பிறகு 'ஹொக்கூ'. பின்பு 'ஹைக்கூ' என உலகின் சொத்தானது. முன்பு ஹைக்கூவில் வசந்தகாலம், பனிக்காலம், குளிர் காலம் என்று ஏதாவதொரு ஜப்பானியக் காலத்தைக் குறிக்கும் சொல் இருப்பது முக்கியம் என்று கருதப்பட்டது. இதனை 'கிகோ' என்பார்கள். செர்ரிப் பழம், பனி, கொசு என்று எல்லா கவிதைகளிலும் ஏதாவதொரு சொல் இருக்கும்.

பின்னர், இப்பிக்கிரோ என்பவர் கொசு இல்லாமலேயே ஹைக்கூ எழுதலாம் என்று விதிகளைத் தளர்த்தினார். தினம் தினம் வாழ்வில் நடக்கும் குட்டிக் குட்டி சுவாரஸ்யமான சம்பவங்களே ஹைக்கூவாக உருமாறியது - இதைப் போல...

குறுகிய குளிர் கால இரவு
வெட்டுக்கிளியின் முதுகில்
ஒரு துளி பனி.

கோ பயாஷி இஸ்ஸா என்பவர் கிட்டத்தட்ட 20,000 கவிதைகளை எழுதியிருக்கிறார். ஜப்பானிய நடைமுறை வார்த்தைகள் சிலவற்றை இவர் ஹைக்கூவில் புகுத்தினார். அவருடைய ஹைக்கூ ஒன்று...

ஏரியின் ஆழத்தில் அமைதியாக
ஒரு மேகம்
யாருமில்லாத குருவியே
வா, வந்து என்னோடு விளையாடு

- மருதன்

புதுசா ஒரு...

'டட்டட்.... டட்டட்'னு போற பைக் ஒண்ணு வாங்கி, பவுசா ஓட்டிக்கிட்டுப் போகணும்னு கனவுகளோட அலையற 'கால்நடை' 'சைக்கிள்' மக்கள் நிறையப் பேர்! 'பள பளா'ன்னு ஒரு பைக் போன வாரம்தான் புச்சா தமிழ்நாட்டுக்கு வந்திருக்கு! அது டி.வி.எஸ்ஸோட ஸ்டார்! 4 ஸ்ட்ரோக், 99.7 சிசி, 104 கிக், 16 லி பெட்ரோல் டாங்க்னு இதோட பயோ-டேட்டாவைச் சொல்லலாம். ஏம்ப்பா, லோடு, லோடா 'லோன்' கிடைக்குது. டக்குனு ஒரு வண்டியை வாங்கிப் போடுங்க!

கூட்டாஞ்சோறு!

10 ஆம் பக்கத்தில் கிரேஸியால் விமர்சிக்கப்பட்ட அந்தக் கவிதை, கவிதையே அல்ல...!!! இவ்விதழில் வெளியான பல கவிதைகளிலிருந்து பொறுக்கிய வார்த்தைகளை, பொருத்தமாகப் பொருத்தி உருவாக்கிய 'கூட்டாஞ்சோறு' உண்மையை (தலைப்பும் மூன்று கவிதைகளின் தலைப்பிலிருந்து சுடப்பட்டதுதான்) கிரேஸியிடம் சொன்னோம்.

கிரேஸி கமெண்ட்:

"**க**விதையா இது? எனக்கு நெற்றிக் கண்ணிருந்தா பிறைப்ரியனுக்கு யூஸ் பண்ணியிருப்பேன். பாவம் 'தருமி'ன்னு விட்டுட்டேன். மொத்தத்துல திருவிளையாடல் இது!

தொகுப்பு: **சிவசு**



தெளிவான அணுகுமுறை!



படம் : ஸ்ரீஹரி

எத்தனையோ பத்திரிகைகள் வருகின்றன. ஆனால், கல்கியில் மட்டும்தான் அணுகுமுறையில் நேர்மையும் தெளிவான நிலைப்பாட்டையும் எப்போதும் காண முடிகிறது. முக்கியமாக எந்தவித பயங்களுமற்று துணிந்து கல்கிக்கு பேட்டி தரலாம். சட்டென்று உதிர்த்துவிடும் வார்த்தைகளையே பரபரப்பாக்கி விடும் இதழ்களுக்கு மத்தியில் கல்கி அத்தவறை ஒருபோதும் செய்வதில்லை.

- கவிஞர் கனிமொழி

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / PMG (CCR) 572 / 03 - 05*
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 / 03 - 05 * Registered as a Newspaper in Srilanka